ஹரிஓம்.

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

# ஸ்ரீ மத் கம்ப ரா மா ய ண ம்.

## ௨-வது அயோத்தியாகாண்டம்.

### முதலாவது மந்திரப்படலம்.

கா ப் பு.

வானின்றிழிந்துவரம்பிகந்தமாபூதத்தின்வைப்பெங்கும்
ஊனுமுயிருமுணர்வும்போலுள்ளும்புறத்துமுளனென்ப
கூனுஞ்சிறியகோத்தாயுங்கொடுமையிழைப்பக்கோற்றுறந்து
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை. (௧)

நூல்.

மண்ணுறுமுரசினமழையினார்ப்புறப்
பண்ணுறுபடர்சினப்பருமயானையான்
கண்ணுறுகவரியின்கற்றைசுற்றுற
எண்ணுறுசூழ்ச்சியினிருக்கையெய்தினான். (௨)

புக்கபின்னிருபரும்பொருவில்சுற்றமும்
பக்கமும்பெயர்கெனப்பரிவினீக்கினான்
ஒக்கநின்றுலகளித்தியோகினெய்திய
சக்கரத்தவனெனத்தமியனாயினான். (௩)

சந்திரற்குவமைசெய்தராளவெண்குடை
அந்தரத்தளவுநின்றளிக்குமாணையான்
இந்திரற்கிமையவர்குருவையேய்ந்ததன
மந்திரக்கிழவரைவருகென்றேவினான். (௪)

பூவருபொலன்கழற்பொருவின்மன்னவன்
காவலிலாணையின்கடவுளாமெனத்
தேவருமுனிவருமுணருந்தேவர்கள்
மூவரினல்வராமுனிவந்தெய்தினான். (௫)

குலமுதற்றொன்மையுங்கலையின்குப்பையும்
பலமுதற்கேள்வியும்பயனுமெய்தினார்
நலமுதனலியினுநடுவுநோக்குவார்
சலமுதலறுத்தருந்தருமந்தாங்கினார். (௬)

வேறு.

உற்றதுகொண்டுமேல்வந்துறுபொருளுணருங்கோளார்
மற்றதுவினையின்வந்ததாயினுமாற்றலாற்றும்
பெற்றியர்பிறப்பின்மேன்மைப்பெரியவரரியநூலும்
கற்றவர்மானநோக்கிற்கவரிமாவனையநீரார். (௭)

காலமுமிடனுமேற்றகருவியுந்தெரியக்கற்ற
நூலுறநோக்கித்தெய்வநுணித்தறங்குணித்தமேலோர்
சீலமும்புகழ்க்குவேண்டுஞ்செய்கையுந்தெரிந்துகொண்டு
பால்வருமுறுதியாவுந்தலைவற்குப்பயக்குநீரார். (௮)

தம்முயிர்க்குறுதியெண்ணார்தலைமகன்வெகுண்டபோதும்
வெம்மையைத்தாங்கிநீதிவிடாதுநின்றுரைக்கும்வீரர்
செம்மையிற்றிறம்பல்செல்லாத்தேற்றத்தார்தெரியுங்காலம்
மும்மையுமுணரவல்லாரொருமையேமொழியுநீரார். (௯)

வேறு.

நல்லவுந்தீயவுநாடிநாயகற்
கெல்லையின்மருத்துவனியல்பினெண்ணுவார்
ஒல்லைவந்துறுவனவுற்றபெற்றியின்
தொல்லைநல்வினையெனவுதவுஞ்சூழ்ச்சியார். (௰)

அறுபதினாயிரரென்னுமாண்டகைக்
குறுதியிலொன்றிவற்குணர்வென்றுன்னலாம்
பெறலருஞ்சூழ்ச்சியர்திருவின்பெட்பினர்
மறிதிரைக்கடலெனவந்துசுற்றினார். (௧௧)

முறைமையினெய்தினர்முந்தியந்தமில்
அறிவனைவணங்கித்தம்மரசைக்கைதொழு
திறையிடைவரன்முறையேறியேற்றசொல்
துறையறிபெருமையானருளுஞ்சூடினார். (௧௨)

அன்னவரருளமைந்திருந்தவாண்டையில்
மன்னனுமவர்முகமரபினோக்கினான்
உன்னியதரும்பெறலுறுதியென்றுள
தென்னுணர்வனையநீரினிதுகேட்கென (௧௩)

# மந்திரப்படலம்.

வெய்யவன்குலமுதல்வேந்தர்மேலவர்
செய்கையினொருமுறைதிறம்பலின்றியே
வய்யம்யானாண்டவாண்டுங்கண்மாட்சியால்
அய்யமிலறுபதினாயிரம்மரோ. (௧௪)

கன்னியர்க்கமைவருங்கற்பின்மாநிலம்
தன்னையித்தகைதரத்தருமங்கைதர
மன்னுயிர்க்குறுவதேசெய்துவைகினேன்
என்னுயிர்க்குறுவதுஞ்செய்யவெண்ணினேன். (௧௫)

விரும்பியமூப்பெனும்வீடுகண்டயான்
இரும்பியலனந்தனுமிசைந்தயானையும்
பெரும்பெயர்க்கிரிகளும்பெயரத்தாங்கிய
அரும்பொறையினிச்சிறிதாற்றவாற்றலேன். (௧௬)

நங்குலக்குரவர்களவையினீங்கினார்
தங்குலப்புதல்வரேதரணி[illegible]போய்
வெங்குலப்புலன்கெடவீடுநண்ணினார்
எங்குலப்புறுவரென்றெண்ணிநோக்குகேன். (௧௭)

வெள்ளநீருலகினில்விண்ணினாகரில்
தள்ளரும்பகையெலாந்தவிர்த்துநின்றயான்
கள்ளரிற்கரந்துறைகாமமாதியா
உள்ளுறைபகைகளுக்கொதுங்கிவாழ்வெனோ. (௧௮)

பஞ்சிமென்றளிரடிப்பாவைகோல்கொள
வெஞ்சினத்தவுணர்தேர்பத்தும்வென்றுளேற்
கெஞ்சலின்மனமெனுமிழுதையேறிய
அஞ்சுதேர்வெல்லுமீதருமையாவதோ. (௧௯)

ஓட்டியபகைஞர்வந்துருத்தபோரிடைப்
பட்டவரல்லரேற்பரமஞானம்போய்த்
தெட்டவரல்லரேற்செல்வமீண்டென
விட்டவரல்லரேல்யாவர்வீடுளார். (௨௦)

இறப்பெனுமெய்ம்மையையிம்மையாவர்க்கும்
மறப்பெனுமதனின்மேற்கேடுமற்றுண்டோ
துறப்பெனுந்தெப்பமேதுணைசெயாவிடிற்
பிறப்பெனும்பெருங்கடல்பிழைக்கலாகுமோ. (௨௧)

அருஞ்சிறப்பமைவருந் துறவுமவ்வழி
தெரிஞ்சுறவெனமிருந்தெளிவுமாய்வரும்
பெருஞ்சிறகுளவெனிற்பிறவியென்னுமிவ்
விருஞ்சிறைகடத்தலினினியதியாவதே. (௨௨)

இனியதுபோலுமிவ்வரசையென்னுமோ
துனிவருநலனெனத்தொடர்ந்துதோற்கலா
நனிவரும்பெரும்பகைநவையினீங்கியத்
தனியரசாட்சியிற்றாழுமுள்ளமே. (௨௩)

உம்மையானுடைமையினுலகம்யாவையும்
செம்மையினோம்பிநல்லறமுஞ்செய்தனென்
இம்மையினுதவிநல்லிசைநடாயநீர்
அம்மையுமுதவுதற்கமையவேண்டுமால். (௨௪)

இழைத்ததீவினையையுங்கடக்கவென்னுதல்
தழைத்தபேரருளுடைத்தவத்தினுகுமேற்
குழைத்ததோரமுதுடைக்கோரநீக்கிவே
றழைத்ததீவிடத்தினையருந்தலாகுமோ. (௨௫)

கச்சையங்கடகரிக்கழுத்தின்கண்ணுறப்
பிச்சமுங்கவிகையும்பெய்யுமின்னிழல்
நிச்சயமன்றெனினெடிதுநாளுண்ட
எச்சிலைநுகருவதின்பமாகுமோ. (௨௬)

மைந்தரையின்மையில்வரம்பில்காலமும்
நொந்தனனிராமனென்னேனைநீக்குவான்
வந்தனனினியவன்வருந்தயான்பிழைத்
துய்ந்தனன்போவதோருறுதியெண்ணினேன். (௨௭)

இறந்திலன்செருக்களத்திராமன்றாதைதான்
அறந்தலைநிரம்பமூப்படைந்தபின்னரும்
துறந்திலனென்பதோர்சொல்லுண்டானபின்
பிறந்திலனென்பதிற்பிறிதுண்டாகுமோ. (௨௮)

பெருமகனென்வயிற்பிறக்கச்சீதையாந்
திருமகண்மணவினைதெரியக்கண்டயான்
அருமகணிறைகுணத்தவனிமாதெனும்
ஒருமகண்மணமுங்கண்டுவப்பதாயினேன். (௨௯)

நிவப்புறுநில்னொறுநிரம்புநங்கையுஞ்
சிவப்புறுமலர்மிசைச்சிறந்தசெல்வியும்
உவப்புறுகணவனையுயிரினெய்திய
தவப்பயன்றழைப்பதுதருமமன்றரோ. (௩0)

ஆதலாலிராமனுக்கரசைநல்கியிப்
பேதைமைதாய்வரும்பிறப்பைநீக்குவான்
மாதவந்தொடங்கியவனத்தைநண்ணுவேற்
கியாதுநங்கருத்தெனவினையகூறினான். (௩க)

வேறு.

திரலைடதோளினனிப்படிச்செப்பலுஞ்சிநதை
புரண்டுமீதிடப்பொங்கியவுவகையராங்கே
வெருண்டுமன்னவன்பிரிவெனும்விம்முறுநிலையால்
இரண்டுகன்றினுக்கிரங்குமோராவெனவிருந்தார். (௩உ)

அன்னராயினுமரசனுக்கதுவலதுறுதி
பின்னரில்லெனக்கருதியும்பெருநிலவரைப்பின்
மன்னுமன்னுயிர்க்கிராமனின்மன்னவரில்லை
என்னவுன்னியும்விதியதுவலியினுமிசைந்தார். (௩௩)

இருந்தமந்திரக்கிழவரதெண்ணமுந்தன்பாற்
பரிந்தசிந்தையம்மன்னவன்கருதியபயனும்
பொருந்துமன்னுயிர்க்குறுதியும்பொதுவுறநோக்கித்
தெரிந்துநான்மறைத்திசைமுகன்றிருமகன்செப்பும். (௩௪)

நிருபநின்குலமன்னவர்நேமிபண்டுருட்டிப்
பெருமையெய்தினர்யாவரேயிராமனைப்பெற்றார்
கருமமேயிதுகற்றுணர்ந்தோய்க்கினிக்கடவ
தருமமும்மிதுதக்கதேநினைத்தனைதகவோய். (௩௫)

புண்ணியந்தொடர்வேள்விகள்யாவையும்புரிநத
அண்ணலேயினியருந்தவமியற்றவுமடுக்கும்
வண்ணமேகலைநிலமகண்மற்றுனைப்பிரிந்து
கண்ணிழந்தில்ளெனச்செயுநீதந்தகழலோன். (௩௬)

புறத்துநாமொருபொருளினிப்புகல்கின்றதெவனோ
அறத்தின்மூர்த்திவந்தவதரித்தானென்பதல்லாற்
பிறத்தியாவையுங்காத்தவைபின்னுறத்துடைக்குந்
திறத்துமூவருந்திருத்தியதிருத்துமத்திறலோன். (௩எ)

பொன்னுயிர்த்தபூமடந்தையும்புவியெனுந்திருவும்
இன்னுயிர்த்துணையிவனெனநினைக்கின்றவிராமன்
தன்னுயிர்க்கென்கைபுல்லிதுதற்பயந்தெடுத்த
உன்னுயிர்க்கெனநல்லன்மன்னுயிர்க்கெலாமுரவோய். (௩௮)

வாரமென்னினிப்பகர்வதுவைகலுமனையான்
பேரினல்வருமிடையுறுபெயர்கின்றபயத்தால்
வீரநின்குலமைந்தனைவேதியர்முதலோர்
யாரும்யாஞ்செய்தநல்லறப்பயனெனவிருப்பார். (௩௯)

மண்ணினுந்நல்லன்மலர்மகள்கலைமகள்கலையூர்
பெண்ணினுந்நல்லள்பெரும்புகழ்ச்சனகியோநல்லள்
கண்ணினுந்நல்லன்கற்றவர்கற்றிலாதவரும்
உண்ணுநீரினுமுயிரினுமவனையேயுவப்பார். (௪௦)

மனிதர்வானவர்மற்றுளாரறங்கள்காத்தளிப்பார்
இனியிம்மன்னுயிர்க்கிராமனிற்சிறந்தவரில்லை
அனையதாதலினரசநிற்குறுபொருளறியிற
புனிதமாதவமல்லதொன்றில்லெனப்புகன்றான். (௪௧)

மற்றவன்சொன்னவாசகங்கேட்டலுமகனைப்
பெற்றவன்றினும்பிஞ்ஞகன்பிடித்தவப்பெருவில்
இற்றவன்றினுமெறிமழுவாளவனிழுக்கம்
உற்றவன்றினும்பெரியதோருவகையனானான். (௪௨)

அனையதாகியவுவகையன்கண்கணீரரும்ப
முனிவன்மாமலர்ப்பாதங்கண்முறைமையினிறைஞ்சி
இனியசொல்லினையெம்பெருமானருள்விழியின்
தனியனானிலந்தாங்கியதவற்கிதுதகாதோ. (௪௩)

எந்தைநீயுவந்திதஞ்சொலவெங்குலத்தரசர்
அந்தமில்லரும்பெரும்புகழவனியினிறுவி
முந்துவேள்வியுமுடித்துத்தம்மிருவினைமுடித்தார்
வந்ததவ்வருளெனக்குமென்றுரைசெய்துமகிழ்ந்தான். (௪௪)

பழுதின்மாதவன்பின்னொன்றும்பணித்திலனிருந்தான்
முழுதுமெண்ணுறுமந்திரக்கிழவர்தம்முகத்தால்
எழுதிதீட்டியவிங்கிதமிறைமகற்கேறத்
தொழுதகையினன்சுமந்திரன்முன்னின்றுசொல்லும். (௪௫)

# மந்திரப்படலம்.

உறத்தகும்மரசிராமற்கென்றுவக்கின்றமனத்தைத்
துறத்திநீயெனுஞ்சொற்சுடுகின்றுலத்தொல்லோர்
மறத்தல்செய்கிலாத்தருமத்தைமறப்பதும்வழக்கன்
றறத்தினூஉங்கினிக்கொடிதெனலாவதொன்றியாதே. (௪௬)

புரைசைமாக்கரிநிருபர்க்கும்புரத்துறைவோர்க்கும்
உரைசெய்மந்திரக்கிழவர்க்குமுனிவர்க்குமுள்ளம்
முரைசமார்ப்பின்முதன்மணிப்புதல்வனைமுறையால்
அரைசனுக்கிப்பின்னப்புறத்தடுத்ததுபுரிவாய். (௪௭)

என்றவாசகஞ்சுமந்திரனியம்பலுமிறைவன்
நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டி
நின்றுநின்றதுசெய்வதுவிரைவினினீயே
சென்றுகொண்டனைதிருமகள்கொழுநனையென்றான். (௪௮)

அலங்கன்மன்னனையடிதொழுதவன்மனமனையான்
விலங்கன்மாளிகைவீதியில்விரைவொடுசென்றான்
தலங்கள்யாவையும்பெற்றனன்றென்னத்தளிர்ப்பான்
பொலன்கொடேரொடுமிராகவன்றிருமனைபுக்கான். (௪௯)

பெண்ணினின்னமுதன்னவடன்னொடும்பிரியா
வண்ணவெஞ்சிலைக்குரிசிலுமருங்கினிதிருப்ப
அண்ணலாண்டிருந்தானழகருநறவெனத்தன்
கண்ணுமுள்ளமும்வண்டெனக்களிப்புறக்கண்டான். (௫0)

கண்டுகைதொழுதையவிக்கடலிடைக்கிழவோன்
உண்டோர்காரியம்வருகெனவுரைத்தனனெனலும்
புண்டரீகக்கட்புரவலன்பொருக்கெனவெழுந்தோர்
கொண்டல்போலவன்கொடிநெடுந்தேர்மிசைக்கொண்டான். ()

முறையின்மொய்ம்முகிலெனமுரசார்த்திடமடவார்
இறைகழன்றசங்கார்த்திடவிமையவரெங்கள்
குறைமுடிந்ததென்றார்த்திடக்குஞ்சியைச்சூழ்ந்த
நறையலங்கல்வண்டார்த்திடத்தேர்மிசைநடந்தான். (௫௨)

பணைநிரைந்தனபாட்டொலிநிரைந்தனவணங்கன்
கணைநிரைந்தனநாணொலிகறங்கினநிறைப்பேர்
அணைநிரைந்தனவறிவெனும்பெரும்புனலனையார்
பிணைநிரைந்தெனப்பரந்தனர்நாணமும்பிரிந்தார். (௫௩)

நீளெழுத்தொடர்வாயினுங்குழையொடுநெகிழ்ந்த
ஆளகத்தினோடாரமியத்தலத்தினுமுலர்ந்த
வாளரத்தவேல்வண்டொடுகெண்டைகண்மயங்கச்
சாளரத்தினும்பூத்தனதாமரைமலர்கள். (௫௪)

மண்டலந்தருமதிகெழுமழைமுகிலனைய
அண்டர்நாயகன்வளைபுனையகலத்துளலங்கல்
தொண்டைவாய்ச்சியர்நிறையொடுநாணொடுந்தொடர்ந்த
கெண்டையும்முளகிளைபயில்வண்டொடுங்கிடந்த. (௫௫)

சரிந்தபூவுளமழையொடுகலையுறத்தாழ்வ
பரிந்தபூவுளபணிக்கடைமுத்தினம்படைப்ப
எரிந்தபூவுளவிளாமுலையிழையிடைநுழைய
விரிந்தபூவுளமீனுடைவானின்றும்வீழ்வ. (௫௬)

வள்ளுறைகழித்தொளிர்வனவாணிமிர்மதியம்
தள்ளுறச்சுமந்தெழுதருந்தமனியக்கொம்பில்
புள்ளிநுண்பனிபொடிப்பனபொன்னிடைப்பொதிந்த
எள்ளுண்டப்பொரிவிரவினவுளசிலவிளநீர் (௫௭)

ஆயதவ்வழிநிகழ்தரவாடவரெல்லாம்
தாயைமுன்னியகன்றெனநின்றுயிர்தளிர்ப்பத்
தூயதம்பியுந்தானுமச்சுமந்திரன்றேர்மேல்
போயகங்குளிர்புரவலனிருந்துழிப்புக்கான். (௫௮)

மாதவன்றனைவரன்முறைவணங்கிவாளுழவன்
பாதபங்கயம்பணிந்தனன்பணிதலுமனையான்
காதல்பொங்கிடக்கண்பனியுகுத்திடக்கனிவாய்ச்
சீதைகொண்கனைத்திருவுறைமார்பகஞ்சேர்த்தான். (௫௯)

நலங்கொண்மைந்தனைத்தழுவினனென்பதென்னளிநீர்
நிலங்கடாங்குறுநிலையினநிலையிடநினைந்தான்
விலங்கலன்னதிண்டோளையுமெய்த்திருவிருக்கும்
அலங்கன்மார்பையுந்தனதுதோண்மார்புகொண்டளந்தான் ()

ஆண்டுதன்மருங்கிரீஇயுவந்தன்புறநோக்கிப்
பூண்டபோர்மழுவுடையவனெடும்புகழ்குறுக
நீண்டதோளையநிற்பயந்தெடுத்தயானின்னை
வேண்டியெய்திடவிரைவதொன்றுளதெனவிளம்பும். (௬௧)

ஐயசாலவுமலசினனரும்பெருமூப்பும்
வெய்யதாயதுவியலிடப்பெரும்பரம்விசித்த
தொய்யன்மாநிலச்சுமையுறுசிறைதுறந்தினியான்
உய்யலாவதோர்நெறிபுகவுதவிடவேண்டும். (௯௨)

உருமைமைந்தரைப்பெறுகின்றதுறுதுயர்நீங்கி
இருமையும்பெறற்கென்பதுபெரியவரியற்கை
தருமமன்னநிற்றந்தயான்றளர்வதுதகவோ
கருமமென்வயிற்செய்யிலென்கட்டுரைகோடி. (௯௩)

மைந்தநங்குலமரபினின்மணிமுடிவேந்தர்
தந்தமக்களேகடைமுறைநெடுநிலந்தாங்க
ஐந்தொடாகியமுப்பகைமருங்கறவகற்றி
உய்ந்துபோயினரூழிநின்றெண்ணினுமுலவார். (௯௪)

முன்னையூழ்வினைப்பயத்தினுமுற்றியவேள்விப்
பின்னையெய்தியநலத்தினுமரிதினிற்பெற்றேன்
இன்னம்யானிந்தவரசியலிடும்பையனென்றால்
நின்னையீன்றுளபயத்தினினிரம்புவதியாதோ. (௯௫)

ஒருத்தலைப்பரத்தொருத்தலைப்பங்குவினூர்தி
எருத்தினீங்குநின்றியல்வரக்குழைந்திடருழக்கும்
வருத்தநீங்கியவ்வரம்பறுதிருவினைமருவும்
அருத்தியுண்டெனக்கையவீதருளிடவேண்டும். (௯௬)

ஆளுநன்னெறிக்கமைவருமமைவினனாகி
காளுநங்குலநாயகனறைவிரிகமலத்
தாளினல்கியகங்கையைத்தந்துதந்தையரை
மீள்விவின்னுலகேற்றினனொருமகன்மேனாள். (௯௭)

மன்னரானவரல்லர்மேல்வானவர்க்கரசாம்
பொன்னின்வார்கழற்புரந்தரன்போலியரல்லர்
பின்னுமாதவந்தொடங்கினோன்பிழைத்தவர்பிறரார்
சொன்மறுமகற்பெற்றவரருந்துயர்துறந்தார். (௯௮)

அனையதாதலினருந்துயர்ப்பெரும்பரமரசன்
வினையினென்வயின்வைத்தனனெனக்கொளவேண்டாம்
புனையுமாமுடிபுனைந்திந்தநல்லறம்புரக்க
நினையல்வேண்டும்யானின்வயிற்பெறுவதீதென்றான். (௯௯)

தூதையப்பரிசுரைசெயத்தாமரைக்கண்ணன்
காதலுற்றிலனிகழ்ந்திலன்கடனிதென்றுணர்ந்தும்
யாதுகொற்றவனேவியததுசெயலன்றோ
நீதியெற்கெனநினைந்துமப்பணிதலைநின்றான். (எ0)

குருசில்சிந்தையைமனக்கொண்டகொற்றவெண்குடையான்
தருதியிவ்வரமெனச்சொலியுயிருறத்தழுவிச்
சுருதியன்னதன்மந்திரச்சுற்றமுஞ்சுற்றப்
பொருவின்மேருவும்பொருவருங்கோயில்போய்ப்புக்கான். (எக)

நிவந்தவந்தணர்நெடுந்தகைமன்னவர்நகரத்
துவந்தமைந்தர்கண்மடந்தையருழையர்பின்றொடரச்
சுமந்திரன்றடந்தேர்மிசைச்சுந்தரத்திரடோள்
அமைந்தமைந்தனுந்தன்னெடுங்கோயில்சென்றடைந்தான் (எஉ)

வென்றிவேந்தரைவருகவென்றுவணம்வீற்றிருந்து
பொன்றிணிந்ததோட்டரும்பெறலிலச்சினைபோக்கி
நன்றுசித்திரநளிர்முடிகவித்தற்குநல்வீர்
சென்றுவேண்டுவவரன்முறையமைக்கெனச்செப்ப. (எங)

உரியமாதவனுள்ளிதென்றமைந்தனன்விரைந்தோர்
பொருவிறேர்மிசையந்தணர்குழாத்தொடும்போக
நிருபர்கேண்மின்களிராமற்குநெறிமுறைமையினால்
திருவும்பூமியுஞ்சிந்தையிற்சிறந்தனவென்றான். (எச)

இறைவன்சொல்லெனுமின்னறவருந்தினர்யாரும்
முறையினின்றிலர்முகந்துறுகளியிடைமூழ்கி
நிறையுநெஞ்சிடையுவகைபோய்மயிர்வழிநிமிர
உறையும்விண்ணகமுடலொடுமெய்தினரொத்தார். (எரு)

ஒத்தசிந்தையருவகையரொருவர்க்கங்கொருவர்
தத்தமக்குற்றவாசெனத்தழைக்கின்றமனத்தர்
முத்தவெண்குடைமன்னனைமுறைமுறைதொழுதார்
அத்தனன்றெனவன்பினோடறிவிப்பதானார். (எசா)

வேறு.

மூவெழுமுறைமையெங்குலங்கண்முற்றுறப்
பூவெழுமழுவினாற்பொருதுபோக்கிய
சேவகன்சேவகஞ்செகுத்தசேவகற்
காவலிவ்வுலகமீதறனென்றாரரோ. (எஎ)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



வேறெலாமன்றும்விரும்பியின்னது
கூறினாரதுமனங்கொண்டகொற்றவன்
ஊறினுவகையையொளிக்குஞ்சிந்தையான்
மாறுமோரளவைசால்வாய்மைகூறினான். (௭௮)

மகவையினன்பினான்மயங்கியாளிது
புகலீர்புகன்றவிப்பொம்மல்வாசகம்
உகவையின்மொழிந்ததோவுள்ளநோக்கியோ
தகவெனநினைந்ததோதன்மையென்னென்றான். (௭௯)

இவ்வகையுரைசெயவிருந்தவேந்தவை
செவ்வியநின்றிருமகற்குத்தேர்ந்துளோர்
அவ்வவர்க்கவ்வவராற்றவாற்றுறும்
எவ்வமிலன்பினையினிதுகேளெனா, (௮௦)

தானமுந்தருமமுந்தகவுந்தன்மைசேர்
ஞானமுநல்லவர்ப்பேணுநன்மையும்
மானவவையநின்மகற்குவைகலும்
ஈனமில்செல்வம்வநதியைகவென்னவே. (௮௧)

ஊருணிநிறையவுமுதவுமாடியர்
பார்கெழுபழுமரம்பழுத்தற்றாகவும்
கார்மழைபொழியவுங்கழனிபாய்நதி
வார்புனல்பெருகவும்மறுக்கின்றார்கள்யார். (௮௨)

பனையவாநெடுங்கரப்பருமயானையாய்
நினையவாந்தன்மையைநினைந்தமன்னுயிர்க்
கெனையவாறன்பினனிராமனீண்டவற்
கனையவாறன்பினவவையுமென்றனர். (௮௩)

மொழிந்ததுகேட்டலுமொய்த்துநெஞ்சினைப்
பொழிந்தபேருவகையான்பொங்குகாதலான்
கழிந்ததோரிடரினான்களிக்குஞ்சிந்தையான்
வழிந்தகண்ணீரினான்மன்னன்கூறுவான். (௮௪)

செம்மையிற்றருமத்திற்செயலிற்றீங்கின்பால்
வெம்மையினொழுக்கத்தின்மெய்ம்மைமேவினீர்
என்மகனென்பதென்னெறியினீங்கிவன்
நும்மகன்கையடைநோக்குமீங்கென்றான். (௮௫)

அரைசரைவிடுத்தபின்றனைமன்னவன்
புரைதபுநாளொடுபொழுதுபோக்குவான்
உரைதெரிகணிதரையொருங்குகொண்டொரு
வரைபொருமண்டபமருங்குபோயினான். (அசு)

வேறு.

ஆண்டவன்னிலையாகவறிந்தவர்
பூண்டகாதலர்பூட்டவிழ்கொங்கையர்
நீண்டகூந்தலர்நீள்கலைதாங்கலர்
ஈண்டவோடினரிட்டிடையிற்றிலர். (அஎ)

ஆடுகின்றனர்பண்ணைடையின்றியே
பாடுகின்றனர்பார்த்தவர்க்கேகரம்
சூடுகின்றனர்சொல்லுவதோர்கிலர்
மாடுசென்றனர்மங்கையர்நால்வரே. (அஅ)

கண்டமாதரைக்காதலிநோக்கினாள்
கொண்டல்வண்ணனைநல்கியகோசலை
உண்டுபேருவகைப்பொருளன்னது
தொண்டைவாயினிர்சொல்லுமினீண்டென்றாள். (அகூ)

மன்னெடுங்கழல்வந்துவணங்கிடப்
பன்னெடும்பகல்பாரளிப்பாயென
நின்னெடும்புதல்வன்றனைநேமியான்
தொன்னெடும்முடிசூட்டுகின்றானென்றார். (கூ0)

சிறக்குஞ்செல்வமகற்கெனச்சிந்தையில்
பிறக்கும்பேருவகைக்கடல்பெட்புற
வறக்குமாவடவைக்கனலானதால்
துறக்குமன்னவனென்னுந்துணுக்கமே. (கூக)

அன்னளாயுமரும்பெறலாரமும்
நன்னிதிக்குவையுந்நனிநல்கித்தன்
துன்னுகாதற்சுமித்திரையோடும்போய்
மின்னுநேமியன்மேவிடமேவினாள். (கூஉ)

மேவிமென்மலராணிலமாதெனும்
தேவிமாரொடுந்தேவர்கள்யாவர்க்கும்
ஆவியும்மறிவும்முதலாயவன்
வாவிமாமலர்ப்பாதம்வணங்கினாள். (கூங)

என்வயிற்றருமைந்தற்கினியருள்
உன்வயிற்றதென்றுளுலகியாவையும்
மன்வயிற்றினடக்கியமாயனைத்
தன்வயிற்றினடக்குந்தவத்தினாள். (௬௪)

என்றிறைஞ்சியவ்விந்திரைகேள்வனுக்
கொன்றுநான்மறையோதியபூசனை
நன்றிழைத்தவனல்லதவர்க்கெலாம்
கன்றுடைப்பசுவின்கடனல்கினாள். (௬௫)

பொன்னுமாமணியும்புனைசாந்தமும்
கன்னிமாரொடுகாசினியீட்டமும்
இன்னயாவையுமீய்ந்தனளந்தணர்க்
கன்னதானமுமாடையுநல்கினாள். (௬௬)

நல்கிநாயகனுண்மலர்ப்பாதத்தைப்
புல்லிப்போற்றிவணங்கிப்புரையிலா
மல்லன்மாளிகைக்கோயில்வலங்கொளாத்
தொல்லைநோன்புகள்யாவுந்தொடங்கினாள். (௬௭)

(முதலாவது. மந்திரப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-௬௭)

## உ-வது. மந்தரைசூழ்ச்சிப்படலம்.

கடிகமழ்தாரினான்கணிதமாக்களை
முடிவுறநோக்கியோர்முதன்மைகூறிப்பின்
வடிமழுவாளவர்கடந்தமைந்தற்கு
முடிபுனைகடிகைநாண்மொழிமினென்றனன். (௧)

பொருந்துநாளானின்புதல்வற்கென்றனர்
திருந்தினாரன்னசொற்கேட்டசெய்கழல்
பெருந்திண்மால்யானையான்பிழைப்பில்செய்தவம்
வருந்தினான்வருகெனவசிட்டனெய்தினான். (௨)

நல்லியன்மங்கலநாளுநாளையவ்
வில்லியரேளவற்கீண்டுவேண்டுவ
ஒல்லையினியற்றிநல்லுறுதிவாய்மையும்
சொல்லுதிபெரிதெனத்தொழுதுசொல்லினான். (௩)

முனிவனுமுவகையுந்தானுமுந்துவான்
மனுகுலநாயகன்வாயன்முன்னினான்
அனையவன்வரவுகேட்டலங்கல்வீரனும்
இனிதெதிர்கொண்டுதன்னிருக்கையெய்தினான். (ச)

வேறு.

ஒல்கவிற்றவத்துத்தமனோதுநூல்
மல்குகேள்வியவள்ளலைநோக்கினான்
புல்குகாதற்புரவலன்போர்வலாய்
நல்குநாணிலநாளைநினக்கென்றான். (ரு)

என்றுபின்னுமிராமனைநோக்கினான்
ஒன்றுகூறுவதுண்டுறுதிப்பொருள்
நன்றுகேட்டுக்கடைப்பிடிநன்றெனத்
துன்றுதாரவற்சொல்லுதன்மேயினான். (சா)

கரியமாலினுங்கண்ணுதலானினும்
உரியதாமரைமேலுறைவானினும்
விரியும்பூதமோரைந்தினுமெய்யினும்
பெரியரந்தணர்பேணுதியுள்ளத்தால். (எ)

அந்தணாளர்முனியவுமாங்கவர்
சிந்தையாலருள்செய்யவுந்தேவரில்
நொந்துளாரையுநொய்துயர்ந்தாரையும்
மைந்தவெண்ணவரம்புமுண்டாங்கொலோ. (அ)

அனையராதலினையவிவ்வெய்யதீ
வினையினீங்கியமேலவர்தாளினைப்
புனையுஞ்சென்னியையாய்ப்புகழ்ந்தேத்துதி
இனியகூறிநின்றேயினசெய்தியால். (கூ)

ஆவதற்குமழிவதற்குமவர்
ஏவநிற்கும்விதியுமென்றாலினி
யாவதெப்பொருளிம்மையுமம்மையும்
தேவரைப்பரவுந்துணைசேர்த்ததே. (க0)

உருளுநேமியுமொண்கவரெஃகமும்
மருளில்வாணியும்வல்லவர்மூவர்க்கும்
தெருளுநல்லறமும்மனச்செம்மையும்
அருளுநீத்தபின்னாவதுண்டாகுமோ. (கக)

சூதுமுந்துறச்சொல்லியமாத்துயர்
நீதிமைந்தநினக்கிலையாயினும்
ஏதமென்பனயாவையுமெய்துதற்
கோதுமூலமவையெனவோர்தியே. (கஉ)

யாரொடும்பகைகொள்ளிலனென்றபின்
போரொடுங்குபுகழொடுங்காதுதன்
தாரொடுங்கல்செல்லாததுதந்தபின்
வேரொடுங்கெடல்வேண்டலுண்டாகுமோ. (கங)

கோளுமைம்பொறியுங்குறையப்பொருள்
நாளுங்கண்டுநெடுக்குறுநோன்மையின்
ஆளுமவ்வரசேயரசன்னது
வாளின்மேல்வருமாதவமைந்தனே. (கச)

உமைக்குநாதற்குமோங்குபுள்ளூர்திக்கும்
இமைப்பினாட்டமொரெட்டுடையானுக்கும்
சமைத்ததோள்வலிதாங்கினராயினும்
அமைச்சர்சொல்வழியாற்றுதலாற்றலே. (கரு)

என்புதோலுடையார்க்குமிலார்க்குந்தம்
வன்பகைப்புலன்மாசறமாய்ப்பதென்
முன்புபின்பின்றிமூவுலகத்தினும்
அன்பினல்லதோராக்கமுண்டாகுமோ. (கசா)

வய்யமன்னுயிராகவம்மன்னுயிர்
உய்யத்தாங்குமுடலன்னமன்னனுக்
கய்யமின்றியறங்கடவாதருள்
மெய்யினின்றபின்வேள்வியும்வேண்டுமோ. (கள)

இனியசொல்லினனீகையனெண்ணினன்
வினையன்றூயன்விழுமியன்வென்றியன்
நினையுநீதிநெறிகடவானெனில்
அனையமன்னற்கழிவுமுண்டாங்கொலோ. (கஅ)

சீலமல்லனநீக்கிச்செம்பொற்றுலைத்
தாலமன்னதனிநிலைதாங்கிய
ஞாலமன்னற்குநல்லவர்நோக்கிய
காலமல்லதுகண்ணுமுண்டாகுமோ. (ககூ)

ஓர்வினல்வினையூற்றத்திருரை
பேர்விறல்விதிபெற்றுளதென்றரோ
நீர்விலன்புசெலுத்தலிற்செவவியோர்
ஆர்வமன்னவற்காயுதமாவதே. (உ0)

தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய
வாமமேகலைமங்கையரால்வரும்
காமமில்லையெனிற்கடுங்கேடெனும்
நாமமில்லைநரகமுமில்லையே. (உக)

ஏனைநீதியினியனவையகப்
போனகற்குவிளம்பிப்புலன்கொளீஇ
ஆனவன்றொடுமாயிரமௌலியான
தானநண்ணினன்றத்துவநண்ணினான். (உஉ)

நண்ணிநாகணைவள்ளலைநானமறைப்
புண்ணியப்புனலாட்டிப்புலமையோா
எண்ணுநல்வினைமுற்றுவிதந்தேற்றினான்
வெண்ணிறத்ததருப்பைவிரித்தரோ. (உங)

வேறு.

ஏற்றிடவாண்டகைபினிதிருந்துழி
நூற்றடமார்பனுநொய்தினெய்தப்போய
ஆற்றலசாலரசனுக்கறிவித்தானவன்
சாற்றுகநகரணிசமைக்கவெனறனன். (உச)

ஏவினவள்ளுவரிராமனானையே
பூமகள்கொழுனனுய்ப்புனையுமௌலியிக்
கோநகரணிகெனக்கொட்டும்பேரியத்
தேவருங்களிகொளத்திரிந்துசாற்றினா. (உரு)

கவியமைகீர்த்தியக்காளைநாளையே
புவியமைமணிமுடிபுனையுமென்றசொல்
செவியமைநுகர்ச்சியவெனினுந்தேவர்தம்
அவியமுதன்னவர்நகருளார்க்கெலாம். (உசா)

ஆர்த்தனர்களித்தனராடிப்பாடினர்
வேர்த்தனர்தடித்தனர்சிலிர்த்துமெய்ம்மயிா
போர்த்தனர்மன்னனைப்புகழ்ந்துவாழ்த்தினர்
தூர்த்தனர்நீணிதிசொல்லினார்க்கெலாம். (உஎ)

திணிசுடரிரவியைத்திருத்துமாறுமப்
பணியிடைப்பள்ளியான்பரந்தமார்பிடை
மணியினைவேகடம்வகுக்குமாறும்போல்
அணிநகரணிந்தனரருத்திமாக்களே. (உஅ)

வெள்ளியகரியனசெய்யவேறுள
கொள்ளைவான்கொடிநிரைக்குழாங்கடோன்றுவ
கள்ளவிழ்கோதையான்செல்வங்காணிய
புள்ளெலாந்திருநகர்புகுந்தபோன்றவே. (உகூ)

மங்கையர்குறங்கெனவகுத்தவாழைகள்
அங்கவர்கழுத்தெனக்கமுகமார்ந்தன
தங்கொளிமுறுவலிற்றாமநான்றன
கொங்கையைநிகர்த்தனகனககும்பமே. (௩0)

முதிரொளியுயிர்த்தனமுடுகிக்காலையில்
கதிரவன்மேவொருகவின்கொண்டானென
மதிதொடநிவந்தனமகரதோரணம்
புதியனவலர்ந்தனபுதவராசியே. (௩க)

துணியுறுசெம்மணித்தூணநீறுதோய்
வணிதையோர்கூறினன்வடிவுகாட்டின
புனைதுகிலுறைதொறும்பொதிந்துதோன்றின
பணிபொதிகதிரெனப்பவளத்தூண்களே. (௩உ)

முத்தினின்முழுநிலவெறிப்பமொய்ம்மணிப்
பத்தியினிளவெயில்பரப்பநீலத்தின்
தொத்தினமிருள்வரத்தூண்டச்சோதிட
வித்தகர்விரித்தநாளொத்தவீதியே. (௩௩)

ஆடன்மான்றேர்க்குழாமவணிகாணிய
வீடெனுமுலகின்வீழ்விமானம்போன்றன
ஓடைமாக்கடகளிறுதயமால்வரை
தேடருங்கதிரொடுந்திரிவபோன்றவே. (௩௪)

வளங்கெழுதிருநகர்வைகும்வைகலும்
பளிங்குடைநெடுஞ்சுவரடுத்தபத்தியில்
கிளர்ந்தெரிசுடர்மணியிருளைக்கீறலால்
வளர்ந்திலபிறந்திலசெக்கர்வானமே. (௩ரு)

பூமழைபுனன்மழைபுதுமென்சுண்ணத்தின்
தூமழைதாளத்தின்றேமில்வெண்மழை
தாமிழைநெரிதலிற்றகர்ந்தபொன்மழை
மாமழைநிகர்த்தனமாடவீதியே. (௩௬)

காரொடுதொடர்மதக்களிறுசென்றன
வாரொடுதொடர்கழன்மைந்தராமெனத்
தாரொடுநடந்தனபிடிகடாழ்கலைத்
தேரொடுநடக்குமத்தெரிவைமாரினே. (௩௭)

ஏய்ந்தெழுசெல்வமுமழகுமின்பமும்
தேய்ந்திலவனையதுநேரிகலாமையால்
ஆய்ந்தனர்பெருகவுமமரரிம்பரில்
போந்தவர்போந்திலமென்னும்புந்தியால். (௩௮)

அந்நகரணிவுறுமமலைவானவர்
பொன்னகரியல்பெனப்பொலியுமெல்லையில்
இன்னல்செயிராவணனிழைத்ததீமைபோல்
துன்னருங்கொடுமனக்கூனிதோன்றினாள். (௩௯)

தோன்றியகூனியுந்துடிக்குநெஞ்சினாள்
ஊன்றியவெகுளியாளுலைக்குமுள்ளத்தாள்
கான்றெரிநயனத்தாள்கதிக்குஞ்சொல்லினாள்
மூன்றுலகினுக்குமோரிடுக்கண்மூட்டுவாள். (௪0)

தொண்டைவாய்க்கேகயன்றோகைகோயின்மேல்
மண்டினாள்வெகுளியின்மடித்தவாயினாள்
பண்டைநாளிராகவன்பாணிவில்லுமிழ்
உண்டையுண்டதனைத்தன்னுள்ளத்துள்ளுவாள். (௪௧)

நாற்கடற்படுமணிநளினம்பூத்ததோர்
பாற்கடற்படுதிரைப்பவளவல்லியே
போற்கடைக்கண்ணளிபொழியப்பொங்கணை
மேற்கிடந்தாடனைவிரைவினெய்தினாள். (௪௨)

எய்தியக்கேயன்மடந்தையேடவிழ
நொய்தலர்தாமரைநோற்றநோன்பினால்
செய்தபேருவமைசால்செம்பொற்சீறடி
கைகளிற்றீண்டினாள்காலக்கோளனாள்.* (௪௩)

தீண்டலுமுணர்ந்தவத்தெய்வக்கற்பினாள்
நீண்டகணனந்தருநீங்குகிற்றிலள்
மூண்டெழுபெரும்பழிமுடிக்கும்வெவ்வினை
தூண்டிடக்கட்டுரைசொல்லன்மேயினாள். (௪௪)

அணங்குவாள்விடவராவணுகுமெல்லையும்
குணங்கெடாதொளிவிரிகுளிர்வெண்டிங்கள்போல்
பிணங்குவான்பேரிடர்பிணிக்கநண்ணவும்
உணங்குவாயல்லைநீயுறங்குவாயென்றாள். (௪௫)

வெவ்விடமனையவள்விளம்பவேற்கணாள்
தெவ்வடுசிலைக்கையென்சிறுவர்செவ்வியர்
அவ்வவர்துறைதொறுமறந்திறம்பலர்
எவ்விடரெனக்குவந்தடுப்பதீண்டென்றாள். (௪௬)

பராவரும்புதல்வரைப்பயக்கயாவரும்
உராவருந்துயரைவிட்டுறுதிகாண்பரால்
விராவரும்புவிக்கெலாம்வேதமேயன
இராமனைப்பயந்தவெற்கிடருண்டோவென்றாள். (௪௭)

ஆழ்ந்தபேரன்பினாளனையகூறலும்
சூழ்ந்ததீவினைநிகர்கூனிசொல்லுவாள்
வீழ்ந்ததுநின்னலந்திருவும்வீய்ந்தது
வாழ்ந்தனள்கோசலைமதியினாலென்றாள் (௪௮)

அன்னவளவ்வுரையுரைப்பவாயிழை
மன்னவர்மன்னனேற்கணவன்மைந்தனேல்
பன்னரும்பெரும்புகழ்ப்பரதன்பார்தனில்
என்னிதன்மேலவட்கெய்தும்வாழ்வென்றாள். (௪௯)

ஆடவர்நகையுறவாண்மைமாசுறத்
தாடகையெனும்பெயர்த்தையலாள்படக்
கோடியவரிசிலையிராமன்கோமுடி
சூடுவனாளைவாழ்விதெனச்சொல்லினாள். (௫௦)

மாற்றமஃதுரைசெயமங்கையுள்ளமும்
ஆற்றல்சால்கோசலையறிவுமொத்ததால்
வேற்றுமையுற்றிலள்வீரன்றாதைபுக்
கேற்றவளிருதயத்திருக்கவேகொலாம். (௫௧)

ஆயபேரன்பெனுமளக்கரார்த்தெழத்
தேய்விலாமுகமதிவிளங்கித்தேசுறத்
தூயவளுவகைபோய்மிகச்சுடர்க்கெலாம்
நாயகமனையதோர்மாலைநல்கினாள். (௫௨)

தெழித்தனளார்ப்பினள்சிறுக்கண்டையுக
விழித்தனள்வைதனள்வெய்துயிர்த்தனள்
அழித்தனளழுதனளம்பொன்மாலையால்
குழித்தனணிலத்தையக்கொடியகூனியே. (௫௩)

வேதனைக்கூனிபின்வெகுண்டுநோக்கியப்
பேதையைப்பித்திநிற்பிறந்தசேயொடும்
நீதுயர்படுகெனநெடிதுன்மாற்றவள்
தாதியர்க்காட்செயத்தரிக்கிலேனென்றாள். (௫௪)

சிவந்தவாய்ச்சீதையுங்கரியசெம்மலும்
நிவந்தவாசனத்தினிதிருப்பநின்மகன்
அவந்தனாய்வெறுநிலத்திருக்கலானபோ
துவந்தவாறென்னிதற்குறுதியாதென்றாள். (௫௫)

மறந்திலள்கோசலையுறுதிமைந்தனும்
சிறந்தநற்றிருவினிற்றிருவுமெய்தினான்
இறந்திலனிருந்தனனென்செய்தாற்றுவான்
பிறந்திலன்பரதனீபெற்றதாலென்றாள். (௫௬)

சரதமிப்புவியெலாந்தம்பியோடுமிவ்
வரதனேகாக்குமேல்வரம்பில்காலமும்
பரதனுமிளவலும்பதியினீங்கிப்போய்
விரதமாதவஞ்செயவிடுதனன்றென்றாள். (௫௭)

பண்ணுறுகடகரிப்பரதன்பார்மகள்
கண்ணுறுகவினராயினிதுகாத்தவம்
மண்ணுறுமுரசுடைமன்னர்மாலையில்
எண்ணுறப்பிறந்திலனிறத்தனன்றென்றாள். (௫௮)

பாக்கியம்புரிந்திலாப்பரதன்றன்னைப்பண்
டாக்கியபொலன்கழலரசனாணையால்
தேக்குயர்கல்லதர்கடிதுசேணிடைப்
போக்கியபொருளெனக்கின்றுபோந்ததால். (௫௯)

மந்தரைபின்னரும்வலாக்துகூறுவாள்
அந்தரந்தீர்ந்துலகளிக்குநீரினல்
தந்தையுங்கொடியனற்றாயுந்தீயளால்
எந்தையேபரதனேயென்செய்வாயென்றாள். (௬௰)

அரைசரிற்பிறந்துபின்னரைசரில்வளர்ந்
தரைசரிற்புகுந்துபேரரைசியானநீ
கரைசெயற்கருந்துயர்க்கடலின்வீழ்கின்றாய்
உரைசெயக்கேட்கிலையுணர்தியோவென்றாள். (௬௧)

கல்வியுமிளமையுங்கணக்கிலாற்றலும்
வில்வினையுரிமையுமழகும்வீரமும்
எல்லையில்குணங்களும்பரதற்கேயது
புல்லிடையுகுத்தமுதேயும்போலென்றாள். (௬௨)

வேறு.

வாய்கயப்புறமந்தரைவழங்கியவெஞ்சொல்
காய்கனற்றலைநெய்சொரிந்தெனக்கதங்கனற்ற
கேகையர்க்கிறைதிருமகள்கிளரிள்வரிகள்
தோய்கயற்கண்கள்சிவப்புறநோக்கினள்சொல்லும். (௬௩)

வெயின்முறைக்குலக்கதிரவன்முதலியமேலோர்
உயிர்முதற்பொருடிறம்பினுமுறைதிறம்பாதோர்
மயின்முறைக்குலத்துரிமையைமனுமுதன்மரபைச்
செயிருறப்புலச்சிந்தையாலென்சொனாய்தீயோய். (௬௪)

எனக்குநல்லையுமல்லைநீயென்மகன்பரதன்
தனக்குநல்லையுமல்லையத்தருமமேநோக்கில்
உனக்குநல்லையுமல்லைவந்தூழ்வினைதூண்ட
மனக்குநல்லனசொல்லினைமதியிலாமனத்தோய். (௬௫)

பிறந்திறந்துபோய்ப்பெறுவதுமிழப்பதும்புகழேல்
நிறந்திறம்பினுநியாயமேதிறம்பினுநெறியின்
திறந்திறம்பினுஞ்செய்தவந்திறம்பினுஞ்செயிர்தீர்
மறந்திறம்பினும்வரன்முறைதிறம்புதல்வழக்கோ. (௬௬)

போதியென்னெதிர்நின்றுநின்புன்பொறிநாவைச்
சேதியாதுபொறுத்தனென்புறஞ்சிலரறியின்
நீதியல்லவுநெறிமுறையல்வுநினைந்தாய்
ஆதியாதலினறிவிலியடங்குதியென்றாள். (௬௭)

அஞ்சிமந்தரையகன்றிலளம்மொழிகேட்டும்
நஞ்சுதீர்க்கினுந்தீர்கிலாததுவலிந்தென்னத்
தஞ்சமேயுனக்குறுபொருளுணர்த்துலைகதவிரேன்
வஞ்சிபோலியென்றடியிணைசவீழ்ந்துரைவழங்கும். (௬௮)

மூத்தவற்குரித்தரசெனுமுறைமையினுலகம்
காத்தமன்னனிலிளையனன்றோகடல்வண்ணன்
ஏத்துநீண்முடிபுனைவதற்கிசைந்தனனென்றால்
பூத்தருஞ்செல்வம்பரதனைவிலக்குமாறெவனோ. (௬௯)

அறனிரம்பியவருளுடையருந்தவர்க்கேனும்
பெறலருந்திருப்பெற்றபின்சிந்தனைபிறிதாம்
மறவினைந்துமைவலிகிலராயினுமனத்தால்
இறலுறும்படியியற்றுவரிடையறாவின்னல். (௭௦)

புரியுந்தன்மகனரசெனிற்பூதலமெல்லாம்
விரியுஞ்சிந்தனைக்கோசலைக்குடைமையாமென்றால்
பரியுநின்குலப்புதல்வற்குமுனக்குமிப்பார்மேல்
உரியதென்னவளுதவியவொருபொருளல்லால். (௭௧)

தூண்டுமின்னலும்வறுமையுந்தொடர்தரத்துயரால்
ஈண்டிவந்துனையிரந்தவர்க்கிருநிதியவளை
வேண்டியீதியோவெள்குதியோவிம்மனையால்
மாண்டுபோதியோமறுதியோவெங்ஙனம்வாழ்தி. (௭௨)

சிந்தைசெய்கையிற்றிகைத்தனையினிச்சில்நாளில்
தந்தமின்மையுமெளிமையுநிற்கொண்டுதவிர்க்க
உந்தையுன்னையுன்கிளைஞர்மற்றுன்குலத்துள்ளோர்
வந்துகாண்பதுன்மாற்றவள்செல்வமோமதியாய். (௭௩)

காதலுன்பெருங்கணவனையஞ்சியக்கனிவாய்ச்
சீதைதந்தையுன்றந்தையைத்தெறுகிலனிராமன்
மாதுலன்னவனுந்தைக்குவாழ்வினியுண்டோ
பேதையுன்றுணையாருளர்பழிபடப்பிறந்தார். (௭௪)

மற்றுநுந்தைக்குவான்பகைபெரிதுளமறத்தார்
செற்றபோதிவர்சென்றுதவாரெனிற்செருவில்
கொற்றமென்பதொன்றெவவழியுண்டதுகூறாய்
சுற்றமுங்கெடச்சுடுதுயர்க்கடல்விழத்துணிந்தாய். (௭௫)

கெடுத்தொழிந்தனையுனக்கரும்புதல்வனைக்கிளர்நீர்
உடுத்தபாரகமுடையவனொருமகற்கெனவே
கொடுத்தபேரரசவன்குலக்கோமைந்தர்தமக்கும்
அடுத்ததம்பிக்குமாம்பிறர்க்காகுமோவென்றாள். (எசு)

தீயமந்தரையிவ்வுரைசெப்பலுந்தேவி
தூயசிந்தையுந்திரிந்ததுசூழ்ச்சியினிமையோர்
மாயையுமவர்பெற்றநல்லருளுண்மையாலும்
ஆயவந்தணரியற்றியவருந்தவத்தாலும். (எஎ)

அரக்கர்பாவமுமல்லவரியற்றியவறமும்
துரக்கநல்லருடுறந்தனடூய்மொழிமடமான்
இரக்கமின்மையன்றோவின்றிவ்வுலகங்களிராமன்
பரக்குந்தொல்புகழமுதினைப்பருகுகின்றதுவே. (எஅ)

அனையதன்மையளாகியகைகயளன்னம்
வினைநிரம்பியகூனியைவிரும்பினணோக்கி
எனையுவந்தனையினியையென்மகனுக்குமனையான்
புனையுநீண்முடிபெறும்படிபுகலுதியென்றாள். (எகூ)

மாழையுண்கணியுரைசெயக்கேட்டமந்தரையென்
தோழிவல்லளென்றுணைவல்லளென்றடிதொழுதாள்
தாழுமன்னிலையென்னுரைதலைநிற்பினுலகம்
ஏழுமேழுமுன்னொருமகற்காக்குவெனென்றாள். (அ0)

கோடியொன்றுனக்குரைசெய்வெனளிமணிநகையாய்
தோடிவர்ந்ததார்ச்சம்பரன்றொலைவுற்றவேலை
ஆடல்வென்றியானருளியவரமவையிரண்டும்
கோடியென்றனளுள்ளமுங்கோடியகொடியாள். (அக)

இருவரத்தினிலொன்றினாலரசுகொண்டிராமன்
பெருவனத்திடையேழிருபருவங்கள்பெயர்ந்து
திரிதரச்செய்தியொன்றினாற்செழுநிலமெல்லாம்
ஒருவழிப்படுமுன்மகற்குபாயமிதெனறாள். (அஉ)

உரைத்தகூனியையுவந்தனளுயிருறத்தழுவி
நிரைத்தமாமணியாரமுநிதியமுநீட்டி
இரைத்தவேலைசூழுலகமென்னொருமகற்கீந்தாய்
தனைக்குநாயகன்றாயினிநீயெனத்தணியா. (அங)

நன்றுசொல்லினைநம்பியைநளிர்முடிசூட்டல
துன்றுகானத்திலிராமனைததுரத்தலிவவிரண்டும்
அன்றதாமெனிலரசன்முனைருயிர் துறந்து
பொனறிநீஙகுதலபுரிவென்யான்போதிநீயென்றாள். (அச)

கூனிபோனபின்குலமலர்கருப்பைநின்றிழிநதாள்
சோனைவார்குழற்கற்றையிறசொருகியமாலை
வானவார்மழைநுழைதருமதிபிதிர்ப்பாள்போல
தேனவாவுறுவண்டினமலமரச்சிதைத்தாள். (அரு)

விளையுந்தன்புகழ்வல்லியைவேரறுத்தென்னக
கிளைகொண்மேகலைசிந்தினள்கிண்கிணியோடும
வளைதுறந்தனண்மதியினின்மறுத்துடைப்பாளபோல
அளகவாணுதலருமபெறற்றிலதமுமழிததாள. (அசு)

தாவின்மாமணிக்கலன்மற்றுந்தனிததனிச்சிதறி
நாவிநனகுழலுணிலந்தைவரப்பரப்பிக்
காவியுண்கணகளஞ்சனங்கான்றிடக்கலுழாப்
பூவுதிாநதகோம்பெனப்புவியிசைபபுரணடாள. (அஎ)

நவவிவீழ்நதெனநாடகமயிலுயினறெனனக்
கவவைகூர்தரச்சனகியாங்கடிகமழ்கமலநத
தவவைநீங்குமெனறயோத்திவநதடைநதவமமடநதை
தவவையாமெனக்கிடநதனள்கைகயனறனையை. (அஅ)

(உ-வது. மநதரைசூழ்சசிபபடலம-முறறிறறு. ஆ திருவிருததம - ாஅகு)

## ௩-வது. கைகேசிசூழ்வினைப்படலம்.

நாழிகைகஙகுலினள்ளடைநதபினறை
யாழிசையஞ்சியவஞ்சொலேழைகோயில்
வாழியவெனறயின்மன்னர்துனனவநதான்
ஆழிநெடுங்கைமடங்கலாளியன்னான். (க)

வாயலின்மன்னர்வணஙகிநிறபவநதாங
கேயினசெய்யுமடந்தைமாரொடேகிப்
பாயறுறந்தபடைததடங்கண்மென்றோள
ஆயிழைதன்னையடைநதவாழிமனனன்.

அடைந்தவனுக்கியரந்தையென்கொல்வந்து
தொடர்ந்ததெனத்துயர்கொண்டுசோருநெஞ்சன்
மடந்தையைமானையெடுக்குமானையேபோல்
தடங்கைகள்கொண்டுதழீஇயெடுக்கலுற்றான். (௩)

நின்றுதொடர்ந்தநெடுங்கைதம்மைநீக்கி
மின்றுவள்கின்றதுபோலமண்ணில்வீழ்ந்தாள்
ஒன்றுமியம்பலணீடுயிர்க்கலுற்றாள்
மன்றலருந்தொடைமன்னனாவியன்னாள். (௪)

அன்னதுகண்டவலங்கன்மன்னனஞ்சி
என்னைநிகழ்ந்ததிஞ்ஞாலமேழில்வாழ்வார்
உன்னையிகழ்ந்தவர்மாள்வருற்றதெல்லாம்
சொன்னபினென்செயல்காண்டிசொல்லிடென்றான். (௫)

வண்டுளர்தாரவன்வாய்மைகேட்டமங்கை
கொண்டநெடுங்கணிருவிகொங்கைகோப்ப
உண்டுகொலாமருளென்கணுன்கணுக்கில்
பண்டையவின்றுபரிந்தளித்தியென்றாள். (௬)

கள்ளவிழ்கோதைகருத்துணர்ந்தமன்னன்
வெள்ளநெடுஞ்சுடர்மின்னின்மின்னநக்கான்
உள்ளமுவந்துளசெய்வனொன்றும்லோபேன்
வள்ளலிராமனுன்மைந்தனாணையென்றான். (௭)

ஆன்றவனவ்வுரைகூறவையமில்லாள்
தோன்றியபேரவலந்துடைத்ததுண்டேல்
சான்றிமையோர்குலமாகமன்னநீயன்
றேன்றவரங்களிரண்டுமீதியென்றாள். (௮)

வரங்கொளவித்துணைமன்னுமல்லலெய்தி
இரங்கிடவேண்டுவதீவனேகொளென்பால்
பரங்கெடவிப்பொழுதேபகர்ந்திடென்றான்
உரங்கொண்மனத்தவள்வஞ்சமோர்கிலாதான். (௯)

ஏயவரங்களிரண்டினொன்றினாலென்
சேயரசாள்வதுசீதைகேள்வனொன்றால்
போய்வனமாள்வதெனப்புகன்றுநின்றாள்
தீயவையாவையினுஞ்சிறந்ததீயாள். (௧௦)

நாகமெனும்கொடியாடனாவினீய்ந்த
சோகவிடந்தொடரத்துணுக்கமெய்தா
ஆகமடங்கலும்வெந்தழிந்தராவின்
வேகமடங்கியவேழமென்னவீழ்ந்தான். (கக)

பூதலமுற்றதனிற்புரண்டமன்னன்
மாதுயரத்தினையாவர்சொல்லவல்லார்
வேதனைமுற்றிடவெந்துவெந்துகொல்லன்
ஊதுலையிற்கனலென்னவெய்துயிர்த்தான். (கஉ)

உலர்ந்ததுநாவுயிரோடலுற்றதுள்ளம்
புலர்ந்ததுகண்கள்பொடித்தபொங்குசோரி
சலந்தலைமிக்கதுதக்கதென்கொலென்றென்
றலந்தலையுற்றவரும்புலன்களைந்தும். (கங)

மேவிநிலத்திலிருக்குநிற்கும்வீழும்
ஓவியமொப்பவுயிர்ப்படங்கியோயும்
பாவியையுற்றெதிர்பற்றியெற்றவெண்ணும்
ஆவிபதைப்பவலக்கணெய்துகின்றான். (கச)

பெண்ணெனவுற்றபெரும்பழிக்குநாணும்
உண்ணிறைவெப்பொடுயிர்த்துயிர்த்துலாவும்
கண்ணினினோக்குமயர்க்குமிக்ககைவேல்
புண்ணுழைதைக்கவுழைக்குமானைபோல்வான். (கரு)

கம்பநெடுங்களியானையன்னமன்னன்
வெம்பிவிழுந்தெழும்விம்மல்கண்டுவெய்துற்
றும்பர்நடுங்கினரூழிபேர்வதொத்த
தம்பனகண்ணவருள்ளமன்னதேயால். (கசு)

அஞ்சலனையனதல்லல்கண்டுமுள்ளம்
நஞ்சிலணாணிலளென்னநாணமாமால்
வஞ்சனைபண்டுமடந்தைவேடமென்றே
தஞ்செனமாதரையுள்ளலார்கடக்கோர். (கஎ)

இந்நிலைநின்றவடன்னையெய்தநோக்கி
நெய்ந்நிலைவேலவனீதிசைத்ததுண்டோ
பொய்ந்நிலையோர்கள்புணர்த்தவஞ்சமுண்டோ
அந்நிலைசொல்லெனதாணையுண்மையென்றான். (கஅ)

திசைத்ததுமில்லையெனக்குவர் துதியோர்
இசைத்துமில்லைமுனீந்தவிவ்வரங்கள்
நசைப்பரியோய்தரினின்றுகொள்வெனன்றேல்
வசைத்திறநின்வயின்வைத்துமாள்வெனென்றாள். (கக)

இந்தநெடுஞ்சொலவ்வேலைமைழகூறுமுன்னே
வெந்தகொடும்புணில்வேலனுழைந்ததொப்பச்
சிந்தைதிரிந்துதிகைத்தயர்ந்துவீழ்ந்தான்
மைந்தனலாதுயிர்வேறிலாதமன்னன். (உ0)

ஆகொடியாயெனுமாவிகாலுமந்தோ
ஓகொடிதேயறமென்னுமுண்மையொன்றும்
சாகவெனுவெழுமெய்தளாடிவீழும்
மாகமுநாகமுமண்ணும்வென்றவாளான். (உக)

நாரியரில்லையிஞ்ஞாலமேழுமென்னக்
கூரியவாள்கொடுகொன்றுநீக்கியானும்
பூரியரெண்ணிடைவீழ்வனென்றுபொங்கும்
வீரியர்வீரம்விழுங்கிநின்றவேலான். (உஉ)

கய்யொடுகையைப்புடைக்கும்வாய்கடிக்கும்
பொய்யுரைகுற்றமெனப்புழுங்கிவாடும்
நெய்யெரியுற்றெனநெஞ்சழிந்துசோரும்
வய்யகமுற்றுநடந்தவாய்மைமன்னன். (உங)

ஓறுப்பினுமந்தரமுண்மையொன்றுமோவா
மறுப்பினுமந்தர்மென்றுவாய்மைமன்னன்
பொறுப்பினுமிந்நிலைபோகிலாளைவாளால்
இறுப்பினுமாவதிரப்பதென்றெழுந்தான். (உச)

வேறு.

கோன்மேற்கொண்டுங்குற்றமகற்றிக்குறிகொண்டார்
போன்மேலுற்றதுண்டெனின்ன்றாம்பொறையென்னாக்
கான்மேல்வீழ்ந்தான்கந்துகொல்யானைக்களிமன்னர்
மேன்மேல்வந்துமுந்திவணங்கிமிடைதாளான். (உரு)

கொள்ளாநின்சேயிவ்வரசன்னான்கொண்டாலும்
நள்ளாதிந்தநானிலஞாலந்தனிலென்றும்
உள்ளாரெல்லாமோதவுவக்கும்புகழ்கொள்ளாய்
எள்ளாநிற்கும்வன்பழிகொண்டென்பயனென்றான். (உசு)

வானோர்கொள்ளார்மண்ணவருய்யாரினிமற்றென்
ஏனோர்செய்கையாரொடுநீயிவ்வரசாள்வாய்
யானேரொல்லக்கொள்ளவிசைந்தான்முறையாலே
தானேநல்குமுன்மகனுக்குந்தரையென்றான். (உஎ)

கண்ணேவேண்டுமென்னினுமீயக்கடவேனென்
உண்ணேராவிவேண்டினுமின்றேயுனதன்றோ
பெண்ணேவண்மைக்கைகயன்மானேபெறுவாயேல்
மண்ணேகொண்ணீமற்றையதொன்றுமறவென்றான். (உஅ)

வாய்தந்தேனென்றேனினியானேவதுமாற்றேன்
நோய்தந்தென்னைநோவனசெய்துநுவலாதே
தாய்தந்தென்னத்தன்னையிரந்தாற்றழல்வெங்கட்
பேய்தந்தீயுநீயிதுதந்தாற்பிழையாமோ. (உகூ)

இன்னேயின்னேபன்னியிரந்தானிகல்வேந்தன்
தன்னேரில்லாத்தீயவளுள்ளந்தடுமாறாள்
முன்னேதந்தாயிவ்வரநல்காய்முனிவாயேல்
என்னேமன்னாயாருளர்வாய்மைக்கினியென்றாள். (௩0)

அச்சொற்கேளாவாவிபுழுங்காவயர்கின்றான்
பொய்ச்சொற்கேளாவாய்மொழிமன்னன்பொறைகூர
நச்சுத்தீயேபெண்ணுருவன்றோவெனநாணு
முச்சத்தார்போற்பின்னுமிரந்தேமொழிகின்றான். (௩க)

நின்மகனாள்வானீயினிதாள்வாய்நிலமெல்லாம்
உன்வயமாமேயாளுதிதந்தேனுரைகுன்றேன்
என்மகனென்கண்ணென்னுயிரெல்லாவுயிர்கட்கும்
நன்மகனிந்தநாடிறவாமைநயவென்றான். (௩உ)

மெய்யேயென்றன்வேரறநூறும்வினைநோக்கி
நய்யாநின்றேனுவுமுலர்ந்தேனளினம்போல்
கய்யாநின்றென்கண்ணெதிர்நின்றுங்கழிவானேல்
உய்யேனங்காயுன்னபயம்மென்னுயிரென்றான். (௩௩)

இரந்தான்சொல்லுமின்னுரைகொள்ளாண்முனிவெஞ்சாள்
மரந்தானென்னுநெஞ்சினளுள்வசைபாராள்
சரந்தாவில்லாய்தந்தவரத்தைத்தவிர்கென்றல்
உரந்தானல்லானல்லறமாமோவுரையென்றாள். (௩ச)

கொடியாளின்னகூறினள்கூறக்குலவேந்தன்
முடிசூடாமற்காத்தனுமொய்கானிடைமெய்யே
நெடியானீங்கநீங்குமென்னாவியினியென்றே
இடியேறுண்டமால்வரைபோன்மண்ணிடைவீழ்ந்தான். (௩௫)

வீழ்ந்தான்வீழாவெந்துயரத்தின்கடல்வெள்ளத்
தாழ்ந்தானாழாவக்கடலுக்கோர்கரைகாணான்
சூழ்ந்தாடுன்பஞ்சொற்கொடியாள்சொற்கொடுநெஞ்சம்
போழ்ந்தானுள்ளப்புன்மையைநோக்கிப்புலர்கின்றாள். (௩௬)

ஒன்றாநின்றவாருயிரோடுமுயிர்கேள்வர்
பொன்றாமுன்னம்பொன்றினரென்னும்புகழல்லால்
இன்றோர்காறுமெல்வளையார்தம்மிறையோரைக்
கொன்றாரில்லைக்கொல்லுதியோநீகொடியாளே. (௩௭)

ஏவம்பாராயினமுறைநோக்காயறமென்னாய்
ஆவென்பாயோவல்லைமனத்தாலருள்கொன்றாய்
நாவம்பாலென்னாருயிருண்டாயினிஞாலம்
பாவம்பாராதின்னுயிர்கொள்ளப்படுகின்றாய். (௩௮)

ஏண்பாலோவாநாண்மடமச்சமிவையேதம்
பூண்பாலாகக்காண்பவர்நல்லார்புகழ்பேணி
நாண்பாலோராநங்கையர்தம்பாலனுகாரே
ஆண்பாலாரேபெண்பாலாரோடடைவம்மா. (௩௯)

மண்ணாள்கின்றாராகிவலத்தான்மதியால்வைத்
தெண்ணாநின்றார்யாரையுமெல்லாவிகலாலும்
விண்ணோர்காறும்வென்றவெனக்கென்மனைவாழும்
பெண்ணால்வந்ததந்தரமென்னப்பெறுவேனோ. (௪0)

என்றென்றுன்னும்பன்னியிரக்குமிடர்தோயும்
ஒன்றொன்றொவ்வாவின்னலுழக்குமுயிருண்டோ
இன்றின்றென்னும்வண்ணமயங்குமிடியும்பொன்
குன்றொன்றொன்றோடொன்றியதென்னக்குவிதோளான். (௪௧)

ஆழிப்பொற்றேர்மன்னவனிவ்வாறயர்வெய்திப்
பூழிப்பொற்றோண்முற்றுமடங்கப்புரள்போழ்தில்
ஊழிற்பொய்த்தாலென்னுரையின்றேயுயிர்மாய்வென்
பாழிப்பொற்றார்மன்னவவென்றாள்பசையற்றாள். (௪௨)

அரிந்தான்முன்னோர்மன்னவனன்றேயருமேனி
வரிந்தார்வில்லார்வாய்மைவளர்ப்பான்வரநல்கிப்
பரிந்தாலென்றுமென்றனள்பாயுங்கனலேபோல்
எரிந்தாறாதேயின்னுயிருண்ணுமெரியன்னாள். (௪௩)

வீய்ந்தாளேயிவ்வெய்யவளென்னுமிடல்வேந்தன்
ஈய்ந்தேனீய்ந்தேனிவ்வரமென்சேய்வனமாள
மாய்ந்தேநான்போய்வானுலகாள்வேன்வசைவெள்ளம்
நீய்ந்தாய்நீய்ந்தாய்நின்மகனோடுநெடிதென்றான். (௪௪)

கூறாமுன்னங்கூறுபடுக்குங்கொலைவாளின்
ஏறாமென்னும்வன்றுயராகத்திடைமூழ்கத்
தேறானாகிச்செய்கைமறந்தான்செயன்முற்றி
ஊறாநின்றசிந்தையினாளுந்துயில்வுற்றாள். (௪௫)

வேறு.

சேணுலாவியநாளெலாமுயிரொன்றுபோல்வனசெய்துபின்
ஏணுலாவியதோளினானிடரெய்தவொன்றுமிரங்கிலா
வாணிலாநகைமாதராள்செயல்கண்டுமைந்தர்முனிற்கவும்
நாணினாளெனவேகினாணளிர்கங்குலாகியநங்கையே (௪௬)

எண்டருங்கடைசென்றயாமமியம்புகின்றனவேழையால்
வண்டுதங்கியதொங்கன்மார்பன்மயங்கிவிம்மியவாறெலாம்
கண்டுநெஞ்சுகலங்கியஞ்சிறையானகாமர்துணைக்கரம்
கொண்டுதம்வயிறெற்றியெற்றிவிளிப்பபோன்றனகோழியே. ௪௭

தோய்கயத்துமரத்துமென்சிறைதுள்ளிமீதெழுபுள்ளெலாம்
தேய்கையொத்தமருங்குன்மாதர்சிலம்பினின்றுசிலம்புவ
கேகயத்தரசன்பயந்தவிடத்தையின்னதோர்கேடுசூழ்
மாகயத்தியையுட்கொதித்துமனத்துவைவனபோன்றவே. (௪௮)

சேமமென்பனபற்றியன்புதிருந்தவின்றுயில்செய்தபின்
வாமமேகலைமங்கையோடுவனத்துள்யாருமறக்கிலா
நாமநம்பிநடக்குமென்றுநடுங்குகின்றமனத்தவாய்
யாமுமிம்மணிறத்துமென்பனபோலெழுந்தனயானையே. (௪௯)

சிரித்தபங்கயமொத்தசெங்கணிராமனைத்திருமாலையக்
கரிக்கரம்பொருகைத்தலத்துயர்காப்புநாணணிதற்குமுன்
வரித்ததண்கதிர்முத்ததாகியிம்மண்ணனைத்துநிழற்றமேல்
விரித்தபந்தர்பிரித்ததாமெனமீனொளித்தனவானமே. (௫௦)

நாமவிற்கையிராமனைத்தொழுநாளடைந்தநமக்கெலாம்
காமவிற்குடைகங்குன்மாலைகழிந்ததென்பதுகற்பியாத்
தாமொலித்தனபேரியவ்வொலிசாரன்மாரிதழங்கலான்
மாமயிற்குலமென்னமுன்னமலர்ந்தெழுந்தனர்மாதரே. (௫௧)

இனமலர்க்குலம்வாய்விரித்திளவாசமாருதம்வீசமுன்
புனைதுகிற்கலைசோரநெஞ்சுபுழுங்கினார்சிலபூவைமார்
மனமனுக்கம்விடத்தனித்தனிவள்ளலைப்புணர்கள்ளவன்
கனவினுக்கிடையூறடுக்கமயங்கினார்சிலகன்னிமார். (௫௨)

சாயடங்கநலங்கலந்துதயங்குதன்குலநன்மையும்
போயடங்கநெடுங்கொடும்பழிகொண்டரும்புகழ்சிந்துமத்
தீயடங்கியசிந்தையாள்செயல்கண்டுசீரியநங்கைமார்
வாயடங்கினவென்னவந்துகுவிந்தவண்குமுதங்களே. (௫௩)

மொய்யராகநிரம்பவாசைமுருங்குதீயின்முழங்கமேல்
வய்யராவியமாரன்வாளியும்வாணிலாநெடுவாடையும்
மெய்யராவிடவாவிசோரவெதும்பும்மாதர்தமின்செவிப்
பய்யராநுழைகின்றபோன்றனபண்கனிந்தெழுபாடலே. (௫௪)

ஆழியான்முடிசூடுநாளிடையானபாவியிதோரிரா
ஊழியாயினவாறெனாவுயர்போதின்மேலுறைபேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்தகண்ணுமெங்கண்மனங்களும்
வாழுநாளிதெனாவெழுந்தனர்மஞ்சுதோய்புயமஞ்சரே. (௫௫)

ஐயுறுஞ்சுடர்மேனியானெழில்காணமூளுமவாவினால்
கொய்யுறுங்குலமாமலர்க்குவைநின்றெழுந்தனர்கூர்மைகூர்
நெய்யுறுஞ்சுடர்வேனெடுங்கண்முகிழ்த்துநெஞ்சினினைப்பொடும்
பொய்யுறங்குமடந்தைமார்குழல்வண்டுபொம்மெனவிம்மவே. ௫௬

ஆடகந்தருபூண்முயங்கிடவஞ்சியஞ்சியநந்தரால்
ஏடகம்பொதிதார்பொருந்திடயாமபேரியிசைத்தலால்
சேடகம்புனைகோதைமங்கையர்சிந்தையிற்செறிதிண்மையால்
ஊடல்கண்டவர்கூடல்கண்டிலர்நையுமைந்தர்களுய்யவே. (௫௭)

தழையொலித்தனவண்டொலித்தனதாரொலித்தனபேரியாம்
முழவொலித்தனதேரொலித்தனமுத்தொலித்தெழுமல்குலார்
இழையொலித்தனபுள்ளொலித்தனயாழொலித்தனவெங்கணும்
மழையொலித்தனபோல்கலித்தமனத்தின்முந்துறுவாசியே. ௫௮

ரு

வையமேழுமொரேழுமாருயிரோடுகூடவழங்குமம்
மெய்யன்வீரருள்வீரன்மாமகன்மேல்விளைந்ததொர்காதலால்
நையநையநலம்புலன்களவிந்தடங்கிநடுங்குவான்
தெய்வமேனிபடைத்தசேயொளிபோன்மழுங்கினதீபமே. (௫௯)

வங்கியம்பலதேன்விளம்பினவாணிமுந்தினபாணியின்
பங்கியம்பரமெங்கும்விம்மினபம்பைபம்மினபல்வகைப்
பொங்கியம்பலவுங்கறங்கினநூபுரங்கள்புலம்பவெண்
சங்கியம்பினகொம்பலம்பினசாமகீதநிரம்பவே. (௬௦)

தூபமுற்றியகாரிருட்பகைதுள்ளியோடிடவுள்ளெழும்
தீபமுற்றவுநீர்த்தகன்றனசேயதாருயிர்தேய்தலால்
பாபமுற்றியபேதைசெய்தபகைத்திறத்தினில்வெய்யவன்
கோபமுற்றிமிகச்சிவந்தனனொந்தனன்குணக்குன்றிலே. (௬௧)

மூவராய்முதலாகிமூலமதாகிஞாலமுமாகியத்
தேவதேவர்பிடித்தபோர்விலொடித்தசேவகர்சேணிலம்
காவன்மாமுடிசூடுபேரெழில்காணலாமெனுமாசைகூர்
பாவைமார்முகமென்னமுன்னமலர்ந்தபங்கயராசியே. (௬௨)

இன்னவேலையினேழுவேலையுமொத்தபோலவிரைத்தெழுந்
தன்னமாநகர்மைந்தன்மாமுடிசூடும்வைகலிதாமெனாத்
துன்னுகாதலுரப்பவந்தவைசொல்லலாம்வகையெம்மனோர்க்
குன்னலாவனவல்லவென்னினுமுற்றபெற்றியுணர்த்துவாம். ௬௩

வேறு.

குஞ்சரமனையார்சிந்தைகொளிளையார்
பஞ்சினையணிவார்பால்வளைதெரிவார்
அஞ்சனமெனவாளம்புகளிடையே
நஞ்சினையிடுவார்நாண்மலர்புனைவார். (௬௪)

வேறு.

பொங்கியவுவகைவெள்ளம்பொழிதரக்கமலம்பூத்த
சங்கையின்முகத்தார்நம்பிதம்பியரனையரானார்
செங்கயனறவமாந்திக்களிப்பெனச்சிவக்குங்கண்ணார்
குங்குமச்சுவடுநீங்காக்குவவுத்தோட்குமாரெல்லாம். (௬௫)

மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார்வேறுளமகளிரெல்லாம்
சீதையையொத்தாரன்னதிருவினையொத்தாளவ்வூர்
சாதுகைமாந்தரெல்லாந்தயரதன்றன்னையொத்தார். (௬௬)

இமிழ்திரைப்பரவைஞாலமெங்கணும்வறுமைகூர
உமிழ்வதொத்துதவுகாதலுந்திடவந்ததன்றே
குமிழ்முலைச்சீதைகொண்கன்கோமுடிபுனைதல்காண்பான்
அமிழ்துணக்குழுவுகின்றவமரரினரசவெள்ளம். (௬௭)

பாகியல்பவளச்செவ்வாய்ப்பணைமுலைப்பரவையல்குல்
தோகையர்குழாமுமைந்தர்சும்மையுந்துவன்றியெங்கும்
ஏகுமினேகுமென்றென்றிடையிடைநிற்றலல்லால்
போகிலமீளகில்லாபொன்னகர்வீதியெல்லாம். (௬௮)

வேந்தரேபெரிதென்பாரும்வீரரேபெரிதென்பாரும்
மாந்தரேபெரிதென்பாருமகளிரேபெரிதென்பாரும்
போந்ததேபெரிதென்பாரும்புகுவதேபெரிதென்பாரும்
தேர்ந்ததேதேரினல்லால்யாவரேதெரியக்கண்டார். (௬௯)

குவளையினெழிலும்வேலின்கொடுமையுங்குழைத்துக்கூட்டித்
திவளுமஞ்சனமென்றேய்ந்தநஞ்சினைத்தெரியத்தீட்டித்
தவளவொண்மதியுள்வைத்ததன்மைசாறடங்கணல்லார்
துவளுநுண்ணிடையாராடுந்தோகையங்குழாத்திற்றொக்கார். ௭0

நலங்கிளர்பூமியென்னுநங்கையைநறுந்துழாயின்
அலங்கலான்புணருஞ்செல்வங்காணவந்தடைந்திலாதார்
இலங்கையினிருதரேயிவ்வேழுலகத்துவாழும்
விலங்கலுமாசைநின்றவிடாமதவிலங்கலேயால். (௭௧)

சந்திரர்கோடியென்னத்தரளவெண்கவிகையோங்க
அந்தரத்தன்னமெல்லாமார்ந்தெனக்கவரிதுன்ன
இந்திரற்குவமைசாலுமிருநிலக்கிழவரெல்லாம்
வந்தனர்மௌலிசூட்டுமண்டபமரபிற்புக்கார். (௭௨)

முற்பயந்தெடுத்தகாதற்புதல்வனைமுறையினோடும்
இற்பயன்சிறப்பிப்பாரினீண்டியவுவகைதூண்ட
அற்புதன்றிருவைச்சேருமருமணங்காணப்புக்கார்
நற்பயன்றவத்தினுய்க்குநான்மறைக்கிழவரெல்லாம். (௭௩)

விண்ணவர்விசும்புதூர்த்தார்விரிதிரையுடுத்தகோல
மண்ணவர்திசைகடூர்த்தார்மங்கலமிசைக்குஞ்சங்கம்
கண்ணகன்முரசினோதைகண்டவர்செவிகடூர்த்த
எண்ணருங்கனகமாரியெழுதிரைக்கடல்கடூர்த்த. (௭௪)

விளக்கொளிமறைத்தமன்னர்மின்னொளிமகுடகோடி
துளக்கொளிவிசும்பினூருஞ்சுடரையுமறைத்தசூழ்ந்த
அளக்கர்வாய்முத்தமூரன்முறுவலாரணியின்சோதி
வளைக்கலாமென்றவ்வானோர்கண்ணையுமறைத்தவன்றே. (௭௫)

ஆயதோரமைதியின்கணையனைமகுடஞ்சூட்டற்
கேயுமங்கலங்களானயாவையுமியையக்கொண்டு
தூயநான்மறைகள்வேதபாரகர்சொல்லத்தொல்லை
வாயில்கணெருக்கநீங்கமாதவக்கிழவன்வந்தான். (௭௬)

கங்கையேமுதலவாயகன்னியீறானதீர்த்த
மங்கலப்புனலுநாலுவாரியினீரும்பூரித்
தங்கியின்வினையிற்கேற்றயாவையுமமைத்துவீரச்
சிங்கவாதனமும்வைத்துச்செய்வனபிறவுஞ்செய்தான். (௭௭)

கணிதநூலுணர்ந்தமாந்தர்காலம்வந்தடுத்ததென்னப்
பிணியறநோற்றுநின்றபெரியவன்விரைவினேகி
மணிமுடிவேந்தன்றன்னைவல்லையிற்கொணர்தியென்னப்
பணிதலைநின்றகாதற்சுமந்திரன்பரிவிற்சென்றான். (௭௮)

விண்டொடநிவந்தகோயில்வேந்தர்தம்வேந்தன்றன்னைக்
கண்டிலன்வினவக்கேட்டான்கைகயள்கோயினண்ணி
தொண்டைவாய்மடந்தைமாரிற்சொல்லமற்றவருஞ்சொல்லப்
பெண்டிரிற்கூற்றமன்னாள்பிள்ளையைக்கொணர்கவென்றாள். ௭௯

என்றனளென்னக்கேட்டானெழுந்தபேருவகைபொங்கப்
பொன்றிணிமாடவீதிபொருக்கெனநீங்கிப்புக்கான்
தன்றிருவுள்ளத்துள்ளேதன்னையேநினையுமற்றக்
குன்றிவர்தோளினானைத்தொழுதுவாய்புதைத்துக்கூறும். (௮௦)

கொற்றவர்முனிவர்மற்றுங்குவலயத்துள்ளாருன்னைப்
பெற்றவன்றன்னைப்போலப்பெரும்பரிவியற்றிநின்றார்
சிற்றவைதானுமாங்கேகொணர்கெனச்செப்பினாளப்
பொற்றடமகுடஞ்சூடப்போதுதிவிரைவினென்றான். (௮௧)

ஐயனுமச்சொற்கேளாவயிரமௌலியானைக்
கைதொழுதரசவெள்ளங்கடலெனத்தொடர்ந்துசுற்றத்
தெய்வகீதங்கள்பாடத்தேவருமகிழ்ந்துவாழ்த்தத்
தையலாரிரைத்துநோக்கத்தாரணிதேரிற்சென்றான். (௮௨)

திருமணிமகுடஞ்சூடச்சேவகன்செல்கின்றானென்
றொருவரினொருவர்முந்தக்காதலோடுவகையுந்த
இருகையுமிரைத்துமொய்த்தாரின்னுயிர்யார்க்குமொன்றாய்ப்
பொருவருந்தேரிற்செல்லப்புறத்திடைக்கண்டார்போல்வார்.௮௩

துண்ணெனுஞ்சொல்லாள்சொல்லச்சுடர்முடிதுறந்துதூய
மண்ணெனுந்திருவைநீங்கிவழிக்கொளாமுன்னம்வள்ளல்
பண்ணெனுஞ்சொல்லினார்தந்தோளெனும்பணைத்தவேயும்
கண்ணெனுங்காலவேலுமிடைநெடுங்கானம்புக்கான். (௮௪)

சுண்ணமுமலருஞ்சாந்துங்கனகமுந்தூவவந்து
வண்ணமேகலையுநாணும்வளைகளுந்தூவுவாரும்
புண்ணுறவனங்கன்வாளிபுழைத்ததம்புணர்மென்கொங்கை
கண்ணுறப்பொழிந்தகாமவெம்புனல்கழுவுவாரும். (௮௫)

அங்கணனவனிகாத்தற்காமிவனென்னலாமோ
நங்கணன்பிலனென்றுள்ளந்தள்ளுறநடுங்கிநைவார்
செங்கணுங்கரியகோலமேனியுந்தேருமாகி
எங்கணுந்தோன்றுகின்றாரெனைவரோவிராமனென்பார். (௮௬)

இனையராமகளிரெல்லாமிரைத்தனர்நிரைத்துமொய்த்தார்
முனைவருநகரமூதூர்முதிஞருமிளைஞர்தாமும்
அனையவன்மேனிகண்டாரன்பினுக்கெல்லைகாணார்
நினைவினர்மனத்தால்வாயானிகழ்ந்ததுநிகழ்த்தலுற்றாம். (௮௭)

உய்ந்ததிவ்வுலகமென்பாரூழிகாண்கிற்பாயென்பார்
மைந்தநீகோடியெங்கள்வாழ்க்கைநாள்யாவுமென்பார்
ஐந்தவித்தரிதிற்செய்ததவமுனக்காகவென்பார்
பைந்துழாய்த்தெரியலாய்க்கேநல்வினைபயக்கவென்பார். (௮௮)

உயருளொண்கணொக்குந்தாமரைநிறத்தையொக்கும்
புயல்பொழிமேகமென்னபுண்ணியஞ்செய்தவென்பார்
செயலருந்தவங்கள்செய்திச்செம்மலைத்தந்தசெல்வத்
தயரதற்கென்னகைம்மாறுடையம்யாந்தக்கதென்பார். (௮௯)

வாரணமரற்றவந்துகராவுயிர்மாற்றுநேமி
நாரணனொக்குமிந்தநம்பிதன்கருணையென்பார்
ஆரணமறிதறேற்றாவையனையனுநோக்கிக்
காரணமின்றியேயுங்கண்கணீர்கலுழ்நிற்பார். (௯0)

நீலமாமுகிலனான்றனிறையினோடறிவுநிற்க
சீலமார்க்குண்டுகெட்டேன்றேவரினடங்குவானோ
காலமாக்கணிக்குநுண்மைக்கணக்கையுங்கடந்துநின்ற
மூலமாய்முடிவிலாதமூர்த்தியிம்முன்பனென்பார். (௬௧)

ஆர்கலியகழ்ந்தோர்கங்கையவனியிற்கொணர்ந்தோர்முந்தைப்
போர்கெழுபுலவர்க்காகியசுரரைப்பொருதுவென்றோர்
பேர்கெழுசிறப்பின்வந்தபெரும்புகழ்நிற்பஐயன்
தார்கெழுதிரடோடந்தபுகழினைத்தழுவியென்பார். (௬௨)

வேறு.

சந்தமிவைதாவின்மணியாரமிவையாவும்
சிந்துரமுமிங்கிவைசெறிந்தமதவேழப்
பந்திகள்வயப்பரிபசும்பொனின்வெறுக்கை
மைந்தவறியோர்கொளவழங்கெனநிரைப்பார். (௬௩)

மின்பொருவுதேரின்மிசைவீரன்வருபோழ்தில்
தன்பொருவில்கன்றுதனிதாவிவரல்கண்டாங்
கன்புருகுசிந்தையொடுமாவுருகுமாபோல்
என்புருகிநெஞ்சுருகிநஞ்சுருகிநிற்பார். (௬௪)

சத்திரநிழற்றநிமிர்தானையொடுநானா
அத்திரநிழற்றவருளோடவனியாள்வார்
புத்திரரினிப்பெறுதல்புல்லிதெனநல்லோர்
சித்திரமெனத்தனிதிகைத்துருகிநிற்பார். (௬௫)

கார்மினொடுலாயதெனநூல்கஞலுமார்பன்
தேர்மிசைநம்வாயில்கடிதேகுதல்செய்வானோ
கூர்கனகராசியொடுகோடிமணியாலும்
தூர்மினெடுவீதியினையென்றுசொரிவாரும். (௬௬)

தாய்கையில்வளர்ந்திலன்வளர்த்ததுதவத்தால்
கேகயன்மடந்தைகிளர்ஞாலமிவனாள
ஈகையிலுவந்தவவ்வியற்கையிதுவென்றால்
தோகையிவள்பேருவகைசொல்லலரிதென்பார். (௬௭)

பாவமுமருந்துயரும்வேர்பறியுமென்பார்
பூவலயமின்றுதனியன்றுபொதுவென்பார்
தேவர்பகையுள்ளனவிவ்வள்ளறெறுமென்பார்
ஏவல்செயுமன்னர்தவம்யாவதுகொலென்பார். (௬௮)

ஆண்டினையராயினையகூறவடல்வீரன்
தூண்டுபுரவிப்பொருவில்சுந்தரமணித்தேர்
நீண்டகொடிமாடநிரைவீதிநிறையப்போய்ப்
பூண்டபுகழ்மன்னனுறைகோயில்புகலோடும். (௯௯)

வேறு.

ஆங்குவந்தடைந்தவண்ணலாசையின்கவரிவீசப்
பூங்குழன்மகளிருள்ளம்புதுக்களியாடநோக்கி
வீங்கிருங்காதல்காட்டிவிரிமுகக்கமலபீடத்
தோங்கியமகுடஞ்சூடியுவகைவீற்றிருப்பக்காணான். (௧௦௦)

வேத்தவைமுனிவரோடுவிருப்பொடுகளிக்குமெய்ம்மை
ஏத்தவையிசைக்குஞ்செம்பொன்மண்டபமினிதினெய்தான்
ஓத்தவையுலகத்தெங்குமுள்ளவையுணர்ந்தாருள்ளம்
பூத்தவைவடிவையொப்பான்சிற்றவைகோயில்புக்கான். (௧௦௧)

புக்கவன்றன்னைநோக்கிப்புரவலர்முனிவர்யாமும்
தக்கதேநினைந்தான்றாதைதாமரைச்சரணஞ்சூடித்
திக்கினைநிமிர்த்தகோலச்செல்வனேசெம்பொற்சோதி
மிக்குயர்மகுடஞ்சூட்டச்சூடுதல்விழுமிதென்றார். (௧௦௨)

ஆயனநிகழும்வேலையண்ணலுமயர்ந்துதேறாத்
தூயவனிருந்தசூழறுருவினன்வருதனோக்கி
நாயகனுரையான்வாயானானிதுபகர்வேனென்று
தாயெனநினைவான்முன்னேகூற்றெனத்தமியள்வந்தாள். (௧௦௩)

வந்தவடன்னைச்சென்னிமண்ணுறவணங்கிவாய்த்த
சிந்துரப்பவளச்செவ்வாய்செங்கையிற்புதைத்துமற்றைச்
சுந்தரத்தடக்கைதானைமடக்குறத்துவண்டுநின்றான்
அந்திவந்தடைந்ததாயைக்கண்டவான்கன்றினன்னான். (௧௦௪)

நின்றவன்றன்னைநோக்கியிரும்பினாலியைந்தநெஞ்சில்
கொன்றுழல்கூற்றமென்னும்பெயரினிற்கொடுமைபூண்டாள்
இன்றெனக்குணர்த்தலாவதேயதேயென்னினாகும்
ஒன்றுனக்குந்தைமைந்தவுரைப்பதோருரையுண்டென்றாள். ( )

எந்தையேயேவநீரேயுரைசெயவியைவதுண்டேல்
உய்ந்தனனடியேனென்னிற்பிறந்தவருளரோவாழி
வந்ததென்றவத்தினாயவருபயன்மற்றொன்றுண்டோ
தந்தையுந்தாயுநீரேதலைநின்றேன்பணிமினென்றான். (௧௦௬)

ஆழிசூழுலகமெல்லாம்பரதனேயாளநீபோய்த்
தாழிருஞ்சடைகடாங்கித்தாங்கருந்தவமேற்கொண்டு
பூழிவெங்கானநண்ணிப்புண்ணியத்துறைகளாடி
ஏழிரண்டாண்டின்வாவென்றியம்பினனரசனென்றாள். (௧௦௭)

இப்பொழுதெம்மனோராலியம்புதற்கெளிதேயாரும்
செப்பருங்குணத்திராமன்றிருமுகச்செவ்விநோக்கில்
ஒப்பதேமுன்புபின்பவ்வாசகமுணரக்கேட்ட
அப்பொழுதலர்ந்தசெந்தாமரையினைவென்றதம்மா. (௧௦௮)

தெருளுடைமனத்துமன்னனேவலிற்றிறம்பவஞ்சி
இருளுடையுலகந்தாங்குமின்னலுக்கியைந்துநின்றான்
உருளுடைச்சகடம்பூண்டவுடையவனுய்த்தகாரே
றருளுடையொருவனீக்கவப்பிணியவிழ்ந்ததொத்தான். (௧௦௯)

மன்னவன்பணியன்றாகினும்பணிமறுப்பனோவென்
பின்னவன்பெற்றசெல்வமடியனேன்பெற்றதன்றோ
என்னினியுறுதியப்பாலிப்பணிதலைமேற்கொண்டேன்
மின்னொளிர்கானமின்றேபோகின்றேன்விடையுங்கொண்டேன்

(௩-வது. கைகேசிசூழ்வினைப்படலம் முற்றிற்று. ஆ_ திருவிருத்தம்-௨௧௫)

## ௪-வது நகர்நீங்குபடலம்.

என்றுகொண்டினையகூறியடியிணையிறைஞ்சிமீட்டும்
தன்றுணைத்தாதைபாதமத்திசைநோக்கித்தாழ்ந்து
பொன்றிணிபோதினாளும்பூமியும்புலம்பினையக்
குன்றினுமுயர்ந்ததோளான்கோசலைகோயில்புக்கான். (௧)

குழைக்கின்றகவரியின்றிக்கொற்றவெண்குடையுமின்றி
இழைக்கின்றவிதிமுன்செல்லத்தருமம்பின்னிரங்கியேக
மழைக்குன்றமனையான்மௌலிகவித்தனன்வருமென்றென்று
தழைக்கின்றவுள்ளத்தன்னாண்முன்னொருதமியன்சென்றான் (௨)

புனைந்திலன்மௌலிகுஞ்சிமஞ்சனப்புனிதநீரால்
நனைந்திலனென்கொலென்னுமையத்தாணளினபாதம்
வனைந்தபொற்கழற்கால்வீரன்வணங்கலுங்குழைந்துவாழ்த்தி
நினைந்ததென்னிடையூறுண்டோநெடுமுடிபுனைதற்கென்றாள். (௩)

வேறு.

மங்கையம்மொழிகூறலுமானவன்
செங்கைகூப்பிநின்காதற்றிருமகன்
பங்கமில்குணத்தெம்பிபரதனே
துங்கமாமுடிசூடுகின்றானென்றான். (௪)

முறைமையன்றென்பதொன்றுண்டுமும்மையின்
நிறைகுணத்தவனின்னினுநல்லனால்
குறைவிலன்னெனக்கூறினாணல்வர்க்கும்
மறுவிலன்பினில்வேற்றுமைமாற்றினாள். (௫)

என்றுபின்னருமன்னவனேவிய
தன்றெனாமைமகனேயுனக்கறன்
நன்றுநும்பிக்குநானிலநீகொடுத்
தொன்றிவாழுதியூழிபலவென்றாள். (௬)

தாயுரைத்தசொற்கேட்டுத்தழைக்கின்ற
தூயசிந்தையத்தோமில்குணத்தினான்
நாயகன்னெனைநன்னெறியுய்ப்பதற்
கேயதுண்டொர்பணியென்றியம்பினான். (௭)

ஈண்டுரைத்தபணியென்னையென்றவட்
காண்டொரேழினோடேழகன்காணிடை
மாண்டமாதவரோடுடன்வைகிப்பின்
மீண்டுநீவரல்வேண்டுமென்றானென்றான். (௮)

ஆங்கவ்வாசகமென்னுமனல்குழை
தாங்குதன்செவியிற்றொடராமுனம்
ஏங்கினாளிளைத்தாடிகைத்தாண்மனம்
வீங்கினாள்விம்மினாள்விழுந்தாளரோ. (௯)

வஞ்சகமோமகனேயுனைமாநிலம்
தஞ்சமாகநீதாங்கென்றவாசகம்
நஞ்சமோவினிநானுயிர்வாழ்வெனோ
அஞ்சுமஞ்சுமென்னாருயிரஞ்சுமால். (௧௦)

கையைக்கையினெரிக்குந்தன்காதலன்
வையுமாலிலையன்னவயிற்றினைப்
பெய்வளைத்தளிராற்பிசையும்புகை
வெய்துயிர்க்கும்விழுங்கும்புழுங்குமால். (௧௧)

நன்றுமன்னன்கருணையெனாநகும்
நின்றமைந்தனைநோக்கிநெஞ்சுரத்
தென்றுபோவதெனவெழுமின்னுயிர்
பொன்றும்போதுற்றதுற்றதுபோலுமே. (௧௨)

அன்பிழைத்தமனத்தரசற்குநீ
என்பிழைத்தனையென்றுநின்றேங்குமால்
முன்பிழைத்தவறுமையின்முற்றினோர்
பொன்பிழைக்கப்பொதிந்தனர்போலவே. (௧௩)

அறமெனக்கிலையோவெனுமாவிநைந்
திறவடுத்ததென்றெய்வதங்காளெனும்
பிறவுரைப்பதென்கன்றுபிரிந்துழிக்
கறவையொப்பக்கரைந்துகலங்கினாள். (௧௪)

இத்திறத்தினிடருறுவாடனைக்
கைத்தலத்தினெடுத்தருங்கற்பினோய்
பொய்த்திறத்தினனாக்குதியோபுகல்
மெய்த்திறத்துநம்வேந்தனைநீயென்றான். (௧௫)

பொற்புறுத்தனமெய்ம்மைபொதிந்தன
சொற்புறுத்தற்குரியனசொல்லினான்
கற்புறுத்தியகற்புடையாடனை
வற்புறுத்திமனங்கொளத்தேற்றுவான். (௧௬)

சிறந்ததம்பிதிருவுறவெந்தையை
மறந்தும்பொய்யிலனாக்கிவனத்திடை
உறைந்துநீருமுறுதிபெற்றேனினிப்
பிறந்தியான்பெறும்பேறென்பதியாவதோ. (௧௭)

விண்ணுமண்ணுமிவ்வேலையுமற்றும்வே
றெண்ணும்பூதமெலாமிறந்தேகினும்
அண்ணலேவன்மறுக்கவடியெனோற்
கொண்ணுமோவிதற்குள்ளழியேலென்றான். (௧௮)

ஆகினையவரசன்றனாணையால்
ஏகலென்பதியானுமுரைக்கிலென்
சாகலாவுயிர்தாங்கவல்லேனையும்
போகினின்னொடுங்கொண்டனைபோகென்றாள். (௧௯)

என்னைநீங்கியிடர்க்கடல்வைகுறும்
மன்னர்மன்னனைவற்புறுத்தாதுடன்
துன்னுகானந்தொடரத்துணிவதோ
அன்னையேயறம்பார்க்கிலையாமென்றான். (உ0)

வரிவிலெம்பியிம்மண்ணரசாயவற்
குரிமைமாநிலமுற்றபின்கொற்றவன்
திருவினீங்கித்தவஞ்செயுநாளுடன்
அருமைநோன்புகளாற்றுதியாமன்றே. (உக)

சித்தநீதிகைக்கின்றதென்னேவரும்
ஒத்தமாதவஞ்செய்துயர்ந்தாரன்றே
எத்தனைக்குளவாண்டுகளீண்டவை
பத்துநாலும்பகலலவோவென்றான். (உஉ)

முன்னர்க்கோசிகனென்னுமுனிவரன்
தன்னருட்டலைதாங்கியவிஞ்சையும்
பின்னரெய்தியபேறும்பிழைத்தவோ
இன்னநன்றவர்க்கேயினசெய்தலே. (உங)

மாதவர்க்குவழிபாடிழைத்தரும்
போதமுற்றிப்பொருவருவிஞ்சைகள்
ஏதமற்றனதாங்கியிமையவர்
காதல்பெற்றுநன்காவரக்காண்டியால். (உச)

மகரவேலைமண்டொட்டவண்டாதோர்ச்
சகரர்தாதைபணிதலைநின்றுதம்
புகரில்யாக்கையினின்னுயிர்போக்கிய
நிகரின்மாப்புகழ்நின்றதன்றேவெனா. (உரு)

மான்மறிக்கரத்தான்மழுவேந்துவான்
தான்மறுத்திலன்றாதைசொற்றாயையே
ஊனறக்குறைத்தானுரவோனருள்
யான்மறுப்பதென்றெண்ணுவதோவென்றான். (உசு)

இத்திறத்தவெனைப்பலவாசகம்
உய்த்துரைத்தமகனுரையுட்கொளா
எத்திறத்துமிறக்குமிந்நாடெனா
மெய்த்திறத்துவிளங்கிழையுன்னுவாள். (உஎ)

அவனிகாவல்பரதனதாகுக
இவனிஞ்ஞாலமிறந்திருங்கானிடைத்
தவனிலாவகைகாப்பென்றகைவிலாப்
புவனிநாதற்றொழுதென்றுபோயினாள். (௨௮)

போகின்றாளைத்தொழுதுபுரவலன்
ஆகமற்றவடன்னையுமாறறியிச்
சோகந்தீர்ப்பவளென்றசுமித்திரை
மேகந்தோய்தனிக்கோயிலைமேயினான். (௨௯)

நடந்தகோசலைகேகயநாட்டிறை
மடந்தகோயிலையெய்தினன்மன்னவர்
கிடந்தபார்மிசைவீழ்ந்தனள்கெட்டுயிர்
உடைந்தபோழ்தினுடல்விழுந்தென்னவே. (௩௦)

வேறு.

பிறியார்பிறிவேதென்னும்பெரியோய்தகவோவென்னும்
நெறியோவடியேனிலைநீநினையாநினைவேதென்னும்
வறியோர்தனமேயெனனுந்தமியேன்வலியேயென்னும்
அறிவோவினையோவென்னுமரசேயரசேயென்னும். (௩௧)

இருளற்றிடவுற்றொளிருமிரவிக்கெதிருந்திகிரி
உருளத்தனியுய்த்தொருகோனடையிற்கடைகாணுலகம்
பொருளற்றிடமுற்றுறுமப்பகலிற்புகுதற்கென்றோ
அருளக்கருதிற்றிதுவோவரசர்க்கரசேயென்னும். (௩௨)

திரையார்கடல்சூழுலகின்றவமேதிருவின்றிருவே
நிரையார்கலையின்கடலேநெறியார்மறையின்னிலையே
கரையாவயர்வேனெனைநீகருணாலயனேயெனிறொன்
றுரையாவிதுதானழகோவுலகேழுடையாயென்னும். (௩௩)

மின்னின்றனையமேனிவெறிதாய்விடநின்றதுபோல்
உன்னுந்தகைமைக்கடையாவுறுநோயுறுகின்றுணரான்
இன்னென்றுரையானென்னேயிதுதான்யாதென்றறியேன்
மன்னன்றகைமைகாணவாராய்மகனேயென்னும். (௩௪)

இவ்வாறழுவாளிரியற்குரல்சென்றிசையாமுன்னம்
ஒவ்வாதொல்லாதெனனுவொலிவாணிருபர்முனிவர்
அவ்வாறறிவாயென்னவந்தான்முனிவன்னவனும்
வெவ்வாளரசன்னிலைகண்டென்னும்விளைவென்றான்று. (௩௫)

இறந்தானல்லன்னரசனிறவாதொழிவானல்லன்
மறந்தானுணர்வென்றன்றவன்கேகயர்கோன்மங்கை
துறந்தாடுயரந்தன்னைத்துறவாதொழிவாளிவளே
பிறந்தார்பெயருந்தன்மைபிறராலறிதற்கெளிதோ. (௩௬)

என்றவுன்றமுனிவனிடராலழுவாடுயரம்
சொன்னாளாகாளெனமுன்றெழுகேகயர்கோன்மகளை
அன்றையுரையாயரசனயர்வானிலையென்னென்னத்
தன்றனிகழ்ந்ததன்மைதானேதெரியச்சொன்னாள் (௩௭)

சொற்றாள்சொற்றாமுன்னஞ்சுடர்வாளரசர்க்கரசைப்
பொற்றாமரைபோற்கையாற்பொடிசூழ்படிநின்றெழுவிக்
கற்றாயயரேலவளேதருநின்காதற்கரசன்
றெற்றேசெயலின்றொழிநீயென்றென்றிரவாநின்றான். (௩௮)

சீதப்பணிநீரளவித்திண்காலுதவுந்தண்கால்
போதத்தளவேதவழ்வித்தின்சொற்புகலாநின்றான்
ஓதக்கடனஞ்சனையாளுநைநஞ்சொருவாறவியக்
காதற்புதல்வன்பெயரேபுகல்வானுயிருங்கண்டான் (௩௯)

காணாவையாவினிநீயொழிவாய்கழிபேரவலம்
ஆணாயகனேயினிநாடாள்வானிடையூறுளதோ
மாணாவுரையாடானேதருமாமழையேயனையான்
பூணாதொழிவானெனில்யாமுளமோபொன்றேலென்றான். (௪0)

என்றம்முனிவன்றன்னைநினையாவினையேனினியான்
பொன்றும்மளவில்லவனைப்புனைமாமகுடம்புனைவித்
தொன்றும்வனமென்றன்றவண்ணஞ்செய்தென்னுரையும்
குன்றும்பழிபூணாமற்காவாய்கோவேயென்றான். (௪௧)

முனியும்முனியுஞ்செய்கைக்கொடியாண்முகமேமுன்னி
இனியுன்புதல்வற்கரசுமேனையோர்க்கின்னுயிரும்
மனுவின்வழிநின்கணவற்குயிரும்முதவிவசைதீர்
புனிதம்மருவும்புகழேபுனையாய்பொன்னேயென்றான். (௪௨)

மொய்ம்மாண்வினைவேரறவென்றொழிவான்மொழியாமுன்னம்
விம்மாவழுவாளரசன்மெய்யிற்றிரிவானென்னில்
இம்மாவுலகத்துயிரோடினிவாழ்வுகவேனென்சொல்
பொய்ம்மாணுமற்கின்றேபொன்றாதொழியேனென்றாள். (௪௩)

கொழுநன்றுஞ்சும்மெனவுங்கொள்ளாதுலகம்மெனவும்
பழிநின்றுயரும்மெனவும்பாவம்மூளதாமெனவும்
ஒழிகின்றிலையன்றியுமொன்றுணர்கின்றிலையானினிமேல்
மொழிகின்றனவென்னென்றுமுனியும்முறையன்றென்பாள். ()

கண்ணோடாதேகணவனுயிரோடிடர்காணாதே
புண்ணோடோடுங்கனலோவிடமோவென்னப்புகல்வாய்
பெண்ணோநீயோமாயாப்பேயோகொடியாய்நீயிம்
மண்ணோடுன்னோடென்னும்வசையோவலிதேயென்றான். (௬௫)

வாயான்மன்னன்மகனைவனமேகென்றுமுன்னம்
நீயோசொன்னாயவனோநிமிர்கானிடைவெந்நெறியில்
போயோபுகலோதவிரான்புகழோடுயிரைச்சுடுவெம்
தீயோய்நின்போற்றீயாருளரோசெயலென்னென்றான். (௬௬)

தாவின்முனிவன்புகலத்தளராநின்றமன்னன்
நாவினஞ்சமுடையநங்கைதன்னைநோக்கிப்
பாவிநீயேவெங்கான்படர்வாயென்றென்னுயிரை
ஏவினாயோவவனுமேகினானோவென்றான், (௬௭)

கண்டேனெஞ்சங்கனிவாய்க்கனிவாய்விடநானெடுநாள்
உண்டேனதனானீயென்னுயிரைமுதலோடுண்டாய்
பண்டேயெரிமுன்னுன்னைப்பாவீதேவீயாகக்
கொண்டேனல்லேன்வேறோர்கூற்றந்தேடிக்கொண்டேன்.

விழிக்குங்கண்வேறில்லாவெங்கானென்கான்முளையைச்
சுழிக்கும்வினையாலேகச்சூழ்வாயுன்னைப்போழ்வாய்.
பழிக்குநாணாய்மாணாப்பாவியினியென்பலவுன்
கழுத்தின்னாணுன்மகற்குக்காப்பின்னாணாமென்றான். (௬௯)

இன்னேபலவும்பகர்வானிரங்காதாளைநோக்கிச்
சொன்னேனின்றேயிவளென்றாரமல்லடுறந்தேன்
மன்னேயாவான்வருமப்பரதன்றனையும்மகனென்
றுன்னேன்முனிவாவவனுமாகானுரிமைக்கென்றான். (௭௦)

என்னைக்கண்டும்மேகாவண்ணம்மிடையூறுடையான்
உன்னைக்கண்டும்மிலனோவென்றானுயர்கோசலையைப்
பின்னைக்கண்டானனையான்பிரியக்கண்டதுயரம்
தன்னைக்கண்டேதவிர்வாடளர்வாணிலையிற்றளர்வான். (௭௧)

மாற்றாள்செயலாமென்றுங்கணவன்வரமீந்துள்ளம்
ஆற்றாதயர்ந்தானென்றுமறிந்தாளவளும்மவனைத்
தேற்றாநின்றாண்மகனைத்திரிவாயெனன்றாளரசன்
தோற்றான்மெய்யென்றுலகஞ்சொல்லும்பழிக்குஞ்சோர்வாள்.()

தள்ளாநிலைசான்மெய்ம்மைதழுவாவழுவாவகைநின்
றெள்ளாநிலைகூர்பெருமைக்கிழிவாமென்றாலுரவோய்
விள்ளாநிலைசேரன்பான்மகன்மேன்மெலியின்னுலகம்
கொள்ளாதன்றோவென்றாள்கணவன்குறையக்குறைவாள். (௫௩)

போவாதொழியானென்றாள்புதல்வன்றன்னைக்கணவன்
சாவாதொழியானென்றென்றுள்ளந்தள்ளுற்றயர்வாள்
காவாயென்றாண்மகனைக்கணவன்புகழுக்கழிவாள்
ஆவாவுயர்கோசலையாமன்னம்மென்னுற்றனளே. (௫௪)

உணர்வானனையாளுரையாலுயர்ந்தானுரைசால்குமரன்
புணரானிலமேவனமேபோவானேயாமென்று
இணரார்தருதாரரசனிடராலயர்வான்வினையேன்
துணைவாதுணைவாவென்றான்றோன்றாறோன்றாயென்றான். ௫௫

கண்ணுந்நீராயுயிரும்மொழுகக்கழியாநின்றேன்
எண்ணுந்நீர்நான்மறையோரெரிமுன்னின்மேற்சொரிய
மண்ணுந்நீராய்வந்தபுனலைமகனேவினையேற்
குண்ணுந்நீராயுதவியுயர்கானடைவாயென்றான். (௫௬)

படைமாணரசைப்பலகாற்பழுவாய்மழுவாலெறிவான்
மிடைமாவலிதானனையான்வில்லாலடுமாவல்லாய்
உடைமாமகுடம்புனையென்றுரையாவுடனேகொடியேன்
சடைமாமகுடம்புனையத்தந்தேனந்தோவென்றான். (௫௭)

கறுத்தாயுருவம்மனமுங்கண்ணுங்கையுஞ்செய்ய
பொறுத்தாய்பொறையேயிறைவன்புரமூன்றெரித்தபோர்வில்
இறுத்தாய்தமியேனென்னுதென்னையிம்மூப்பிடையே
வெறுத்தாயினிநான்வாழுநாள்வேண்டேன்வேண்டேனென்றான்.

பொன்னின்முன்னம்மொளிரும்பொன்னேபுகழின்புகழே
மின்னின்மின்னும்வரிவிற்குமராமெய்யின்மெய்யே
என்னின்முன்னம்வனநீயடைதற்கெளியேனல்லேன்
உன்னின்முன்னம்புகுவேனுயர்வானகம்யானென்றான். (௫௯)

நெகுதற்கொத்தநெஞ்சநேயத்தாலேயாவி
உகுதற்கொத்தவுடலுமுடையேனுன்போலல்லேன்
தகுதற்கொத்தசனகன்றையல்கையைப்பற்றிப்
புகுதற்கண்டகண்ணாற்போகக்காணேனென்றான். (சுo

எற்றேபகர்வேனினியானென்னையுன்னிற்பிரிய
வற்றேயுலகம்மெனினும்வானேவருந்தாதெனினும்
பொற்றேரரசேதமியேன்புகழேயுயிரேயுன்னைப்
பெற்றேனருமையறிவேன்பிழையேன்பிழையேனென்றான். சுக

அள்ளற்பள்ளப்புனல்சூழகன்மாநிலமும்மரசும்
கொள்ளக்குறையாநிதியின்குவையும்முதலாமனைவயும்
கள்ளக்கைகேசிக்கேயுதவிப்புகழ்கைக்கொண்ட
வள்ளற்றனமென்னுயிரைமாய்க்கும்மாய்க்குமென்றான். (சுஉ

ஒலியார்கடல்சூழுலகத்துயர்வானிடைநாகரினும்
பொலியாநின்றானுன்னைப்போல்வாருளரோபொன்னே
வலியாருடையாரென்றான்மழுவாளுடையான்வரவும்
சலியாநிலையாயென்றாற்றவிர்வாருளரோவென்றான். (சுந)

கேட்டேயிருந்தேனெனினுங்கிளர்வானின்றேயடைய
மாட்டேனாகில்லன்றேவன்கண்ணனென்கண்மைந்தா
காட்டேயுறைவாய்நீயிக்கைகேசியையுங்கண்டிங்
நாட்டேயுறைவேனென்றானன்றென்றன்மையென்றான். (சுச)

மெய்யார்தவமேசெய்துன்மிடன்மார்பரிதிற்பெற்ற
செய்யாளென்னும்பொன்னுநிலமாதென்னுந்திருவும்
உய்யாருய்யார்கெடுவேனுன்னைப்பிரியின்வினையேன்
அய்யாகைகேசியைநேராகேனோநானென்றான். (சுரு)

பூணாரணியும்முடியும்பொன்னாசனமுங்குடையும்
சேணார்மார்புந்திருவுந்தெரியக்காணத்திரிவேன்
மாணாமாவற்கலையுமானின்றோலும்மவைநான்
காணாதொழிந்தேனென்றானன்றாய்த்தன்றோகருமம், (சுசு)

என்றாவொன்றொன்றொவ்வாவிசைதந்தரசன்னுயிரும்
சென்றானின்றோடென்னுந்தன்மையெய்தித்தேய்ந்தான்
மென்றோன்மார்பின்முனிவன்வேந்தேயயலோலவனை
இன்றேகாதவண்ணந்தகைவென்னுலகோடென்னு. (சுஎ)

முனிவன்செல்லும்மளவின்முடியுங்கொல்லென்றரசன்
தனிநின்றுழறன்னுயிரைச்சிறிதேதகைவானிந்தப்
புனிதன்போனாலிவனாற்போகாதொழிவானென்னா
மனிதன்வடிவங்கொண்டமனுவுந்தன்னைமறந்தான். (௬௮)

மறந்தானினைவும்முயிரும்மன்னனென்னாமறுகா
இறந்தான்கொல்லோவரசனென்னாவிடருற்றழிவாள்
துறந்தாய்மகனேயுலகோடெமையுமென்னத்துணையாம்
அறந்தானிதுவோவையாவரசர்க்கரசேயென்றாள். (௬௯)

மெய்யின்மெய்யேயுலகின்வேந்தர்க்கெல்லாம்வேந்தே
உய்யும்வகைநின்னுயிரையோம்பாதிஞ்ஞான்றேம்பின்
வய்யம்முழுதுந்துயரான்மறுகும்முனிவன்னுடனம்
அய்யன்வரினும்வருமாலயரேலரசேயென்றாள். (௭௦)

என்றென்றரசன்மெய்யுமிருதாளிணையும்முகமும்
தன்றன்செய்யகையாற்றைவந்திடுகோசலையை
ஒன்றுந்தெரியாமம்மலுள்ளத்தரசன்மெள்ள
வன்றிண்சிலைநீங்குரிசில்வருமேவருமேயென்றான். (௭௧)

வன்மாயக்கைகேசிவாக்காலென்றன்னுயிரை
முன்மாய்விப்பத்துணிந்தாளேனுங்கூனிமொழியால்
தன்மாமகனுந்தானுந்தரணிபெறுமாறன்றி
என்மாமகனைக்கானேகென்றாளென்றாளென்றான். (௭௨

பொன்னாதோளான்கானேபுகுதப்புகுதறவிரான்
என்னாருயிரோவகலாதொழியாதிதுகோசலைகேள்
முன்னாளொருமாமுனிவன்மொழியுஞ்சாபமுளதென்
றந்நாளுற்றதெல்லாமவளுக்கரசன்னறைவான். (௭௩

வெய்யகானத்திடையேவேட்டைவேட்கைமிகவே
அய்யசென்றுகரியோடரிகடுருவித்திரிவேன்
கய்யார்சிலையுங்கணையுங்கொடுகார்மிருகமவருமோர்
செய்யநதியின்கரைவாய்ச்சென்றேமறையநின்றேன். (௭௪)

ஒருமாமுனிவன்மனையோடொளியொன்றிலவாய்நயனம்
திருமாமகனேதுணையாய்த்தவமேபுரிபோழ்தினின்வாய்
அருமாமகனேபுனல்கொண்டகல்வான்வருமாறறியேன்
பொருமாகணைவிட்டிடலும்புவிமீதலறிப்புரள. (௭௫)

புக்குப்பெருநீர் நுகரும்பொருபோதகமென்றொலிமேல்
கைக்கட்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன்
அக்கைக்கரியின்குரலேயன்றீதென்னவெருவா
மக்கட்குரலென்றயர்வேன்மனநொந்தவண்வந்தனனால். (௭௬)

கய்யுங்கடனுந்நெகிழக்கணையோடுருள்வோற்காணா
மெய்யுந்தனுவும்மனனும்வெறிதேகிடமேல்வீழா
அய்யன்னீதான்யாவனந்தோவருள்கென்றயரப்
பொய்யொன்றறியாமைந்தன்கேணீயென்னப்புகல்வான். (௭௭)

சேலாகியமாமுதல்வன்றிருவுந்தியினீண்மலரின்
மேலாகியநான்முகனால்வேதங்களின்மாமுறையின்
பாலாகியயோனிகளின்பலவாம்வருணந்தருவான்
நாலாகியதாம்வருணந்தனின்முன்னெனைநல்கினனால். (௭௮)

அந்நான்மறையோன்வழியிலருள்காசிபனன்மைந்தன்
மின்னார்புரிநூன்மார்பன்விருத்தேசனன்மெய்ப்புதல்வன்
நன்னான்மறைநூற்றெரியுநாவான்சலபோசனெனச்
சொன்னான்முனிவன்றருசுரோசனன்யானென்றான். (௭௯)

இருகண்களுமின்றியதாய்தந்தைக்குமீங்கவர்கள்
பருகும்புனல்கொண்டகல்வான்படர்ந்தேன்பழுதாயினதால்
இருகுன்றனையபுயத்தாயபமென்றுணராதெய்தாய்
உருகுந்துயரந்தவிர்நீயூழின்செயலீதென்றே. (௮௦)

உண்ணீர்வேட்கைமிகவேயுயங்குமெந்தைக்கொருநீ
தண்ணீர்கொடுபோயளித்தென்சாவுமுரைத்தும்புதல்வன்
விண்மீதடைவான்றொழுதானெனவும்மவர்பால்விளம்பென்
றெண்ணீர்மையினான்விண்ணோரெதிர்கொண்டிடவேகினனால்.

மைந்தன்வரவேநோக்கும்வளமாதவன்பான்மகவோ
டந்தண்புனல்கொண்டணுகாவையயாவிதுபோதளவாய்
வந்திங்கணுகாதென்னோவந்ததென்றேநொந்தேம்
சந்தங்கமழுந்தோளாய்தழுவிக்கொளவாவெனவே. (௮௨)

அய்யாயானோரசனயோத்திநகரத்துள்ளேன்
மய்யார்களபந்துருவிமறைந்தேவதிந்தேனிருள்வாய்
பொய்யாவாய்மைப்புதல்வன்புனன்மொண்டிடுமோதையின்மேல்
கய்யாற்கணைசென்றதலாற்கண்ணிற்றெரியக்காணேன். (௮௩)

வீட்டுண்டலறுங்குரலால்வேழக்குரலன்றெனவே
ஓட்டந்தெதிராநீயாரெனவுற்றவெலாமுரையா
வாட்டந்தருநெஞ்சினனாய்நின்றான்வணங்காவானோர்
ஈட்டம்மெதிர்வந்திடவேயிறந்தேகினன்விண்ணிடையே. (௮௪)

அறுத்தாய்கணையாலெனவேயடியேன்றன்னையையா
கறுத்தேயருளாயானோகண்ணிற்கண்டேனல்லேன்
மறுத்தானில்லான்வனமொண்டிடுமோதையினெய்ததலால்
பொறுத்தேயருள்வாயென்றுவிருதாள்சென்னிபுனைந்தேன். ()

வீழ்ந்தாரயர்ந்தார்புரண்டார்விழிபோயிற்றின்றென்றார்
ஆழ்ந்தார்துன்பக்கடலுள்ளையாவையாவென்றார்
போழ்ந்தாய்நெஞ்சையென்றார்பொன்னாடதனிற்போய்நீ
வாழ்ந்தேயிருப்பத்தரியேம்வந்தேம்வந்தேமினியே. (௮௬)

என்றென்றயருந்தவரையிருதாள்வணங்கியானே
இன்றும்புதல்வன்னினிநீரேவும்பணிசெய்திடுவேன்
ஒன்றுந்தளர்வுற்றயரீரொழிமின்னிடரென்றிடலும்
வன்றிண்சிலையாய்கேண்மோவெனவேயொருசொல்வகுத்தான்.

கண்ணுண்மணிபோன்மகவையிழந்தும்முயிர்காதலியா
உண்ணாவெண்ணியிருந்தானுலகோரென்னென்றுரையார்
விண்ணின்றலைசேருதும்யாமெம்போல்விடலைபிரியப்
பண்ணும்பரிமாவுடையாயடைவாய்படர்வானென்று. (௮௮)

தாவாதொளிருங்குடையாய்தவறிங்கிதுநின்சரணம்
காவாயென்றுயதனாற்கடியசாபங்கருதேம்
ஏவாமகவைப்பிரிந்தின்றெம்போலிடருற்றனைநீ
போவாயகல்வானென்றுப்பொன்னாட்டிடைபோயினரால். ௮௯

சிந்தைதளர்வுற்றயர்தல்சிறிதும்மிலனாயின்சொல்
மைந்தனுளனென்றதனான்மகிழ்வோடிவண்வந்தனனால்
அந்தமுனிசொற்றமையுமண்ணல்வனமேகுதலும்
என்றனுயிர்வீகுதலுமிறையுந்தவறாவென்றான். (௯௦)

இம்மாமொழிதந்தரசன்னிடருற்றிடுபோழ்தினிலச்
செம்மாமயில்கோசலையுந்திகையாவுணர்வோய்வினளாய்
விம்மாநெறியின்விதியின்விளைவுந்தளர்வின்றொடர்வும்
அம்மாதவனும்விரைவோடவலந்தருநெஞ்சினனாய். (௯௧)

## வே று.

உரைசெய்பெருமையுயர்தவத்தோரோங்கல்
புரைசெய்மதகளிற்றான்பொற்கோயின்முன்னர்
முரைசமுழங்கமுடிசூட்டமொய்த்தாண்
டரைசரினிதிருந்தநல்லவையினானான். (௯௨)

வந்தமுனியைமுகநோக்கிவாள்வேந்தர்
எந்தைபுகுதற்கிடையூறுண்டாயதோ
அந்தமில்சோகத்தழுதகுரற்றானென்ன
சிந்தைதெளிந்தோய்தெரியெமக்கிவவென்றுரைத்தார். (௯௩)

கொண்டாள்வரமிரண்டுகைகயர்கோன்கொம்பவட்குத்
தண்டாதசெங்கோற்றயரதனுந்தானளித்தான்
ஒண்டார்முகிலைவனம்போகென்றொருப்படுத்தாள்
எண்டானும்வேறில்லையீதடுத்தவாறென்றான். (௯௪)

வேந்தன்பணியினாற்கைகேசிமெய்ப்புதல்வன்
பாந்தண்மிடைக்கிடந்தபாரளிப்பானாயினான்
ஏந்துதடந்தோளிராமன்றிருமடந்தை
காந்தனொருமுறையேகாடுறைவானாயினான். (௯௫)

வாரார்முலையாருமற்றுள்ளமாந்தர்களும்
ஆராதகாதலரசர்களுமந்தணரும்
பேராதவாய்மைப்பெரியோனுரைசெவியில்
சாராதமுன்னந்தயரதனைப்போல்வீழ்ந்தார். (௯௬)

புண்ணுற்றதீயிற்புகையுற்றுயிர்பதைப்ப
மண்ணுற்றயர்ந்துமறுகுற்றுடம்பெல்லாம்
கண்ணுற்றவாரிகடலூற்றதந்நிலையே
விண்ணுற்றதெம்மருங்கும்விட்டழுதபேரோசை. (௯௭)

மாதருங்கலமுமங்கலமுஞ்சிந்தித்தம்
கோதைபுடைபெயரக்கூற்றனையகண்சிவப்பப்
பாதமலர்சிவப்பத்தாம்பதைத்துப்பார்சேர்ந்தார்
ஊதையெறியவொசிபூங்கொடியொப்பார். (௯௮)

ஆவாவரசனருளிலனேயாமென்பார்
காவாவறத்தையினிக்கைவிடுவேம்யாமென்பார்
தாவாதமன்னர்தலைத்தலைவீழ்ந்தேங்கினார்
மாவாதஞ்சாய்த்தமராமரமேபோல்கின்றார். (௯௯)

கிள்ளையொடுபூவையழுதகிளர்மாடத்
துள்ளுறையும்பூசையழுதவுருவறியாப்
பிள்ளையழுதபெரியோரையென்சொல்ல
வள்ளல்வனம்புகுவானென்றுரைத்தமாற்றத்தால். (க00)

சேதாம்பற்போதனையசெங்கனிவாய்வெண்டளவப்
போதாம்பற்றோன்றப்புணர்முலைமேற்பூந்தாள
மாதாம்பற்றென்னமழைக்கண்ணீராலியுக
நாதாம்பற்றாமழலைநங்கைமாரேங்கினார். (க0க)

ஆவுமழுதவதன்கன்றழுதவன்றலர்ந்த
பூவுமழுதபுனற்புள்ளழுதகள்ளொழுகும்
காவுமழுதகளிறழுதகால்வயப்போர்
மாவுமழுதனவம்மன்னவனைமானவே. (க0உ)

ஞானீயுமுய்கலானென்றேநாயகனைக்
கானீயுமென்றுரைத்தகைகேசியுங்கொடிய
கூனீயுமல்லாற்கொடியார்பிறருளரோ
மேனீயுமின்றிவெறுநீரேயாயினார். (க0ங)

தேறாதறிவழிந்தாரெங்குலப்பார்தேரோட
நீறாகிச்சுண்ணநிறைந்ததெருவெல்லாம்
ஆறாகியோடினகண்ணீராருநெஞ்சம்
கூறாகியோடாதவித்துணையேகுற்றமே. (க0ச)

மண்செய்தபாவமுளதென்பார்மாமலர்மேல்
பெண்செய்தபாவமதனிற்பெரிதென்பார்
புண்செய்தநெஞ்சைவிதியென்பார்பூதலத்தோர்
கண்செய்தபாவங்கடலிற்பெரிதென்பார். (க0ரு)

ஆளான்பரதனரசென்பாராயினினி
மீளானமக்குவிதிகொடிதுகாணென்பார்
கோளாகிவந்தவாகொற்றமுடிதானென்பார்
மாளாதநம்மின்மனவலியாராரென்பார். (க0சு)

ஆதியரசனருங்கேகயன்மகண்மேல்
காதன்முதிரக்கருத்தழிந்தானுமென்பார்
சீதைமணவாளன்றன்னோடுந்தீக்கானம்
போதுமதுவன்றேற்புகுதுமெரியென்பார். (க0எ)

கய்யானிலந்தடவிக்கண்ணீர்மெழுகுவார்
உய்யாள்போற்கோசலையென்றோவாதுவெய்துயிர்ப்பார்
அய்யாவிளங்கோவேயாற்றுதியோநீயென்பார்
நெய்யாரழலுற்றதுற்றாரந்நீணகரார். (க0அ)

தள்ளூறுவேறில்லைத்தன்மகற்குப்பார்கொள்வான்
எள்ளூறியகருமநேர்ந்தாளிவளென்னாக்
கள்ளூறுசெவ்வாய்க்கணிகைகாண்கைகேசி
உள்ளூறுகாதலிலள்போலென்றுள்ளழிந்தார். (க0௯)

நின்றுதவமியற்றித்தான்றீரநேர்ந்ததோ
அன்றிவ்வுலகத்துளாருயிராய்வாழ்வாரைக்
கொன்றுகளையக்குறித்தபொருளன்றோ
நன்றுவரங்கொடுத்தநாயகற்குநன்றென்பார். (கக0)

பெற்றுடையமண்ணவனுக்கீந்துபிறந்துலகம்
முற்றுடையகோவைப்பிரியாதுமொய்த்தீண்டி
உற்றுறைதும்யாருமுறையவேசின்னாளில்
புற்றுடையகாடெல்லாநாடாகிப்போமென்பார். (ககக)

என்னேநிருபரியற்கையிருந்தவா
தன்னேரிலாததலைமகற்குத்தாரணியை
முன்னேகொடுத்துமுறைதிறம்பத்தம்பிக்குப்
பின்னேகொடுத்தாற்பிழையாதோமெய்யென்பார். (ககஉ)

கோதைவரிவிற்குமரற்கொடுத்தநில
மாதையொருவர்புணர்வராவஞ்சித்த
பேதைசிறுவனைப்பின்பார்த்துநிற்குமா
சீதைபிரியினுந்தீராத்திருவென்பார். (ககங)

உந்தாதுநெய்வார்த்துதவாதுகாலெறிய
நந்தாவிளக்கிணடுங்குகின்றநங்கைமார்
செந்தாமரைத்தடங்கட்செவ்வியருணோக்கம்
அந்தோபிரிதுமோவாவிதியேயோவென்பார். (ககச)

வேறு.

கேட்டானிளையோன்கிளர்ஞாலம்வரத்தினாலே
மீட்டாளவித்தாள்வனந்தம்முனின்வெம்மைமுற்றித்
தீட்டாதவேற்கட்சிறுதாயெனயாவராலும்
மூட்டாதகாலக்கடைத்தீயெனமூண்டெழுந்தான். (ககரு)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.


கண்ணிற்கடைத்தீயுகநெற்றியிற்கற்றைநாற
விண்ணிற்சுடருஞ்சுடர்தோன்றமெய்ந்நீர்விரிப்ப
உண்ணிற்குமுயிர்ப்பெனுமூதைபிறக்கின்ற
அண்ணற்பெரியோன்றனதாகியின்மூர்த்தியொத்தான். (௧௧௬)

சிங்கக்குருளைக்கிடுதீஞ்சுவையூனைநாயின்
வெங்கட்கடுங்குட்டியையூட்டவிரும்பினாளே
நங்கைக்கறிவின்றிறநன்றிதுநன்றிதென்னாக்
கங்கைக்கிறைவன்கடகக்கைபுடைத்துநக்கான். (௧௧௭)

சுற்றார்மணியார்வடிவாள்புடைதோன்றவார்த்து
விற்றாங்கிவாளிப்பெரும்புட்டில்புறத்துவீக்கிப்
பற்றார்ந்தசெம்பொற்கவசம்பணிமேருவாங்கோர்
புற்றாமெனவோங்கியதோளொடுமார்புபோர்க்க. (௧௧௮)

அடியிற்சுடர்பொற்கழலார்கலிநாணவார்ப்பப்
பொடியிற்றடவுஞ்சிறுநாண்பெரும்பூசலோசை
இடியிற்றொடராக்கடலேழுமடுத்திஞ்ஞாலம்
முடியிற்குமுறும்மழைமும்மையின்மேன்முழங்க. (௧௧௯)

வானுந்நிலனும்முதலீறில்வரம்பில்பூதம்
மேனின்றுகீழ்காறும்விரிந்தனவீழ்வபோலத்
தானுந்தனதம்முனுமல்லதுமும்மைஞாலத்
தூனும்முயிரும்முடையார்களுடைந்தொதுங்க. (௧௨௦)

புவிப்பாவைபரங்கெடப்போருவந்தோரையெல்லாம்
அவிப்பானுமவித்தவராக்கையையண்டமுற்றக்
குவிப்பானுமெனக்கொருகோவிணைக்கொற்றமௌலி
கவிப்பானுநின்றேனிதுகாக்குனர்காமினென்றான (௧௨௧)

விண்ணாட்டவர்மண்ணவர்விஞ்சையர்நாகர்மற்றும்
எண்ணாட்டவர்யாவருநிற்கவோர்மூவராகி
மண்ணாட்டினர்காட்டினர்வீட்டினர்வந்தபோதும்
பெண்ணாட்டமொட்டேனினிப்பேருலகத்துளென்றான். (௧௨௨)

காலைக்கதிரோனடுவுற்றதொர்வெம்மைகாட்டி
ஞாலத்தவர்கோமகனந்நகரத்துநாப்பண்
மாலைச்சிகரத்தணிமந்தரமேருமுந்தை
வேலைத்திரிகின்றதுபோற்றிரிகின்றவேலை. (௧௨௩)

வேற்றுக்கொடியாள்விளைவித்தவினைக்குவிம்மித்
தேற்றத்தெளியாதயர்சிற்றவைபாலிருந்தான்
ஆற்றற்றுணைத்தம்பிதன்விற்புயலண்டகோளம்
கீற்றொத்துடையப்படுநாணுருமேறுகேட்டான். (௧௨௪)

வீறாக்கியபொற்கலன்வில்லிடவாரமின்ன
மாறாத்தனிச்சொற்றுளிமாரிவழங்கிவந்தான்
காறாக்கனிமிர்ந்துபுகைந்துகனன்றுபொங்கும்
ஆறாக்கனலாற்றுமொரஞ்சனமேகமென்ன. (௧௨௫)

மின்னொத்தசீற்றக்கனல்விட்டுவிளங்கநின்ற
பொன்னொத்தமேனிப்புயலொத்ததடக்கையானை
என்னத்தவெண்ணீயிமையோரைமுனிந்திலாதாய்
சன்னத்தனாகித்தனுவேந்துதற்கேதுவென்றான். (௧௨௬)

மெய்யைச்சிதைவித்துநின்மெய்ம்முறைநீத்தநெஞ்சம்
மய்யிற்கரியாளெதிர்நின்னைநன்மௌலிசூட்டல்
செய்யக்கருதித்தடைசெய்குநர்தேவரேனும்
துய்யைச்சுடுவெங்கனலிற்சுடுவான்றுணிந்தேன். (௧௨௭)

வலக்கார்முகமென்கையதாகவவ்வானுளோரும்
விலக்காரவர்வந்துவிலக்கினுமென்கைவாளிக்
கிலக்காவெரிவித்துலகேழினொடேழுமன்னர்
குலக்காவலுமின்றுனக்கியான்றரக்கோடியென்றான். (௧௨௮)

இளையானிதுகூறவிராமனியைந்தநீதி
வளையாவருநன்னெறிநின்னறிவாகுமன்றே
உளையாவறம்வற்றிடவூழ்வழுவுற்றசீற்றம்
விளையாதநிலத்துனக்கெங்ஙன்விளைந்ததென்றான். (௧௨௯)

நீண்டானதுரைத்தலுநித்திலந்தோற்கநக்குச்
சேண்டான்றொடர்மாநிலநின்னதென்றந்தைசெப்பப்
பூண்டாய்பகையாலிழந்தேவனம்போதியென்றால்
யாண்டோவடியேற்கினிச்சிற்றமடுப்பதென்றான். (௧௩0)

நின்கட்பரிவில்லவர்நீள்வனத்துன்னைநீக்கப்
புன்கட்பொறியாக்கைபொறுத்துயிர்போற்றுகேனோ
என்கட்புல்முன்னுனக்கீந்துளைத்தில்லையென்ற
வன்கட்புலந்தாங்கியமன்னவன்காண்கொலென்றான். (௧௩௧)

பின்குற்றமன்னும்பயக்கும்மாசென்றல்பேணேன்
முன்கொற்றமன்னன்முடிகொள்கெனக்கொள்ளமூண்ட
தென்குற்றமன்றோவிகன்மன்னவன்குற்றம்யாதோ
மின்குற்றொளிரும்வெயிறீக்கொடைமைந்தவேலோய். (௧௱௨)

நதியின்பிழையன்றுநறும்புனலின்மையற்றே
பதியின்பிழையன்றுபயந்துநமைப்புரந்தாள்
மதியின்பிழையன்றுமகன்பிழையன்றுமைந்த
விதியின்பிழைநீயிதற்கென்னைவெகுண்டதென்றான். (௧௱௩)

உதிக்கும்முலையுள்ளுறுதீயெனவூதைபொங்கக்
கொதிக்கும்மனமெங்ஙனமாற்றுவென்கோளிழைத்தாள்
மதிக்கும்மதியாய்முதல்வானவர்க்கும்வலீஇதாம்
விதிக்கும்விதியாகுமென்விற்றொழில்காண்டியென்றான். (௧௱௪)

ஆய்தத்தவனவ்வுரைகூறலுமையநின்றன்
வாய்தந்தனகூறுதியோமறைதந்தநாவால்
நீய்தந்ததன்றேநெறியோர்கணிலாததீன்ற
தாய்தந்தையென்றாலவர்மேற்சலிக்கின்றதென்னே. (௧௱௫)

நற்றாதையுநீதனிநாயகனீவயிற்றில்
பெற்றாயுநீயேபிறரில்லைப்பிறர்க்குநல்கக்
கற்றாயிதுகாணுதியின்றெனக்கைமறித்தான்
முற்றாமதியம்மிலைந்தான்முனிந்தானையன்றான். (௧௱௬)

வரதன்பகர்வான்வரம்பெற்றவடானிவ்வையம்
சரதம்முடையாளவளென்றனித்தாதைசெப்பப்
பரதன்பெறுவானினியான்படைக்கின்றசெல்வம்
விரதம்மிதினல்லதுவேறினியாவதென்றான். (௧௱௭)

ஆன்றான்பகர்வான்பினுமையவிவ்வையமையல்
தோன்றாநெறிவாழ்துணைத்தம்பியைப்போர்தொலைத்தோ
சான்றோர்புகழுந்தவத்தாதையைவாதைகொண்டோ
ஈன்றாளைவென்றோவினியிக்கதந்தீர்வதென்றான். (௧௱௮)

செல்லுஞ்சொல்வல்லானெதிர்தம்பியுந்தெவ்வர்சொல்லும்
சொல்லுஞ்சுமந்தேனிருந்தோளெனச்சோம்பியோங்கும்
கல்லுஞ்சுமந்தேன்கணைப்புட்டிலுங்கட்டமைந்த
வில்லுஞ்சுமக்கப்பிறந்தேன்வெகுண்டென்னையென்றான். (௧௱௯)

நன்சொற்கடந்தாண்டெனைநாளும்வளர்த்ததாதை
தன்சொற்கடந்தெற்கரசாள்வதுதக்கதன்றால்
என்சொற்கடந்தாலுனக்கியாதுளதீனமென்றான்
தென்சொற்கடந்தான்வடசொற்கலைக்கெல்லைதேர்ந்தான். (௧௬௦)

சிற்றந்துறந்தானெதிர்நின்றுதெரிந்துசெப்பும்
மாற்றந்துறந்தான்மறைநான்கெனவாங்கல்செல்லா
நாற்றெண்டிசைவேலையினம்பிதனுணையாலே
ஏற்றந்தொடங்காக்கடலிற்றணிவெய்திநின்றான். (௧௬௧)

அன்னான்றனையையனுமாதியொடந்தமென்று
தன்னாலுமளப்பருந்தானுந்தன்பாங்கர்நின்ற
பொன்மானுரியானுந்தழீஇயெனப்புல்லிப்பின்னைச்
சொன்மாண்புடையன்னைசுமித்திரைகோயில்புக்கான். (௧௬௨)

கண்டாண்மகனும்மகனுந்தனகண்கள்போல்வார்
தண்டாவனஞ்செல்வதற்கேசமைந்தார்கடம்மைப்
புண்டாங்குநெஞ்சத்தளாய்ப்படிமேற்புரண்டாள்
உண்டாயதுன்பக்கடற்கெல்லையுணர்ந்திலாதாள். (௧௬௩)

சோர்வாளையோடித்தொழுதேந்தினன்றுன்பமென்னும்
ஈர்வாளைவாங்கமனந்தேற்றுதற்கேற்றசெய்வான்
போர்வாளரசர்க்கிறைபொய்த்தனணுக்கில்லேன்
கார்வானெடுங்கானிறைகண்டினென்மீள்வெனென்றான். (௧௬௪)

கான்புக்கிடினுங்கடல்புக்கிடினுங்கலிப்பேர்
வான்புக்கிடினுமெனக்கன்னவைமாணயோத்தி
யான்புக்கதொக்குமெனையார்நலிகிற்குமீட்டார்
ஊன்புக்குயிர்புக்குணர்புக்குலையற்கவென்றான் (௧௬௫)

தாயாற்றுகிலாடனையாற்றுகின்றார்கடம்பால்
தீயாற்றுகிலார்தனிச்சிந்தையினின்றுசெற்ற
நோயாற்றுகில்லாவுயிர்போலநுடங்கிடையார்
மாயாப்பழியாடரவற்கலையேந்திவந்தார். (௧௬௬)

கார்வானமொப்பான்றனைக்காண்டொறுங்காண்டொறும்போய்
நீராயுகக்கண்ணினுநெஞ்சழிகின்றநீரார்
பேராவிடர்பட்டயலாருறுபீழைகண்டும்
நீராமனத்தாடரவந்தனசீரமென்றார். (௧௬௭)

வாணுத்திலவெண்ணகையாதரவள்ளநம்பி
யாணர்த்திருநாடிழைப்பித்தவரீந்தவெல்லாம்
பூணப்பிறந்தானுநின்றானைவைபோர்விலோடும்
காணப்பிறந்தேனுநின்றேனைவைகாட்டுமென்றான். (க௪௮)

அன்னானவர்தந்தனவாதரத்தோடுமேந்தி
இன்னாவிடர்தீர்ந்துடனேகெனவெம்பிராட்டி
சொன்னாலதுவேதுணையாமெனத்தூயநங்கை
பொன்னாரடிமேற்பணிந்தானவளும்புகன்றாள். (க௪௯)

ஆகாததன்றாலுனக்கவ்வனமிவ்வயோத்தி
மாகாதலிராமனம்மன்னவன்வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர்நம்பூங்குழற்சீதையென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலுமேதமென்றாள். (க௫௦)

பின்னும்பகர்வாண்மகனேயிவன்பின்செறம்பி
என்னும்படியன்றடியாரினிலேவல்செய்தி
மன்னுநகர்க்கேயிவன்வந்திடின்வாவதன்றேல்
முன்னம்முடியென்றனள்பான்முலைசோரநின்றாள். (க௫௧)

வேறு.

இருவருக்தொழுதனரிரண்டுகென்றொரீஇ
வெருவருமாவினிற்றாயும்விம்மினாள்
பொருவருங்குமரரும்போயினார்புறம்
திருவரைத்துகிலொரீஇச்சீரைசாத்தியே. (க௫௨)

தான்புனைசீரையைத்தம்பிசாத்திடத்
தேன்புனைதெரியலான்செய்கைநோக்கினான்
வான்புனையிசையினாய்மறுக்கிலாதுநீ
யான்புகல்வனையதோருறுதிகேளெனா. (க௫௩)

அன்னையரனைவருமாழிவேந்தனும்
முன்னையரல்லர்வெந்துயரின்மூழ்கினார்
என்னையும்பிரிந்தனரிடருறாவகை
உன்னைநீயென்பொருட்டுதவுவாயென்றான். (க௫௪)

ஆண்டகையம்மொழிபகரவன்பனும்
தூண்டகுதிரள்புயந்துளங்கத்துண்ணென
மீண்டதோருயிரிடைவிம்மவிம்முவான்
ஈண்டுனக்கடியனேன்பிழைத்ததியாதென்றான். (க௫௫)

நீருளவெனினுளமீனுநீலமும்
பாருளவெனினுளயாவும்பார்ப்புறில்
நாருளதனுவுளாய்நானுஞ்சீதையும்
ஆருளரொளினுளெமருளுவாயென்றான் (௧௫௬)

பைந்தொடியொருத்திசொற்கொண்டுபார்மகள்
நைந்துயிர்நடுங்கவுநடத்திகானென
உய்ந்தனனிருந்தனனுண்மைகாவலன்
மைந்தனென்றினையசொல்வழங்கினாயென. (௧௫௭)

மாறினியென்னைநீவனங்கொள்வாயென
ஏறினவெகுளியையாதுமுற்றுற
ஆறினைதவிர்கெனவையவானையில்
கூறியமொழியினுங்கொடியதாமென்றான். (௧௫௮)

செய்துடைச்செல்வயோயாதுந்தீர்ந்தெமை
கய்துடைத்தேகவுங்கடவையோவையா
நெய்துடைத்சடையலர்நேயமாதர்கண்
மய்துடைத்துறைபுகும்வயங்கொள்வேலினாய். (௧௫௯)

உரைத்தபின்னிராமனென்றுரைக்கநேர்ந்திலன்
வரைத்தடந்தோளினான்வதனநோக்கினான்
விரைத்தடந்தாமரைக்கண்ணின்மிக்கநீர்
நிரைத்திடையிடைவிழநெடிதுநிற்கின்றான். (௧௬௦)

அவ்வையினரசவைநின்றுமன்பினன்
எவ்வமிலிருந்தவமுனிவனெய்தினான்
செவ்வியகுமரருஞ்சென்னிதாழ்ந்தனர்
கவ்வையம்பெருங்கடன்முனியுங்கால்வைத்தான் (௧௬௧)

அன்னவர்முகத்தினோடகத்தைநோக்கினான்
பொன்னனைச்சீரையின்பொலிவுநோக்கினான்
என்னினியுணர்த்துவதெடுத்ததுன்பத்தால்
தன்னையுமுணர்ந்திலனுணருந்தன்மையான். (௧௬௨)

வாழ்வினைநுதலியமங்கலத்துநாள்
தாழ்வினையதுவரச்சீரைசாத்தினான்
சூழ்வினைநான்முகத்தொருவர்ச்சூழினும்
ஊழ்வினையொருவராலொழிக்கற்பாலதோ. (௧௬௩)

வெவ்வினையவடரவிளைந்ததேயுமன்
றிவ்வினையிவன்வயினெய்தற்பாற்றுமன்
றெவ்வினைநிகழ்ந்ததோவேவரெண்ணமோ
செவ்விதினொருமுறைதெரியும்பின்னென்றான். (கசுச)

விற்றடந்தாமரைச்செங்கண்வீரனை
உற்றடைந்தையநீயொருவியோங்கிய
கற்றடங்காணுதியென்னிற்கண்ணகல்
மற்றடந்தானையான்வாழ்கிலானென்றான். (கசுரு)

அன்னவன்பணிதலையேந்தியாற்றுதல்
என்னதுகடனவனிடரைநீக்குதல்
நின்னதுகடனிதுநெறியுமென்றனன்
பன்னகப்பாயலுட்பள்ளிநீங்கினான். (கசுசு)

வெவ்வரம்பையில்சுரம்விரவென்றானலன்
தெவ்வரம்பனையசொற்றீட்டினானெனக்
கவ்வரம்பொருதவேலரசனுய்கிலா
இவ்வரந்தருவனென்றேன்றதுண்டென்றான். (கசுஎ)

என்றனனெந்தையில்வரங்களேவினாள்
ஈன்றவள்யானதுசென்னியேந்தினேன்
சான்றெனநின்றநீதடுத்தியோவென்றான்
தோன்றியநல்லறநிறுத்தத்தோன்றினான். (கசுஅ)

என்றபின்முனிவனொன்றியம்பநேர்ந்திலன்
நின்றனனெடுங்கணீர்நிலத்துநீர்த்துக
குன்றனதோளவன்றொழுதுகொற்றவன்
பொன்றிணிநெடுமதில்வாயில்போயினான். (கசுகூ)

சுற்றியசீரையன்றொடர்ந்ததம்பியன்
முற்றியவுவகையன்முளரிப்போதினும்

உற்றதையொருவகையுணர்த்துவாமரோ. (கஎ0)

அந்தணருந்தவரவனிகாவலர்
நந்தலினகருளார்நாட்டுளோர்கடம்
சிந்தையென்புகல்வதுதேவருள்ளமும்
வெந்தனர்மேல்வருமுறுதிவேண்டலார். (கஎக)

ஐயனைக்காண்டலுமணங்கனார்கடாம்
மொய்யிளந்தளிர்களான்முளரிமேல்விழும்
மையலின்மதுகரங்கடியுமாறெனக்
கைகளின்மதர்நெடுங்கண்களெற்றினார். (௧௭௨)

தம்மையுமுணர்ந்திலர்தணிப்பிலன்பினால்
அம்மையினிருவினையகற்றவோவன்றேல்
விம்மியபேருயிர்மீண்டிலாமைகொல்
செம்மறன்றாதையிற்சிலவர்முந்தினார். (௧௭௩)

விழுந்தனர்சிலர்சிலர்விம்மிவிம்மிமேல்
எழுந்தனர்சிலர்முகத்திழிகண்ணீரிடை
அழுந்தினர்சிலர்பதைத்தளகவல்லியின்
கொழுந்தெரியுற்றெனத்துயரங்கூர்கின்றார். (௧௭௪)

கரும்பனமொழியினர்கண்பனிக்கிலர்
வரம்பறுதுயரினான்மயங்கியேகொலாம்
இரும்பனமனத்தினரென்னநின்றனர்
பெரும்பொருளிழந்தவர்போலும்பெற்றியார். (௧௭௫)

நெக்கனவுடலுயிர்நிலையினின்றில
இக்கணமிக்கணமென்னுந்தன்மையும்
புக்கனபுறத்தனபுண்ணிற்கண்மலர்
உக்கனநீர்வறந்துதிரவாரியே. (௧௭௬)

இருகையிற்கரிநிகரெண்ணிறந்தவர்
பெருகையிற்பெயர்த்தனர்தலையைப்பேணலர்
ஒருகையிற்கொண்டனருருட்டுகின்றனர்
சுரிகையிற்கண்மலர்சூன்றுநீக்கினார். (௧௭௭)

சிந்தினவணிமணிசிதறிவீழ்ந்தன
பைந்துணர்மாலையிற்பரிந்தமேகலை
நந்தினர்நகையொளிவிளக்கநங்கைமார்
சுந்தரவதனமுமதிக்குத்தோற்றவே. (௧௭௮)

அறுபதினாயிரரரசன்றேவியர்
மறுவறுகற்பினர்மழைக்கண்ணீரினர்
சிறுவனைத்தொடர்ந்தனர்திறந்தவாயினர்
எறிதிரைக்கடலெனவிரங்கியேங்கினார். (௧௭௯)

கன்னிநன்மயில்களுங்குயிற்கணங்களும்
அன்னமுஞ்சிறையிழந்தவனிசேர்ந்தன
என்னவீழ்ந்தழுந்தனரிராமனல்லது
மன்னுயிர்ப்புதல்வரைமற்றும்பெற்றிலார். (௧௮0)

கிளையினுநரம்பினுவிரம்புங்கேழன
அளவிறந்துயிர்க்கவிட்டாரற்றுந்தன்மையால்
தொளைபடுகுழலினோடியாழ்க்குத்தோற்றன
இளையவரமுதினுமினியசொற்களே. (௧௮௧)

புகலிடங்கொடுவனம்போனுமென்றுதம்
மகன்வயினிரங்குறுமகளிர்வாய்களால்
அகன்மதினெடுமனையரத்தவாம்பல்கள்
பகலிடைமலர்ந்ததோர்பழனம்போன்றவே. (௧௮௨)

திடருடைக்குங்குமச்சேறுஞ்சாந்தமும்
இடையிடைவண்டலிட்டாரமீர்த்தன
மிடைமுலைக்குவடொரீஇமேகலைத்தடங்
கடலிடைப்புகுந்தகட்கலுழியாறரோ. (௧௮௩)

தண்டலைக்கோசலைத்தலைவன்மாதரைக்
கண்டனனிரவியுங்கமலவாண்முகம்
விண்டலத்துறையுநல்வேந்தற்காயினும்
உண்டிடருற்றபோதென்னுமுற்றன. (௧௮௪)

தாயருங்கிளைஞருஞ்சார்ந்துளார்களும்
சேயருமணியருஞ்சிறந்தமாதரும்
காயெரியுற்றனரனையகௌவையர்
வாயிலுமுன்றிலுமறையமொய்த்தனர். (௧௮௫)

இரைத்தனரிரைத்தெழுந்தேங்கியெங்கணும்
திரைப்பெருங்கடலெனத்தொடர்ந்துபின்செல
உரைப்பதையுணர்கிலனொழிப்பதோர்கிலன்
வரைப்புயத்தண்ணறன்மனையைநோக்கினன். (௧௮௬)

நன்னெடுகளிர்முடிசூடநன்மணிப்
பொன்னெடுந்தேரொடும்பவனிபோனவன்
துன்னெடுஞ்சீரையுஞ்சுற்றிமீண்டுமெப்
பொன்னெடுந்தெருவிடைப்போதன்மேயினான். (௧௮௭)

அஞ்சனமேனியிவ்வழகற்கெய்திய
வஞ்சனைகண்டபின்வகிர்ந்துநீங்கலா
நெஞ்சினும்வலிதுயிர்நிலைப்பதென்சில
நஞ்சினும்வலியநந்நலமென்றார்சிலர். (௧௮௮)

மண்கொடுவருமெனவழியிருந்தியாம்
எண்கொடுசுடர்வனத்தெய்தல்காணவோ
பெண்கொடுவினைசெயப்பெற்றநாட்டினில்
கண்கொடுபிறத்தலுங்கடையென்றார்சிலர். (௧௮௯)

முழுவதேபிறந்துலகுடையமொய்ம்பினோன்
உழுவைசேர்கானகத்துறைவென்யானென
எழுவதேயெழுதல்கண்டிருப்பதேயிருந்
தழுவதேயழகிதிவ்வன்பென்றார்சிலர். (௧௯௦)

வலங்கடிந்தேழையராயமன்னரை
நலங்கடிந்தறங்கெடநயக்கலீர்களும்
குலங்கடிந்தான்வலிகொண்டகொண்டலை
நிலங்கடிந்தாளொடுநிகரென்றார்சிலர். (௧௯௧)

திருவரைசுற்றியசீரையாடையன்
பொருவருந்துயரினன்றொடர்ந்துபோகின்றான்
இருவரைப்பயந்தவளீன்றகான்முளை
ஒருவனோவிவற்கிவ்வூருறவென்றார்சிலர். (௧௯௨)

முழுக்கலின்வலியநம்மூரிநெஞ்சினை
மழுக்களிற்பிளத்துமென்றோடுவார்வழி
ஒழுக்கியகண்ணினிற்கலுழியூற்றிடை
இழுக்கலில்வழுக்கிவீழ்ந்திடருற்றார்சிலர். (௧௯௩)

பொன்னணிமணியணிமெய்யிற்போக்கினர்
மின்னெனமின்னெனவிளங்குமெய்விலைப்
பன்னிறத்துகிலினைப்பறித்துநீக்கினர்
சின்னநுண்டுகிலினைப்புனைகின்றார்சிலர். (௧௯௪)

நிறைமகவுடையவர்நெறிசெல்லைம்பொறி
குறைமககுறையினுங்கொடுப்பராமுயிர்
முறைமகன்வனம்புகமொழியைக்காக்கின்ற
இறைமகன்றிருமனமிரும்பென்றார்சிலர். (௧௯௫)

வாங்கியமருங்குலார்வைத்தகொங்கையர்
பூங்கொடியொதுங்குவபோலொதுங்கினர்
ஏங்கியகுரலினரிணைந்தகாந்தளில்
தாங்கியசெங்கைதந்தலைகண்மேலுளார். (௧௯௬)

தலைக்குவட்டயன்மதிதவழுமாளிகை
நிலைக்குவட்டிடையிடைநின்றநங்கைமார்
முலைக்குவட்டிழிகணீராலிமொய்த்துக
மலைக்குவட்டகவுழுமயிலின்மாழ்கினார். (௧௯௭)

மஞ்செனவகிற்புகைவழங்குமாளிகை
எஞ்சலில்சாளரத்திரங்குமின்சொலார்
அஞ்சனக்கண்ணினீரருவிசோர்தரப்
பஞ்சரத்திருந்தழுங்கிளியிற்பண்ணினார். (௧௯௮)

நன்னெடுங்கண்களினின்றநீர்த்துளி
தன்னெடுந்தாரைகடளத்தின்வீழ்தலால்
மன்னெடுங்குமரன்மாட்டழுங்கிமாடமும்
பொன்னெடுங்கண்குழித்தழுவபோன்றவே. (௧௯௯)

மக்களைமறந்தனர்மாதர்தாயரைப்
புக்கிடமறிந்திலர்புதல்வர்பூசலிட்
டுக்கனருயங்கினருருகிச்சோர்ந்தனர்
துக்கநின்றறிவினைச்சூறையாடவே. (௨௦௦)

காமரங்கனிந்தெனக்கனிந்தமென்மொழி
மாமடந்தையரொலாமறுகுசேர்தலால்
தேமருநறுங்குழற்றிருவினீங்கிய
தாமரையொத்தனதவளமாடமே. (௨௦௧)

மழைக்குலம்புரைகுழல்விரிந்துமண்ணுற
குழைக்குலமுகத்தியர்குழாங்கொண்டேகினர்
இழைக்குலஞ்சிதறிடவேவுண்டோய்வுறும்
உழைக்குலமுழைப்பனவொத்தொர்பாலெலாம். (௨௦௨)

கொடியடங்கினமனைக்குன்றங்கோமுர
சிடியடங்கினமுழக்கிழந்தபல்லியம்
படியடங்கலுநிமிர்பசுங்கண்மாரியால்
பொடியடங்கினமதிற்புறத்துவீதியே. (௨௦௩)

அட்டிலுமிழ்ந்தனபுகையகிற்புகை
நெட்டிலுமிழ்ந்தனநிறைந்தபால்இளி
வட்டிலுமிழ்ந்தனமகளிர்காண்மணித்
தொட்டிலுமிழ்ந்தனமகவுஞ்சோரவே. (௨0௪)

ஒளிதுறந்தனமுகமுயிர்துறந்தென
துளிதுறந்தனமுகிற்றொகையுந்தூயநீர்த்
தளிதுறந்தனபரிதானயானையும்
களிதுறந்தனமலர்க்கள்ளுண்வண்டினே. (௨0௫)

நிழல்பரிந்தனகுடைநெடுங்கண்ணேழையர்
குழல்பிரிந்தனமலர்குமரர்தாளிணைக்
கழல்பிரிந்தனசினக்காமன்வாளியும்
அழல்பிரிந்தனதுணைபிரிந்தவன்றிலே. (௨0௬)

தாரொலிநீத்தனபுரவிதண்ணுமை
வாரொலிநீத்தனமழையின்விம்முறும்
தேரொலிநீத்தனதெருவுந்தெண்டிரை
நீரொலிநீத்தனநீத்தம்போலவே. (௨0௭)

முழவெழுமொலியிலமுறையின்யாழ்நரம்
பெழவெழுமொலியிலவிமைப்பில்கண்ணினர்
விழவெழுமொலியிலவேறுமொன்றில
அழவெழுமொலியிலவரசவீதியே. (௨0௮)

தெள்ளொலிச்சிலம்புகள்சிலம்புபொன்மனை
நள்ளொலித்திலநளிர்கலையுமன்னவே
புள்ளொலித்திலபுனல்பொழிலுமன்னவே
கள்ளொலித்திலமலர்களிறுமன்னவே. (௨0௯)

செய்ம்மறந்தனபுனல்சிவந்தவாய்ச்சியர்
கைம்மறந்தனபசுங்குழவிகாந்தெரி
நெய்ம்மறந்தனநெறியறிஞர்யாவரும்
மெய்ம்மறந்தனரொலிமறந்தவேதமே. (௨௧0)

ஆடினரழுதனரழுதவேழிசை
பாடினரழுதனர்பரிந்தகோதையர்
ஊடினரழுதனருயிரினன்பரைக்
கூடினரழுதனர்குழாங்குழாங்கொடே. (௨௧௧)

நீட்டிலகளிறுகைந்நீரின்வாய்புதல்
பூட்டிலபுரவிகள்புள்ளும்பார்ப்பினுக்
கீட்டிலவிரைபுனிற்றீன்றகன்றையும்
ஊட்டில்கறவைகன்றுருகிச்சோர்ந்தவே. (௨௧௨)

மாந்தர்தம்மொய்ம்பினின்மகளிர்கொங்கையாம்
ஏந்திளநீர்களும்வறுமையெய்தின
சாந்தமம்மகிணர்தம்முடியிற்றையலார்
கூந்தலின்வறுமையம்மலரின்கூலமே. (௨௧௩)

வேறு.

ஓடைநல்லணிமுனிந்தனவுயர்களிறுச்சி
சூடைநல்லணிமுனிந்தனதொடர்மனைகொடியின்
ஆடைநல்லணிமுனிந்தனவம்பொன்செய்யிஞ்சி
பேடைநல்லணிமுனிந்தனமென்னடைப்பிறவம். (௨௧௪)

திக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கநோக்கலென்பருவரலின்பமென்றிரண்டும்
ஒக்கநோக்கியயோகருமருந்துயருழந்தார். (௨௧௫)

ஓவினல்லுயிருயிர்ப்பினோடுடல்பதைத்துலைய
மேவிநல்லழகெழில்கெடவிம்மனோய்விம்மத்
தாவிலம்பொறிமறுகுறத்தயரதனென்ன
ஆவிநீக்கின்றதொத்ததவ்வயோத்திமாநகரம். (௨௧௬)

உயங்கியங்கருலைவுறவொருங்குழைசுற்ற
மயங்கியேங்கினர்வயின்வயின்வரம்பிலர்தொடர
இயங்குபல்லுயிர்க்கோருயிரெனநின்றவிராமன்
தயங்குபூண்முலைச்சானகியிருந்துழிச்சார்ந்தான். (௨௧௭)

அழுதுதாயரோடருந்தவரந்தணரரசர்
புழுதியாடியமெய்யினர்புடைவந்துபொருமப்
பழுதுசீரையினுடையினன்வரும்படிபாரா
எழுதுபாவையன்னாண்மனத்துணுக்கமொடெழுந்தாள். (௨௧௮)

பொழிந்தவுண்கணீர்ப்புதுப்புனலாட்டினர்புலம்ப
அழிந்தசிந்தையளன்னமிதின்னதென்றறியாள்
வழிந்தநீர்நெடுங்கண்ணினள்வள்ளலைநோக்கி. (௨௧௯)

வேறு.

பொன்னையுற்றபொலன்கழலோய்புகழ்
மன்னையுற்றதுண்டோமற்றிவ்வன்றுய
என்னையுற்றதியம்பென்றியம்பினாள்
மின்னையுற்றநடுங்கத்துமேனியாள். (உஉ0)

பொருவிலெம்பிபுவிபுரப்பான்புகல்
இருவராணையுமேந்தினெனின்றுபோய்
கருவிமாமழைக்கற்கடங்கண்டுநான்
வருவெனீண்டுவருந்தலைநீயென்றான். (உஉக)

நாயகன்வனநண்ணலுற்றானென்றும்
மேயமண்ணிழந்தானென்றும்விம்மலள்
நீய்வருந்தலைநீங்குவென்யானென்ற
தீயவெஞ்சொற்செவிசுடத்தேம்புவாள். (உஉஉ)

துறந்துபோமெனச்சொற்றசொற்றேறு
உறைந்தபாற்கடற்சேக்கையுடனொரீஇ
அறந்திறம்புமென்றையனயோத்தியில்
பிறந்தபின்பும்பிரிவிலளாயினாள். (உஉ௩

அன்னதன்மையளையனுமன்னையும்
சொன்னசெய்யத்துணிந்ததுதூயதே
என்னையென்னையிருத்தியென்றானென
உன்னவுன்னவுயிருமிழாநின்றாள். (உஉச

வல்லரக்கரின்மால்வரைபோய்விழுந்
தல்லரக்கினுருக்கழல்காட்டயற்
கல்லரக்குங்கடுமையவல்லநின்
சில்லரக்குண்டசேவடிப்போதென்றான் (உஉரு)

பரிவிகந்தமனத்தொடுபற்றிலா
தொருவுகின்றனையூழியருக்கனும்
எரியுமென்பதியாண்டையதீண்டுநின்
பிரிவினுஞ்சுடுமோபெருங்காடென்றாள். (உஉ

அண்ணலன்னசொற்கேட்டனனன்றி
உண்ணிவர்ந்தகருத்துமுணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல்கைவிடநேர்கிலன்
எண்ணுகின்றனனெஞ்செயற்பாற்றென (உஉ

அனையவேலையகன்மனையெய்தினள்
புனையுஞ்சீரந்துணிந்துபுனைந்தனள்
நினைவில்வள்ளல்பின்வந்தயனின்றனள்
பனையினீள்காம்பற்றியகையினள். (உஉஅ)

ஏழைதன்செயல்கண்டவர்யாவரும்
வீழுமண்ணிடைவீழ்ந்தனர்வீய்ந்திலர்
வாழுநாளுளவென்றபின்மாள்வரோ
ஊழிபேரினுமுய்க்குனருய்வரோ. (உஉகூ)

தாயர்தவ்வையர்தன்றுணைச்சேடியர்
ஆயமனனையவனைபனமரனறுவா
தீயின்மூழ்கினரொத்தனர்செங்கணான்
தாயுதையலைநோக்கினன்சொல்லுவான். (உஙO)

முல்லையுங்கடன்முத்துமெதிர்ப்பினும்
வெல்லும்வெண்ணகையாய்விளைவுன்னுவாய்
அல்லைபோதவமைந்தனையாதலின்
எல்லையற்றவிடர்தருவாயென்றான். (உஙக)

கொற்றவன்னதுகூறலுங்கோகிலம்
செற்றதன்னகுதலையள்சீறுவாள்
உற்றுநின்றதுயரமிதொன்றுமே
எற்றுறந்தபினின்பங்கொலாமென்றாள். (உஙஉ)

பிறிதொர்மாற்றம்பெருந்தகைபேசலன்
மறுகிவீழ்ந்தழமைந்தருமாதரும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன்
நெறிபெறுமையரிதினினீங்குவான். (உஙங)

சீரைசுற்றித்திருமகள்பின்செல
மூரிவிற்கையிளையவன்முன்செலக்
காரையொத்தவன்போம்படிகண்டவவ்
வூரையுற்றதுணர்த்தவுமொண்ணுமோ. (உஙச)

ஆரும்பின்னரழுதவலித்திலர்
சோருஞ்சிந்தையர்யாவருஞ்சூழ்ந்தனர்
வீரன்முன்வனமேவுதும்யாமெனாப்
போனொன்றொல்லொலிகைம்மிகப்போயினார். (உங

தாதைவாயிற்குறுகினன்சார்தலும்
கோதைவேலவன்றுயனைக்கும்பிடா
ஆதிமன்னனையாற்றுமின்றொன்றான்
மாதராரும்விழுந்துமயங்கினார். (உ௱௬)

ஏத்தினார்தம்மகனைமருகியை
வாழ்த்தினாரிளையோனைவழுத்தினார்
காத்துநல்குமின்றெய்வதங்காளென்றார்
நாத்தழும்பவரற்றிநடுங்குவார். (உ௱எ)

அன்னதாயரரிதிற்பிரிந்தபின
முன்னர்நின்றமுனிவனைக்கைதொழாத்
தன்னதாருயிர்த்தம்பியுந்தாமரைப்
பொன்னுந்தானுமொர்தேர்மிசைப்போயினான். (உ௱அ)

(௪-வது, நகர்நீங்குபடலம்-முற்றிற்று. ஆ திருவிருத்தம் (௫௱௱.)

## ௫-வது. தைலமாட்டுபடலம்.

ஏவியகுருசில்பின்யாவரேகிலார்
மாவியறுனையம்மன்னைநீங்கலாத்
தேவியரொழிந்தனர்தெய்வமாநகர்
ஓவியமொழிந்தனவுயிரிலாமையால். (க)

கய்கணீர்பரந்துகாறெடரக்கண்ணுறும்
வெய்யநீர்வெள்ளத்துமெள்ளச்சேறலால்
உய்யவேழுலகுமொன்றானநீருழல்
தெய்வமீனொத்ததச்செம்பொற்றோரோ. (உ)

மீன்புகழ்பெறவெயிலொதுங்கமேதியோ
டான்புகக்கிரவனத்தம்புக்கனன்
கான்புகக்காண்கிலேனென்றுகல்லதர்
தான்புகமுடிகினனென்னுந்தன்மையான். (௩)

பகுத்தவான்மதிமொடுபதுமத்தணணலே
வகுத்தவாணுதலியர்வதனராசிபோல்
உகுத்தகண்ணீரினிலொளியுநீங்கின
முகுழ்த்தழகிழந்தனமுளரியீட்டமே. (௪)

அந்தியில்வெயிலொளியழியவானகம்
நந்தலில்கைகயன்பயந்தநங்கைதன்
மந்தரையுரையெனுங்கடுவின்மட்கிய
சிந்தையினிருண்டதுசெம்மைநீங்கியே (௫)

பரந்துமீனரும்பியபசலைவானகம்
அரந்தையின்முனிவரனறைந்தசாபத்தால்
நிரந்தரமிமைப்பிலாநெடுங்கண்ணீடிய
புரந்தரனுருவெனப்பொலிந்ததெங்கு (௬)

திருநகர்க்கியோசனையிரண்டுசென்றொரு
விரைசெறிசோலையைவிரைவினெய்தினான்
இரதநின்றிழிந்தபினிராமனின்றுணை
உரைசெறிமுனிவரோடுறையுங்காலையே. (௭)

வட்டமோரோசனைவளைவிற்றாய்நடு
எட்டனையிடவுமோரிடமிலாவகைப்
புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென
விட்டதுகுருசிலைவிடாதசேனையே. (௮)

குயின்றியகுலமணிநதியின்கூலத்தில்
பயின்றுயர்வாலுகப்பரப்பில்பைம்புலில்
வயின்றொறும்வைகினரொன்றும்வாய்மடுத்
தயின்றிலர்துயின்றிலரழுதுவிம்மினார். (௯)

வேறு.

வாவிவிரிதாமரையின்மாமலரின்வாசக்
காவிவிரிநாண்மலர்முகுழ்த்தனையகண்ணார்
ஆவிவிரிபானுரையினுடையணையாக
நாவிவிரிகூழையிளநவ்வியர்துயின்றார். (௧௦)

பெரும்பகல்வருந்தினர்பிறங்குமுலைதெங்கின்
குரும்பைகள்பொருஞ்செவிலிமங்கையர்குறங்கில்
அரும்பனையகொங்கையயிலம்பனையவுண்கண்
கரும்பனையசெஞ்சொனவில்கன்னியர்துயின்றார். (௧௧)

பூவகநிறைந்தபுளினத்திரள்கடோறும்
மாவகிரினுண்கணார்மடப்பிடியின்வைகச்
சேவகமமைந்தசிறுகட்கரிகளென்னத்
தூவகலில்குந்தமறமைந்தர்கடுயின்றார். (௧௨)

தகவுமிகுதவமுமிவைதழுவவுயர்கொழுனர்
முகமுமவரருளுநுகர்சிலர்கடுயிர்முடுக
அகவுமிளமயில்களுயிரலசியனவனையார்
மகவுமுலைவருடவிளமகளிர்கடுயின்றார். (௧௩)

மாகமணிவேதிகையின்மாதவிசெய்பந்தல்
கேகயநெடுங்குலமெனச்சிலர்கிடந்தார்
பூகவனமூடுபடுகொப்புளினமுன்றில்
தோகையிளவன்னநி[illegible]ச்சிலர்துயின்றார். (௧௪)

சம்பகநறும்பொழில்களிற்றருணவஞ்சிக்
கொம்பழுதொசிந்தனவெனச்சிலர்குழைந்தார்
வம்பளவுகொங்கையொடுவாலுகம்வளர்க்கும்
அம்பவளவல்லிகளெனச்சிலரசைந்தார். (௧௫)

குங்குமமலைக்குளிர்பனிக்குழுமியென்னத்
துங்கமுலையிற்றுகளுறச்சிலர்துயின்றார்
அங்கையணையிற்பொலிவழுங்கமுகமெல்லாம்
பங்கையமுகிழ்த்தனவெனச்சிலர்படிந்தார். (௧௬)

தொடுத்தகலிடைச்சிலர்துவண்டனர்துயின்றார்
அடுத்தவணையிற்சிலரழிந்தனரயர்ந்தார்
உடுத்ததுகில்சுற்றொருதலைச்சிலருறைந்தார்
படுத்ததவிசிற்சிலர்பசந்தனரசந்தார். (௧௭)

ஏனையருமின்னணமிறங்கினருறங்கா
மானவனுமந்திரிசுமந்திரனைவாவென்
றூனமில்பெருங்குணமொருங்குடையவன்றால்
மேனிகழ்வதுண்டவுரைகேளெனவிளம்பும். (௧௮)

வேறு.

பூண்டபேரன்பினாரைப்போக்குவதரிதுபோக்கா
நீண்டுநின்றேகல்பொல்லாதெந்தைநீயிரதமின்னே
தூண்டினைமீளநோக்கிச்சுவட்டையோர்ந்தென்னையங்கே
மீண்டனனென்னமீள்வரிதுநின்னைவேண்டிற்றென்றான். (௧௯)

செவ்வியகுரிசில்கூறத்தேர்வலான்செப்புவானவ்
வெவ்வியதாயிதீயவிதியினின்மேலென்போலாம்
இவ்வயினின்னைநீக்கியின்னுயிர்தீர்ந்தின்றேகி
அவ்வயினையகாண்டற்கமைதலாலளியனென்றான். (௨௦)

வேறு.

தேவியுமிளவலுந்தொடரச்செல்வனைப்
பூவியல்கானகம்புகவுய்த்தேனென்கோ
கோவினையுடன்கொடுகுறுகினேனென்கோ
யாவதுகூறுகேனிரும்பினெஞ்சினேன். (௨௧)

தாருடைமலரினுமொதுங்கத்தக்கிலா
வாருடைமுலையொடுமதலைமைந்தரைப்
பாரிடைச்செலுத்தினேன்பழையநண்பினேன்
தேரிடைவந்தனென்றீதிலேனென்கோ. (௨௨)

வன்புலக்கண்மனமதியில்வஞ்சனேன்
என்புலப்புறவுடைந்திரங்குமன்னன்பால்
உன்புலக்குரியசொல்லுணர்த்தச்செல்கெனோ
தென்புலக்கோமகன்றூதிற்செல்கெனோ. (௨௩)

நாற்றிசைமாந்தருநகரமாக்களும்
தேற்றினர்கொணர்வருஞ்சிறுவன்றன்னையென்
றாற்றினவரசனையய்யவெய்யவென்
கூற்றுறழ்சொல்லினாற்கொலைசெய்வேன்கொலோ. (௨௪)

அங்கிமேல்வேள்விசெய்தரிதிற்பெற்றநின்
சிங்கவேறகன்றதென்றுணர்த்தச்செல்கெனோ
எங்கள்கோமகற்கினியென்னிற்கேகயன்
நங்கையேகடைமுறைநல்லள்போலுமால். (௨௫)

முடிவுறவின்னனமொழிந்தபின்னரும்
அடியுறத்தழுவினனழுங்குபேரரா
இடியுறத்துவளுவதென்னுமின்னலன்
படியுறப்புரண்டனன்பலவும்பன்னினான். (௨௬)

தடக்கையாலெடுத்தவற்றழுவிக்கண்ணீர்
துடைத்துவேறிருத்திமற்றினையசொல்லினான்
அடக்குமைம்பொறியொடுகரணத்தப்புறம்
கடக்கும்வாலுணர்வினுக்கணுகுங்காட்சியான். (௨௭)

பிறத்தலென்றுற்றபின்பெறுவயாவையும்
திறத்துளியுணர்வதோர்செம்மையுள்ளத்தாய்
புறத்துறுபெரும்பழிபொதுவின்றெய்தலும்
அறத்திறமறத்தியோவவலமுண்டெனா. (௨௮)

முன்புநின் றிசைநிறீஇமுடிவுமுற்றிய
பின்புநின் றுறுதியைப்பயக்கும்பேரறம்
இன்பம்வந் துறுமெனினினியதாயிடைத்
துன்பம்வந் துறுமெனிற்றுறக்கலாகுமோ. (௨௯)

நிறப்பெரும்படைக்கலநிறத்தினேருற
மறப்பயன்விளைக்குறும்வன்மையன்றரோ
இறப்பினுந்திருவெலாமிழப்பவெய்தினும்
துறப்பிலரறமெனல்சூரராவதே. (௫௦)

கான்புறஞ்சேறலிலருமைகாண்டலால்
வான்பிறங்கியபுகழ்மன்னர்தொல்குலம்
யான்பிறந்தறத்தினின் றிழுக்கிற்றென்னவோ
ஊன்றுறந் துயிர்குடித் துழலும்வேலினாய். (௫௧)

வினைக்கருமெய்ம்மையன்வனத்துள்விட்டனன்
மனைக்கரும்புதல்வனையென்றன்மன்னவன்
தனக்கருந்தவமதுதலைக்கொண்டேகுதல்
எனக்கருந்தவமிதற்கிரங்கலெந்தைநீ. (௫௨)

முந்தினைமுனிவனையிறைஞ்சிமுற்றுமென்
வந்தனைமுதலியமாற்றங்கூறினை
எந்தையையவனொடுமெய்தியீண்டென
சிந்தையுணர்த்துதியென்றுசெப்புவாய். (௫௩)

முனிவனையெம்பியைமுறையினின்றரும்
புனிதவேதியர்க்குமேலுறைபுத்தேளிர்க்கும்
இனியனவிழைத்தியென்றியம்பியெற்பிரி
தனிமையுந்தீர்த்தியென்றுரைத்திதன்மையால். (௫௪)

வெவ்வியதன்னையால்விளைந்ததீண்டொரு
கவ்வையென்றிறையுந்தன்கருத்தினோக்கலன்
எவ்வருளென்வயின்வைத்ததின்சொலால்
அவ்வருளவன்வயினருளுகென்றியால். (௫௫)

வேண்டினனிவ்வரமென்றுமேலவன்
ஈண்டருளெம்பிபானிறுவியேகினை
பூண்டமாதவனொடுங்கோயில்புக்கென
தாண்டகைவேந்தனையவலமாற்றிப்பின். (௫௬)

ஏழிரண்டாண்டுநீத்தீண்டவந்துனைத்
தாழ்குவன்றிருவடிதளரலீண்டெனச்
சூழிவெங்கடகளிற்றரசற்சொல்லிப்பின்
வாழிமாதவன்சொலான்மனந்தெருட்டுவாய். (௫௭)

முறைமையாலெற்பயந்தெடுத்தமூவர்க்கும்
குறைவிலாவென்னெடுவணக்கங்கூறிப்பின்
இறைமகன்றுயர்துடைத்திருத்திமாடென்றான்
மறைகளைமறைந்துபோய்வனத்துள்வைகுவான். (௫௮)

ஆள்வினையாண்மையிற்றிறம்பலன்றெனுத்
தாள்முதல்வணங்கியதனித்திண்டேர்வலான்
ஊழ்வினைவசத்துயிர்நிலையென்றுன்னுவான்
வாழ்வினைநோக்கியைவணங்கிநோக்கினான். (௫௯)

அன்னவள்கூறுவாளரசர்க்கத்தையர்க்
கென்னுடைவணக்கமுன்னியம்பியானுடைப்
பொன்னிறப்பூவையுங்கிளியும்போற்றுகென்
றுன்னுமென்றங்கையர்க்குணர்த்துவாயென்றாள். (௬0)

தேர்வலானவ்வுரைகேட்டுத்தீங்குறின்
யார்வலாருயிர்துறப்பெளிதன்றேயெனுப்
போர்வலான்றடுக்கவும்பொருமிவிம்மினான்
சோர்விலாளறிவிலாத்துயர்க்குச்சோர்கின்றான். (௬௧)

ஆறினன்போற்சிறிதவலமவ்வழி
வேறிலாவன்பினுய்விடைதந்தீகென
ஏறுசேவகற்றொழுதிளையமைந்தனைக்
கூறுவதியாதெனவினையகூறினான். (௬௨)

உரைசெய்தெங்கோமகற்குறுதியாக்கிய
தரைகெழுசெல்வத்தைத்தவிரமற்றொரு
விரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை
அரைசனென்றின்னமொன்றறையற்பாலதோ. (௬௩)

கானகம்பற்றினற்புதல்வன்காயுணப்
போனகம்பற்றியபொய்யின்மன்னர்க்கிங்
கூனகம்பற்றியவுயிர்கொடின்னும்போய்
வானகம்பற்றிலாவலிமைகூறென்றான். (௬௪)

மின்னுடன்பிறந்தவாட்பரதவேந்தற்கு
மன்னுடன்பிறந்திலென்மண்கொண்டாள்கின்ற
தன்னுடன்பிறந்திலென்றம்பிமுன்னலென்
என்னுடன்பிறந்தயான்வலியனென்றியால். (௪௫)

ஆரியனிளவலைநோக்கியையவிச்
சீரியவல்லனசெப்பலென்றபின்
பாரிடைவணங்கினன்பதைக்குநெஞ்சினன்
தேரிடைவித்தகன்சேறன்மேயினான். (௪௬)

கூட்டினன்றேர்பொறிகூட்டிக்கோன்முறை
பூட்டினன்புரவியப்புரவிபோநெறி
காட்டினன்காட்டித்தன்கல்விமாட்சியால்
ஓட்டினனொருவருமுணர்வுறுமலே. (௪௭)

தையறன்கற்புந்தன்றகவுந்தம்பியும்
மையறுகருணையுமுணர்வும்வாய்மையும்
செய்யதன்வில்லுமேசேமமாகக்கொண்
டையனும்போயினானல்லினாப்பணே. (௪௮)

வேறு.

பொய்வினைக்குதவும்வாழ்க்கையரக்கரைப்பொருந்தியன்னார்
செய்வினைக்குதவுநட்பாற்செல்பவர்த்தடுப்பதேய்க்கும்
மைவிளக்கியதேயன்னவயங்கிருடுரக்கவானம்
கைவிளக்கெடுத்ததென்னவந்ததுகடவுட்டிங்கள். (௪௯)

மருமத்துத்தன்னையூன்றுமறக்கொடும்பாவந்தீர்க்கும்
உருமொத்தசிலையினோனையொருப்படுத்துதவிநின்ற
கருமத்தின்வினைவையெண்ணிக்களிப்பொடுகாணவந்த
தருமத்தின்வதனமென்னப்பொலிந்ததுதனிவெண்டிங்கள். (௫௰)

காம்புயர்கானஞ்செல்லுங்கரியவன்வறுமைநோக்கித்
தேம்பினகுவிந்தபோலுஞ்செங்கழுநீருஞ்சேரைப்
பாம்பினதலையவாகிப்பரிந்தனகுவிந்துசாய்ந்த
ஆம்பலுமென்றபோதுநின்றபோதலர்வதுண்டோ. (௫௧)

அஞ்சனக்குன்றமன்னவழகனுமழகன்றன்மேல்
எஞ்சலில்பொன்போர்த்தன்னவிளவலுமிந்துவென்பான்
வெஞ்சிலைப்புருவத்தாடன்மெல்லடிக்கேற்பவெண்ணூற்
பஞ்சிடைப்படுத்தாலென்னவெண்ணிலாப்பரப்பப்போனார். ௫௨

சிறுநிலமருங்குல்கொங்கையேந்தியசெல்வமென்னும்
நெறியிருங்கூந்தனங்கை[illegible]சேறடிநீர்க்கொப்பூழின்
நறியனதொடர்ந்துசென்[illegible]டநசெனினவையினீங்கும்
உறுவலியன்பினாங்[illegible]டனவுணர்வதுண்டே. (௫௩)

பரிதிவானவனுங்[illegible]மூன்னம்
திருவிளயகனுந்தெ[illegible]பால்யோசனை[illegible]ண்டுசென்றான்
அருவிபாய்கணனு[illegible]ண்ணயழிகின்[illegible]னமுந்தானும்
துரிதமான்றேரிறபோனன்செய்ததுசொலலுற்றாம். (௫௪)

கடிகையோரிரண்டு[illegible]றிற்கடிமதிலயோத்திகண்டான்
அடியிணைதொழுதா[illegible]மூனிவனையவனுமுற்ற
படியெலாங்கேட்டு[illegible]சிறப்பருவரலுழந்தானமுன்னே
முடியெலாமுணர்ந்தா[illegible]ந்தோமுடிந்தனனமன்னனென்றான். ()

நின்றுயர்பழியையஞ்சிநோர்ந்திலன்றடுக்கவள்ளல்
ஒன்றுநானுரைத்தனேக்கான்றருமத்திற்குறுதிபார்ப்பான்
வென்றவருளரேமேலைவிதியினையென்றுவிம்மிப்
பொன்றிணிமன்னன்கோயில்சுமந்திரனேடும்போனன். (௫௬)

தேர்கொண்டுவள்ளல்வந்தானென்றுதஞ்சிந்தையுந்த
ஊர்கொண்டதிங்களென்னமன்னனையுழையர்சுற்றக்
கார்கொண்டமேனியானைக்கண்டிலர்கண்ணில்வற்றா
நீர்கொண்டநெடுந்தேர்ப்பாகனிலைகண்டேநிலையிற்றீர்ந்தார். ()

இரதம்வந்துற்றதென்றாங்கியாவருமியம்பலோடும்
வரதன்வந்துற்றானென்னாமன்னனுமயக்கந்தீர்ந்தான்
புரைதபுகமலநாட்டம்பொருக்கெனவிழித்துநோக்கி
விரதமாதவனைக்கண்டான்வீரன்வந்தனனேவென்றான். (௫௮)

இல்லையென்றுரைக்கலாற்றானிங்கினன்முனிவனின்றான்
நல்லவன்முகமேநம்பிநடத்திலனென்னுமாற்றம்
சொல்லலுமரசன்சோர்ந்தான்றுயருறுமுனிவனுனிவ
வல்லல்காண்கில்லேனென்னாவாங்குநின்றகலப்போனன். (௫௯)

நாயகன்பின்னுந்தன்றேர்ப்பாகனைநோக்கிநம்பி
சேயனோவணியனோவென்றுரைத்தலுமனையான்செய்ய
வேயுயர்கானந்தானுந்தம்பியுமிதிலைப்பொன்னும்
போயினனென்றானென்றலோழ்ந்ததேயாவிபோனன். (௬0)

இந்திரன்முதல்வராயகடவுளர்யாருமீண்டிச்
சந்திரனனையதாங்கோர்மானத்தின்றலையிற்றாங்கி
வந்தனனெந்தைதந்தையெனமனங்களித்துவள்ளல்
உந்தியானுலகினும்பர்மீள்கிலாவுலகத்துய்த்தார். (௬௧)

உயிர்ப்பிலன்றுடிப்புமில்லனென்றுணர்ந்துருவந்தீண்டி
அயிர்த்தனளேக்கிமன்னன்பேருயிரின்மைதேறி
மயிற்குலமனையநங்கைகோசலைமறுகிவீழ்ந்தாள்
வெயிற்சுடுகோடைதன்னிலென்பிலாவுயிரின்வேவாள். (௬௨)

இருந்தவந்தணனோடெல்லாமீன்றவன்றன்னையீனப்
பெருந்தவஞ்செய்தநங்கைகணவனிற்பிரிந்துதெய்வ
மருந்திழந்தவரின்விம்மிமணிபிரியரவின்மாந்தி
அருந்துணைபிரிந்தவன்றிற்பெடையெனவரற்றலுற்றாள். (௬௩)

வேறு.

தானேதானேதஞ்சமிலாதான்றகைவில்லான்
போனான்போனானெங்களைநீத்திப்பொழுதென்னா
வானீர்சுண்டிமண்ணறவற்றிமறுகுற்ற
மீனேயென்னமெய்தடுமாறிவிழுகின்றாள். (௬௪)

ஒன்றோநன்றாட்டெய்க்குவரிந்நாட்டுயிர்காப்பார்
அன்றேமக்கட்பெற்றுயிர்வாழ்வார்க்கவமுண்டே
இன்றேவந்தீண்டஞ்சலெனாதெம்மகனென்பான்
கொன்றானென்றோதந்தையையென்றாள்குலைகின்றாள். (௬௫)

நோயும்மின்றிநோன்கதிர்வாள்வேலிவையின்றி
மாயுஞ்செல்வமக்களினாலோமறமன்னன்
காயும்புள்ளிக்கர்க்கடநாகங்கனிவாழை
வேயும்போன்றானென்றுமயங்காவிழுகின்றாள். (௬௬)

வடித்தாழ்கூந்தற்கேகயன்மாதேமதியாலே
பிடித்தாய்வையம்பெற்றனைபோராவரமின்னே
முடித்தாயன்றேமந்திரமென்றாண்முகில்வாய்மின்
துடித்தாலென்னமன்னவன்மார்பிற்றுவள்கின்றாள். (௬௭)

அருந்தேரானைச்சம்பரனைப்பண்டமர்வென்றாய்
இருந்தார்வானோருன்னருளாலேயினித்திந்நாள்
விருந்தாகின்றாயென்றனள்வேழத்தரசொன்றைப்
பெருந்தாளன்பிற்சூழ்பிடியென்னப்பிரிவுற்றாள். (௬௮)

வேள்விச்செல்வந்துய்த்திகொன்மெய்மைத்துணையின்மை
சூழிச்செல்வந்துய்த்திகொறோலாமனுநூனின்
வாழிச்செல்வந்துய்த்திகொன்முன்னென்றனள்வானோர்
கேள்விச்செல்வந்துய்க்கவயிற்றோர்கிளைதந்தாள். (௬௯)

வேறு.

ஆழிவேந்தன்பெருந்தேவியன்னபன்னியமுதரற்றத்
தோழியன்னசுமித்திரையுந்துளங்கியேங்கியுயிர்சோர
ஊழிதிரிவதெனக்கோயிலுலையும்வேலைமற்றொழிந்த
மாழையுண்கட்டேவியருமயிலின்குழாத்தின்வந்திரைத்தார். (௭0)

துஞ்சினனைத்தம்முயிரின்றுணையைக்கண்டார்துணுக்கத்தான்
நஞ்சுகவர்ந்தாலெனவுடலுநடுங்காநின்றாரென்றாலும்
அஞ்சியழுங்கிவிழுந்திலராலன்பிற்றறுகண்பிறிதுண்டோ
வஞ்சமில்லாமனத்தானைவானிற்றொடர்வான்மனம்வலித்தார். (௭௧)

அளங்கொள்ளக்கரிரும்பரப்பிலண்டருலகிலப்புறத்தில்
விளங்குமாதர்கற்பினாரிவரின்யாவரெனநின்றார்
களங்கநீத்தமதிமுகத்தார்கானவெள்ளங்கால்கோப்பத்
துளங்கலில்லாத்தனிக்குன்றிற்றொக்கமயிலிற்சூழ்ந்திருந்தார். (௭௨)

கைத்தசொல்லாலுயிரிழந்தும்புதல்வற்பிரிந்துங்கடையோட
மெய்த்தவேந்தன்றிருவுடம்பைப்பிரியாதாரற்றிவிட்டிலரால்
பித்தமயக்காஞ்சுறவெறியும்பிறவிப்பெரியகடல்கடக்க
உய்த்துமீண்டநாவாயிற்றாழும்போவாரொக்கின்றார். (௭௩)

மாதரார்களறுபதினாயிரருமுள்ளம்வலித்திருப்பக்
கோதில்குணத்துக்கோசலையுமிளையமாதுங்குழைந்தேங்கச்
சோதிமணித்தேர்ச்சுமந்திரன்சென்றரசன்றன்மைசொலவந்த
வேதமுனிவன்விதிசெய்தவினையைநோக்கிவிம்முவான். (௭௪)

செய்யக்கடவசெயற்குரியசிறுவரீண்டையாரல்லர்
எய்தக்கடவபொருளெய்தாதிகவாவென்னவியல்பென்ன
மையற்கொடியாண்மகனீண்டுவந்தான்முடித்துமற்றென்ன
தையற்கடனின்றெடுத்தவனைத்தயிலக்கடலின்றலையுய்த்தான். (௭௫)

தேவிமாரையிவற்குரிமைசெய்யுநாளிற்செந்தீயின்
ஆவிநீத்திரெனநீக்கியரிவைமார்களிருவரையும்
தாவில்கோயிற்றலையிருத்தித்தண்டார்ப்பரதற்கொண்டணைகென்
றேவினான்மன்னவனாணையெழுதிமுடங்கல்கொடுத்தவரை. (௭௬)

போனாரவருங்கேகயர்கோன்பொன்மாநகரம்புகவெய்த
ஆனாவறிவினருந்தவனுமறமார்பள்ளியதுசேர்ந்தான்
சேனாபதியிற்சுமந்திரனைச்செயற்பாற்குரியசெய்கென்று
மேனாஞ்சொன்னமாந்தர்க்குவிளைந்ததினிநாம்விளம்புவாம். (எஎ)

மீனீர்வேலைமுரசியம்பவிண்ணோரேத்தமண்ணிறைஞ்சத்
தூநீரொளிவாள்புடையிலங்கச்சுடர்த்தேரேறித்தோன்றினான்
வானேபுக்கானரும்புதல்வன்மக்களகன்றார்வருமளவும்
யானேகாப்பனிவ்வுலகையென்பான்போலவெறிகதிரோன். (எஅ)

வருந்தாவண்ணம்வருந்தினார்மறந்தார்தம்மைவள்ளலுமங்
கிருந்தானென்றேயிருந்தார்களெல்லாமெழுந்தாரருளிருக்கும்
பெருந்தாமரைக்கட்கருமுகிலைப்பெயர்ந்தார்காணார்பேதுற்றார்
பொருந்தாநயனம்பொருந்திநமைப்பொன்றச்சூழ்ந்தவெனப்புரண்டார்.

எட்டுத்திசையுமோடுவாரெழுவார்விழுவாரிடர்க்கடலுள்
விட்டுநீத்தானமையென்பார்வெய்யவையன்வினையென்பார்
ஓட்டிப்படர்ந்ததண்டகமிவ்வுலகத்துளதன்றேவுணர்வைச்
சுட்டிச்சேர்தலாற்றுதுமோதொடர்துந்தேரின்சுவடென்பார். (அ0)

தேரின்சுவடுநோக்குவார்திருமாநகரின்மிசைதிரிய
ஊருந்திகிரிக்குறியொற்றியுணர்ந்தாரெல்லாமுயிர்வந்தார்
ஆருமஞ்சலையன்போயயோத்தியடைந்தானெனவசனிக்
காருங்கடலுமொருவழிக்கொண்டார்த்தவென்னக்கடிதார்த்தார். அக

மானவரவின்வாய்த்தீயவனைவான்றொனைவாளெயிற்றின்வழி
ஆனகடுவுக்கருமருந்தாவருந்துமமுதம்பெற்றுயர்ந்து
போனபொழுதிற்புகுந்தவுயிர்பொறுத்தாரொத்தார்பொருவரிய
வேனின்மதனைமதனழித்தான்மீண்டானென்னவாண்டைஇயார். அஉ

ஆறுசெல்லச்செல்லத்தேராழிகண்டாரயலப்பால்
வேறுசென்றநெறிகாணார்விம்மாநின்றவுவகையராய்
மாறியுலகம்வகுத்தநாள்வரம்புகடந்துமண்முழுதும்
ஏறியொடுங்குமெறிகடல்போலெயின்மாநகரமெய்தினார். (அங)

புக்காரரசன்பொன்னுலகம்போனானென்னும்பொருள்கேட்டார்
உக்கார்நெஞ்சமுயிருகுத்தாருற்றதெம்மானுரைப்பரிதால்
தக்கான்போனான்வனமென்னுந்தகையுமுணர்ந்தார்மிகையாவி
அக்காலத்தேயகலுமோவவதியென்றொன்றுளதானால். (அச)

மன்னற்கல்லார்வனம்போனமைந்தற்கல்லார்வாங்கரிய
இன்னற்சிறையினிடைப்பட்டாரிருந்தார்நின்றவருந்தவனும்
உன்னற்கரியபழிக்கஞ்சியன்றேயொழிந்தனியானென்று
பன்னற்கரியபலநெறியும்பகர்ந்துபதைப்பைநீக்கினான். (௮௫)

வெள்ளத்திடைவாழ்வடவனலையஞ்சிவேலைகடவாத
பள்ளக்கடலின்முனிபணியாற்பையுணகரம்வைகிடமேல்
வள்ளற்றுறைபணியென்னும்வானோர்தவததால்வயங்கிருளின்
நள்ளிற்போனவரிசிலைக்கைநம்பிசெய்கைநடத்துவாம். (௮௬)

(௫-வது. தைலமாட்டுபடலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-௬௧௬.)

## ௬-வது. கங்கைப்படலம்.

வெய்யோனொளிதன்மேனியின்விரிசோதியின்மறையப்
பொய்யோவெனுமிடையாளொடுமிளையானொடும்போனான்
மையோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
ஐயோவிவன்வடிவென்பதோரழியாவழகுடையான். (௧)

அளியன்னதோரறறுன்னியகுழலாள்கடலமிர்தின்
தெளிவன்னதோர்மொழியாணிறைதவமன்னதோர்செயலாள்
வெளியன்னதோரிடையாளொடும்விடையன்னதோர்நடையான்
களியன்னமுமடவன்னமுநடமாடுவகண்டான். (௨)

அஞ்சம்பையுமையன்றனதலகம்பையுமளவா
நஞ்சங்களைவெலவாகியநயனங்களையுடையாள்
துஞ்சுங்களிவரிவண்டுகள்குழலின்படிசுழலும்
கஞ்சங்களைமஞ்சன்கழனகுகின்றதுகண்டாள். (௩)

மாகந்தமுமரகந்தமுமளகந்தருமதியின்
பாகந்தருநுதலாளொடுபவளந்தருமிதழான்
மேகந்தனிவருகின்றதுமின்னோடெனமிளிர்பூண்
நாகந்தனிவருகின்றதுபிடியோடெனநடவா. (௪)

தொளைகட்டியகிளைமுட்டியசுருதிச்சுவையமுதின்
கிளைகட்டியகருவிக்கிளரிசையிற்பசைநறவின்
விளைகட்டியின்மதுரித்தெழுகிளவிக்கிளர்விழிபோல்
களைகட்டவர்தளைவிட்டெறிகுவளைத்தொகைகண்டான். (௫)

அருப்பேந்தியகலசத்துணையமுதேந்தியமதமா
மருப்பேந்தியவெனலாமுலைமழையேந்தியகுழலாள்
கருப்பேந்திரமுதலாயினகண்டாளிடர்காணுள்
பொருப்பேந்தியதோளாறெனுவிலியாடினன்போனான். (௬)

பன்னந்துகடாளந்தொகுபடர்பந்திகள்படுநீர்
அன்னந்துயில்வதிதண்டலையனந்துறைபுளினம்
சின்னந்தருமலர்தந்தனசெறிநந்தனவனநன்
பொன்னந்தியநதிகண்டுளமகிழ்ந்தந்தனர்போனார். (எ)

கால்பாய்வனமுதுமேதிகள்கதிர்மேய்வனகடைவாய்
பால்பாய்வனநறைபாய்வனமலர்வாயளிபடாச்
சேல்பாய்வனகயல்பாய்வனசெங்கான்மடவன்னம்
போல்பாய்புனன்மடவார்படிநெடுநாடவைபோனார். (அ)

வேறு.

பரிதிபற்றியபல்கலன்முற்றினர்
மருதவைப்பின்வளங்கெழுநாடொரீஇச்
சுருதிகற்றுயர்தோமிலர்சுற்றுறும்
விரிதிரைப்புனற்கங்கையைமேவினார். (௯)

கங்கையென்னுங்கடவுட்டிருநதி
தங்கிவைகுந்தபோதனர்யாவரும்
எங்கள்செல்கதிவந்ததென்றேமுறா
அங்கணாயகற்காணவந்தண்மினார். (௧௦)

பெண்ணினேர்க்குஞ்சுவையிற்பிறர்பிறர்க்
கெண்ணினேர்க்கியம்பருமின்பத்தைப்
பண்ணினேர்க்கும்பராவமுதைப்பசுங்
கண்ணினேர்க்கினருள்ளங்களிக்கின்றார். (௧௧)

எதிர்கொடேத்தினரின்னிசைபாடினர்
வெதிர்கொள்கோலினராடினர்வீரனைக்
கதிர்கொடாமரைக்கண்ணனைக்கண்ணினால்
மதுரவாரியமுதெனமாந்துவார். (௧௨)

மனையினீங்கியமக்களைவைகலும்
நினையுநெஞ்சினர்கண்டிலர்நேடுவார்
அனையர்வந்துறவாண்டெதிர்ந்தார்களில்
இனையமாதவப்பள்ளிகொண்டெய்தினார். (௧௩)

பொழியுங்கண்ணிற்புதுப்புனலாட்டினர்
மொழியுமின்சொலின்மொய்ம்மலர்சூட்டினர்
அழிவிலன்பெனுமாரமிர்தூட்டினர்
வழியில்வந்தவருத்தத்தைவாட்டினர். (கச)

காயுங்கானிற்கிழங்குங்கனிகளும்
தூயதேடிக்கொணர்ந்தனர்தோன்றனீ
ஆயகங்கையரும்புனலாடினை
தீயையோம்பினைசெய்யமுதென்றனர். (கரு)

மங்கையர்க்குவிளக்கன்னமானையும்
செங்கைபற்றினன்றேவருந்துன்பறப்
பங்கையத்தயன்பண்டுதன்பாதத்தின்
அங்கையிற்றருங்கங்கையினாடினான். (கசு)

கன்னிநீக்கருங்கங்கையுங்கைதொழாப்
பன்னிநீக்கரும்பாதகம்பாருளோர்
என்னினீக்குவர்யானுமின்றெற்றந்த
உன்னினீக்கினெனுய்ந்தனென்யானென்றாள். (கஎ)

வெங்கணாகக்கரத்தினன்வெண்ணிறக்
கங்கைவார்சடைக்கற்றையன்கற்புடை
மங்கைகாணநின்றாடுகின்றான்வகிர்த்
திங்கள்சூடியசெல்வனிற்றோன்றினான். (கஅ)

தள்ளுநீர்ப்பெருங்கங்கைத்தரங்கத்தால்
வள்ளிநுண்ணிடைமாமலராளொடும்
வெள்ளிவெண்ணிறப்பாற்கடன்மேலைநாள்
பள்ளிநீங்கியபான்மையிற்றோன்றினான். (கசூ)

வஞ்சிநாணவிடைக்குமடநடைக்
கஞ்சியன்னமொதுங்கவடியன்ன
கஞ்சநீரிலொளிப்பக்கயலுகப்
பஞ்சிமெல்லடிப்பாவையுமாடினாள். (உ0)

தேவர்தேவன்செறிசடைக்கற்றையுள்
கோவைமாலையெருக்கொடுகொன்றையின்
பூவுநாறலள்பூங்குழற்கூந்தலின்
நாவிநாண்மலர்கங்கையுநாறினாள். (உக)

நுரைக்கொழுந்தெழுந்தோங்கிநுடங்கலால்
நரைத்தகூந்தலினங்கைமந்தாகினி
உரைத்தசீதைத்தனிமையுன்னுவாள்
திரைக்கைநீட்டிச்செவிலியினாட்டினாள். (உஉ)

மங்கைவார்குழற்கற்றைமழைக்குலம்
தங்குநீரிடைத்தாழ்ந்துகுழைப்பன
கங்கையாற்றொடுங்காளிந்திதன்னொடும்
பொங்குநீர்ச்சுழிபோவனபோன்றவே. (உங)

சுழிபட்டோங்கியதூங்கொலியாற்றுத்தன்
விழியிற்சேலுகள்வாணிறவெள்ளத்து
முழுகித்தோன்றுகின்றாண்முதற்பாற்கடல்
அழுவத்தன்றெழுவாளெனவாயினாள். (உ௪)

செய்யதாமரைத்தாள்பண்டுதீண்டலால்
வெய்யபாதகந்தீர்த்துவிளங்குவாள்
அய்யன்மேனியெலாமளைந்தாலினி
வய்யமாநரகத்திடைவைகுமே. (உ௫)

துறைநறும்புனலாடிச்சுருதியோர்
உறையுளெய்தியுணர்வுடையோருணர்
இறைவற்கைதொழுதேந்தெரியோம்பிப்பின்
அறிஞர்காதற்கமைவிருந்தாகினான். (உ௬)

வருந்தித்தான்றரவந்தவமுதையும்
அருந்துநீரென்றமரரையூட்டினான்
விருந்துமெல்லடகுண்டுவிளங்கினான்
திருந்தினார்வயிற்செய்தனதேயுமோ. (உ௭)

ஆயகாலையினாயிரமம்பிக்கு
நாயகன்பொர்க்குகனெனுநாமத்தான்
தூயகங்கைத்துறைவிடுந்தொன்மையான்
காயும்வில்லினன்கற்றிரடோளினான். (உஅ)

துடியனாயினன்றோற்செருப்பார்த்தபேர்
அடியனற்சிறந்தன்னநிறத்தினான்
நெடியதானைநெருங்கலினீர்முகில்
இடியினோடெழுந்தாலன்னவீட்டினான். (உ௯)

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



கொம்புதுத்தரிகொட்டுமுறைமையன்
பம்பைபம்புபடையினன்பல்லவத்
தம்பணம்பிக்குநாதனழிகவுள்
தும்பியீட்டம்புரைகிளைசுற்றத்தான். (௩௦)

காழமிட்டகுறங்கினன்கங்கையின்
ஆழமிட்டநெடுமையினானரை
தாழவிட்டசெந்தோலன்றயங்குறச்
சூழவிட்டதொடுபுலிவாலினான். (௩௧)

பற்றொடுத்தன்னபல்சூற்கவடியன்
கற்றொடுத்தன்னபோலுங்கழலினான்
அற்றொடுத்தன்னகுஞ்சியனாளியின்
நெற்றொடுத்துநெரிந்தபுருவத்தான். (௩௨)

பெண்ணைவன்செறும்பிற்பிறங்கிச்செறி
வண்ணவன்மயிர்வார்ந்துயர்முன்கையன்
கண்ணகன்றடமார்பெனுங்கல்லினன்
எண்ணெயுண்டவிருள்புரைமேனியான். (௩௩)

கச்சொடார்த்தகறைக்கதிர்வாளினன்
கச்சராவினடுக்குறுநோக்கினன்
பிச்சராமன்னபேச்சினனிந்திரன்
வச்சிராயுதம்போலுமருங்கினான். (௩௪)

ஊற்றுமெய்ந்நறவூனொடுமீனுகர்
நாற்றமேயநகையின்முகத்தினான்
சீற்றமின்றியுந்தீயெழநோக்குவான்
கூற்றமஞ்சக்குமுறுங்குரலினான். (௩௫)

சிருங்கிபேரமெனத்திரைக்கங்கையின்
மருங்குதோன்றுநகருடைவாழ்க்கையான்
ஒருங்குதேனொடுமீனுபகாரத்தன்
இருந்தவள்ளலைக்காணவந்தெய்தினான். (௩௬)

ற்றமப்புறநிற்கச்சுடுகணை
விற்றுறந்தரைவீக்கியவாளொழித்
தற்றநீத்தமனத்தினனன்பினன்
நற்றவப்பள்ளிவாயிலைநண்ணினான்.

கூவாமுன்னமிளையோன்குறுகிநீ
ஆவான்யாரெனவன்பினிறைஞ்சினன்
தேவாநின்கழல்சேவிக்கவந்தனென்
நாவாய்வேட்டுவனாயடியேனென்றான். (௫௮)

வேறு.

நிற்றியீண்டென்றுபுக்குநெடியவற்றொழுதுதம்பி
கொற்றவநின்னைக்காணக்குறுகினனியிர்ந்தகூட்டச்
சுற்றமுந்தானுமுள்ளந்தூயவன்றாயினல்லான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகனொருவனென்றான். (௫௯)

அண்ணலும்விரும்பியென்பாலழைத்திநீயவனையென்றான்
பண்ணவன்வருகவென்னப்பரிவினன்விரைவிற்புக்கான்
கண்ணனைக்கண்ணினோக்கிக்கனிந்தனனிருண்டகுஞ்சி
மண்ணுறப்பணிந்துமேனிவளைத்துவாய்புதைத்துநின்றான். (௬௦)

இருத்தியீண்டென்னலோடுமிருந்திலனெல்லைநீத்த
அருத்தியன்றேனுமீனுமமுதினுக்கமைவதாகத்
திருத்தினென்கொணர்ந்தேனென்கொறிருவுளமென்னவீரன்
விருத்தமாதவரைநோக்கிமுறுவலன்விளம்பலுற்றான். (௬௧)

அரியதாமுவப்பவுள்ளத்தன்பினாலமைந்தகாதல்
தெரிதரக்கொணர்ந்தவென்றாலமிர்தினுஞ்சீர்த்தவன்றே
பரிவினிற்றழீஇயவென்னிற்பவித்திரமெம்மனோர்க்கும்
உரியனவினிதினாமுமுண்டனமன்றேவென்றான். (௬௨)

சிங்கவேறனையவீரன்பின்னருஞ்செப்புவான்யாம்
இங்குறைந்தெறிநீர்க்கங்கையேறுதுநாளையாணர்ப்
பொங்குநின்சுற்றத்தோடும்போயுவந்தினிதினூரில்
தங்கிநீநாவாயோடுஞ்சாருதிவிடியவென்றான். (௬௩)

கார்குலாநிறத்தான்கூறக்காதலனுணர்த்துவானிப்
பார்குலாஞ்செல்வநின்னையிஞ்ஞனம்பார்த்தகண்ணை
ஈர்கிலாக்கள்வனேன்யானின்னலினிருக்கைநோக்கித்
தீர்கிலேனானதையசெய்குவெனடிமையென்றான். (௬௪)

கோதைவிற்குரிசிலன்னான்கூறியகொள்கைகேட்டான்
சீதையைநோக்கித்தம்பிதிருமுகநோக்கித்தீராக்
காதலனாகுமென்றுகருணையின்மலர்ந்தகண்ணன்
யாதினுமினியநண்பவிருத்தியீண்டெம்மொடென்றான். (௬௫)

திருநகர்தீர்ந்தவண்ணமானவதெரித்தியென்னப்
பருவரற்றம்பிகூறப்பரிந்தவன்பையுளெய்தி
இருகணீரருவிசோரக்குகனுமாண்டிருந்தானென்னே
பெருநிலக்கிழத்திநோற்றும்பெற்றிலள்போலுமென்று. (௪௬)

விரியிருட்பகையையோட்டித்திசைகளைவென்றுமேனின்
றொருதனித்திகிரியுந்தியுயர்புகழ்நிறுவிநாளும்
இருநிலத்தெவர்க்குமுள்ளத்திருந்தனனென்னவீய்ந்த
செருவலிவீரனென்னச்செங்கதிர்ச்செல்வன்சென்றான். (௪௭)

மாலைவாய்நியமஞ்செய்துமரபுளியியற்றிவைகல்
வேலைவாயமிர்தன்னானும்வீரனும்விரித்தநாணல்
மாலைவாய்ப்பாரின்பாயல்வைகினன்வரிவிலேந்திக்
காலைவாயளவுந்தம்பியிமைப்பிலன்காத்துநின்றான். (௪௮)

தும்பியின்சூழாத்திற்சுற்றுஞ்சுற்றத்தன்றொடுத்தவில்லன்
வெம்பிவெந்தழியாநின்றநெஞ்சினன்விழித்தகண்ணன்
தம்பிநின்றானைநோக்கித்தலைமகன்றன்மைநோக்கி
அம்பியின்றலைவன்கண்ணீரருவிசோர்குன்றிநின்றான். (௪௯)

துறக்கமேமுதலவாயதூயனயாவையேனும்
மறக்குமாநினையலம்மாவரம்பிலதோற்றுமாக்கள்
இறக்குமாறிதுவென்பான்போன்முன்னைநாளிறந்தான்பின்னாள்
பிறக்குமாறிதுவென்பான்போற்பிறந்தனன்பிறவாவெய்யோன்.

செஞ்செவேசேற்றிற்றோன்றுந்தாமரைதேறிற்றோன்றும்
வெஞ்சுடர்ச்செல்வன்மேனிநோக்கினவிரிந்தவேறோர்
அஞ்சனநாயிறன்னவையனைநோக்கிச்செய்ய
வஞ்சிவாழ்வதனமென்னுந்தாமரைமலர்ந்ததன்றே. (௫௧)

நாண்முதற்கமைந்தயாவுநயந்தனனியற்றிநாமத்
தோண்முதற்கமைந்தவில்லான்மறையவர்தொடரப்போனான்
ஆண்முதற்கமைந்தகேண்மையன்பனைநோக்கியைய
கோண்முதற்கமைந்தநாவாய்கொணருதிவிரைவினென்றான். ( )

வேறு.

ஏவியமொழிகேளாவிழிபுனல்மொழிகண்ணான்
ஆவியுமுலைகின்றானடியிணைபிரிகில்லான்
காவியின்மலர்காயாக்கடன்மழையனையானைத்
தேவியொடடிதாழாச்சிந்தனையுரைசெய்வான். (௫௩)

பொய்ம்முறையிலரோவெம்புகலிடம்வனமேயால்
கொய்ம்முறையுறுதாராய்குறைவிலெம்வலியேமால்
செய்ம்முறைகுற்றேவல்செய்குதுமடியோமை
இம்முறையுறவென்னவினிதிருநெடிதெம்மூர். (௫௪)

தேனுளதினையுண்டாற்றேவருநுகர்தற்காம்
ஊனுளதுணைநாயேமுயிருளவிளையாடக்
கானுளபுனலாடக்கங்கையுமுளதன்றே
நானுளதனையுந்நீயினிதிருநடவெம்பால். (௫௫)

தோலுளதுகில்போலுஞ்சுவையுளதொடர்மஞ்சம்
போலுளபுறன்வைகும்புரையுளகடிதோடும்
கானுளசிலைபூணுங்கையுளகலிவானின்
மேலுளபொருளேனும்விரைவொடுகொணர்வேமால். (௫௬)

ஐயிருபத்தோடைந்தாயிரருளராணை
செய்குநர்சிலைவேடர்தேவரின்வலியாரால்
உய்குதுமடியேமெங்குடிலிடையொருநாணீ
வைகுதியெனின்மேலோர்வாழ்விலைபிறிதென்றான். (௫௭)

அண்ணலுமதுகேளாவகநிறையருண்மிக்கான்
வெண்ணிறநகைசெய்தான்வீரநின்னுழையாமப்
புண்ணியநதியாடிப்புனிதனைவழிபாடுற்
றெண்ணியசிலநாளிற்குறுகுதுமினியென்றான். (௫௮)

சிந்தனையுணர்கிற்பான்சென்றனன்விரைவோடும்
தந்தனனெடுநாவாய்தாமரைநயனத்தான்
அந்தணர்தமையெல்லாமருளுதிர்விடையென்று
இந்துவினுதலாளோடிளவலொடினிதேறா. (௫௯)

விடுநதிகடிதென்றான்மெய்யுயிரனையானும்
முடுகினனெடுநாவாய்முரிதிரைநெடுநீர்வாய்க்
கடிதினின்மடவன்னக்கதியதுசெலநின்றார்
இடருறமறையோருமெரியுறுமெழுகானார். (௬௦)

பாலுடைமொழியாளும்பகலவனனையானும்
சேலுடைநெடுநன்னீர்சிந்தினர்விளையாடத்
தோலுடைநிமிர்கோலிற்றுழவிடவெழுநாவாய்
காலுடைநெடுநெஞ்சிற்சென்றதுகடிதம்மா. (௬௧)

சாந்தணிபுளினத்தின்றடமுலையுயர்கங்கை
காந்தினமணிமின்னக்கடிகமழ்கமலத்தில்
சேந்தொளிவிரியுந்தெண்டிரையெனுநிமிர்கையால்
ஏந்தினளொருதானேயேற்றினளினிதப்பால். (கூ௨)

அத்திசையுற்றையனன்பனைமுகநோக்கச
சித்திரகூடத்திற்சென்னெறிபகரென்னப்
பத்தியினுயிரீயும்பரிவினனடிதாழா
உத்தமவடிநாயேனோதுவதுளதென்றான். (கூ௩)

நெறியிடுநெறிவல்லேனேடினென்வழுவாமல்
நறியனகனிகாயுநறவிவைதரவல்லேன்
உறைவிடமமைவிப்பேனொருநொடிவரையும்மைப்
பிறிகிலெனுடனேகப்பெறுகுவெனெனினாயேன். (கூ௪)

தீயனவகையாவுந்திசைதிசைசெலநூறித்
தூயனவுறைகானந்துருவினென்வரவல்லேன்
மேயினபொருணாடித்தருகுவென்வினைமுற்றும்
ஏயினசெயவல்லேனிருளினுநெறிசெல்வேன். (கூ௫)

கல்லுவென்மலைமேலுங்கவலையின்முதல்யாவும்
செல்லுவெனெறிதூரஞ்செறிபுனறரவல்லேன்
வில்லினமுளெனென்றும்வெருவலெனிருபோதும்
மல்லினுமுயர்தோளாய்மலரடிபிரியாதேன். (கூ௬)

திருவுளமெனின்மற்றென்சேனையுமுடனேகொண்
டொருவலெனிருபோதுமுறைகுவெனுளரானார்
மருவலரெனின்முன்னேமாள்குவென்வசையில்லேன்
பொருவருமணிமார்பாபோதுவெனுடனென்றான். (கூ௭)

அன்னவனுரைகேளாவமலனுமுரைநேர்வான்
என்னுயிரனையாய்நீயிளவலுனினையானின்
நன்னுதலவணின்கேணளிர்கடனிலமெல்லாம்
உன்னுடையதுநானுன்றொழிலுரிமையினுள்ளேன் (கூ௮)

துன்புளதெனினன்றோசுகமுளததுவன்றிப்
பின்புளதிடைமன்னும்பிரிவுளதெனவுன்னேல்
முன்புளெமொருநால்வேமுடிவுளதெனவன்றே
அன்புளவினிநாமோரைவர்களுளரானோம். (கூ௯)

படருறவுளனும்பிகானுறைபகலெல்லாம்
இடருறுபகையாபோயானெனவுரியாய்நீ
சுடருறுவடிவேலாய்சொன்முறைகடவேல்யான்
வடதிசைவருமந்நாணின்னுழைவருகின்றேன். (எ0)

அங்குளகிளைகாவற்கமைதியினுளனும்பி
இங்குளகிளைகாவற்கியாருளருரைசெய்யாய்
உன்கிளையெனதன்றோவுறுதுயருறலாமோ
என்கிளையிதுகாவென்னேவலினினிதென்றான். (எக)

பணிமொழிகடவாதான்பருவரலிகவாதான்
பிணியுடையவனென்னும்பிரிவினன்விடைகொண்டான்
அணியிழைமயிலோடுமையனுமிளையோனும்
திணிமரநிறைகாணிற்சேணுறநெறிசென்றார். (எஉ)

(சு-வது. கங்கைப்படலம்முற்றிற்று. ஆ திருவிருத்தம். சுகூக)

## எ-வது வனம்புகுபடலம்.

பூரியர்புணர்மாதர்பொதுமனமெனமன்னும்
ஈரமுமுளதில்லென்றறிவருமிளவேனில்
ஆரியன்வரலோடுமெமுதளவியசீதக்
காருறுகுறிமானக்காட்டியதவணெங்கும். (க)

வெயிலிளநில்வேபோல்விரிகதிரிடைவீசப்
பயின்மரநிழலீனப்பனிபுரைதுளிமேகப்
புயறரவிளமென்கால்பூவளவியதெய்த
மயிலினநடமாடும்வழியினியனபோனார். (உ)

மன்றவின்மலிகோதைமயிலியன்மடமானே
இன்றுயில்வதிகோபத்தினம்விரிவனவெங்கும்
கொன்றைகள்சொரிபோதின்குப்பைகொள்குல்மாலை
பொன்றிணிமணிமானப்பொலிவனபலகாணாய். (ங)

பாணிளமிஞிறாகப்படுமழைபணையாக
நாணினதொகுபீலிகோலினநடமாடல்
பூணியநினசாயற்பொலிவதுபல்கண்ணில்
காணியவெனலாகுங்களிமயிலவைகாணாய். (ச)

சேந்தொளிவிரிசெவ்வாய்ப்பைங்கிளிசெங்கோலக்
காந்தளின்மலரேறிக்கோதுவகவினாரும்
மாந்தளிர்நறுமேனிமங்கைநின்மடமுன்கை
ஏந்தினவெனலாகுமியல்பினவிவைகாணாய். (௫)

நெய்ஞ்ஞிறைநெடுவேலினிறமுறுதிறமுற்றிக்
கைஞ்ஞிறைநிமிர்கண்ணாய்கருதினவினமென்றே
மெய்ஞ்ஞிறைவிரிசாயல்கண்டுநின்விழிகண்டும்
மஞ்ஞையுமடமானும்வருவனபலகாணாய். (௬)

பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும்
மாவலர்சொரிசூழற்றுயிலெழுமயிலொன்றின்
தூவியின்மணநாறத்துணைபிரிபெடைதானச்
சேவலொடுறவூடித்திரிவதனியல்காணாய். (௭)

அருந்ததியனையாளேயமிர்தினுமினியாளே
செருந்தியின்மலர்தாங்குஞ்செறியிதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிற்பொதிவனபொன்னூதும்
இருந்தையினெழுதீயொத்தெழுவனவியல்காணாய். (௮)

ஏந்திளமுலையாளேயெழுதருமெழிலாளே
காந்தளின்முகைகண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
பாந்தளிதெனவுன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யுஞ்சிறுகுறுநகைகாணாய். (௯)

குன்றுறைவயமாவின்குருளையுமிருள்சிந்திப்
பின்றினதெனலாகும்பிடிதருசிறுமாவும்
அன்றலபிறிவொல்லாவண்டர்தமனையாவின்
கன்றொடுவிளையாடுங்களியனபலகாணாய். (௧௦)

அகில்புனைகுழன்மாதேயணியிழையெனலாகும்
நகுமலர்நிறைமாலைக்கொம்பர்கணதிதோறும்
துகில்புரைநறுநீரிற்றோய்வனதுறையாடும்
முகிழிளமுலையாரின்மூழ்குவபலகாணாய். (௧௧)

முற்றுறுமுகைகிண்டிமுயல்கிலசிலதும்பி
விற்றிருநுதன்மாதேயம்மலர்விரிகோங்கின்
சுற்றுறுமலரேறித்துயில்வனசுடர்மின்னும்
பொற்றகடுறுநீலம்புரைவனபலகாணாய். (௧௨)

கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்னமுடுகினநெறிகாணா
ஆடியசிறைமாவண்டந்தரிணிசைமுன்னாப்
பாடியபெடைகண்டாவருவனபலகாணாய். (௧௩)

கன்னியரணிகோலங்கற்றறிகுநரென்னப்
பொன்னணிநிறவேங்கைக்கொம்பர்கள்புதுமென்பூ
அன்னமென்னடையாய்நின்னளகநன்னுதலப்பும்
சின்னமென்மலர்மானச்சிந்துவபலகாணாய். (௧௪)

மணங்கிளர்மலர்வாசமாருதம்வரவீசக்
கணங்கிளர்தருசுண்ணங்கல்லுடையனகானத்
தணங்கினுமினியாயுன்னணிவடமுலைமுன்றில்
சுணங்கினமவைமானத்துறுவனபலகாணாய். (௧௫)

அடியிணைபொறைகல்லாவென்றுகொலதரெங்கும்
இடையிடைமலர்சிந்துமினமரமிவைகாணாய்
கொடியினெடிளவாசக்கொம்பர்கள்குயிலாயுன்
துடிபுரையிடைநாணித்துவள்வனவவைகாணாய். (௧௬)

வாள்புரைவிழியாயுன்மலர்புரையடிமானத்
தாள்புரைதளிர்வைகுந்தகைஞிமிறிவைகாணாய்
கோள்புரையிருள்வாசக்குழல்புரைமழைகாணாய்
தோள்புரையிளவேயின்றொகுதிகளவைகாணாய். (௧௭)

பூநனைசினைதுன்றிப்புள்ளிடையிடைபம்பி
நானிறநளிர்வல்லிக்கொடியளவிலமல்கி
மானினமயின்மாலைக்குயிலினம்வருகானம்
நிகர்தொழிலாடைத்திரைபொருவனபாராய். (௧௮)

என்றனன்மடவாளோடினிதினில்விளையாடிப்
பொன்றிணிதிரடோளான்போயினனெறிபோதும்
சென்றதுகுடபாலத்திருமலையிதுவன்றோ
என்றனன்வினைவென்றோர்மேவிடமெனவோடும். (௧௯)

அருத்தியினகம்விம்முமன்பினினெடுநாளில்
திருத்தியவினைமுற்றிற்றென்றனன்றெரிகின்றான்
பரத்துவனெனுநாமப்பரமுனியவனோயின்
மருத்துவனனையானைவரவெதிர்கொளவந்தான். (௨௦)

குடையினனிமிர்கோலன்குண்டிகையினன்மூரிச்
சடையினனுரிமானின்சருமனன்மரநாரின்
உடையினன்மயிர்நாலுமுருவினனெறிபேணும்
நடையினன்மறைநாலுநடநவிறருநாவான். (உக)

செந்தழல்புரிசெல்வன்றிசைமுகமுனிசெவ்வே
தந்தனவுயிரெல்லாந்தன்னுயிரெனநல்கும்
அந்தணனுலகேழுமமையெனின்மரேசன்
உந்தியினுதவாமேயுதவிடுதொழில்வல்லான். (உஉ)

அம்முனிவரலோடுமநகனுமலர்தூவி
மும்முறைதொழுதானம்முதல்வனுமெதிர்புல்லி
இம்முறையுருவோநானெய்துவதெனவுள்ளம்
விம்மினனிழிகண்ணீர்விழிவழியுகநின்றான். (உங)

அகலிடநெடிதாளுமமைதியையதுநீரப்
புகலிடமெமதாகும்புரையிடையிதுநாளில்
தகவிலதவவேடந்தழுவினைவருவானேன்
இகலடுசிலைவீரவிளையவனொடுமென்றான். (உச)

உற்றுளபொருளெல்லாமுணர்வுறவுரைசெய்தான்
நற்றவமுனியந்தோவிதிதருநவையென்பான்
இற்றதுசெயலுண்டோவினியெனவிடர்கொண்டான்
பெற்றிலடவமந்தோபெருநிலமகளென்றான். (உரு)

துப்புறழ்துவர்வாயின்றூய்மொழிமயிலோடும்
அப்புறுகடன்ஞாலமாளுதிகடிதென்று
ஒப்பறுமரசன்னையுயர்வனமுறவேகென்
றெப்பரிசுயிருய்ந்தானென்றுணையவனென்றான். (உசா)

அல்லலுமுளவின்பமணுகலுமுளவன்றே
நல்லவுமுளசெய்யுநவைகளுமுளவந்தோ
இல்லையோர்பயனுனின்றிடருறுமிதினென்னாப்
புல்லினனுடனேகொண்டினிதுறைபுரைபுக்கான். (உஎ)

புக்குறைவிடநல்கிப்பூசனைமுறைபேணித்
தக்கனகனிகாயுந்தந்துரைதருமன்பால்
தொக்கநன்முறைகூறித்தூயவனுயிர்போலும்
மக்களினருளுற்றான்மைந்தருமகிழ்வுற்றார். (உஅ)

வைகினர்கதிர்நாறுமளவையின்மறையோனும்
உய்குவமிவனொடியாமுடனுறைதலினென்பான்
செய்தனனினிதெல்லாஞ்செல்வனைமுகமுன்னாக்
கொய்குல்மலர்மார்பகூறுவதுளதென்றான். (௨௯)

வேறு.

நிறையுநீர்மலர்நெடுங்கனிகிழங்குகாய்நேர்ந்த
குறையுந்தீயவைதூயவைகுறைவிலவெம்மோ
டுறையுமிவ்வழியொருங்கினிலுயர்தவமுயல்வார்க்
கிறையுமீதலாதினியதோரிடமரிதின்னும். (௩0)

கங்கையாளொடுகரியவளுமகள்கலந்த
சங்கமாதலிற்பிரியலென்றாமரைச்செங்கண்
அங்கநாயகவயனுக்குமரும்பெறற்றீர்த்தம்
எங்கள்போலியர்தரத்ததன்றிருத்திரீண்டென்றான். (௩௧)

பூண்டமாதவனவ்வழிவிரும்பினன்புகல
நீண்டதன்றிதுநிறைபுனனாட்டுக்குநடுவாம்
மாண்டசிந்தையவிவ்வழிவைகுவெனென்றால்
ஈண்டயாவருநெருங்குவரென்றனனிராமன். (௩௨)

ஆவதுள்ளதேயையகேளையிரண்டமைந்த
காவதப்பொழிற்கப்புறங்கழிந்தபின்காண்டி
மேவுகாதலின்வைகுதிவிண்ணினுமினிதால்
தேவர்கைதொழுஞ்சித்திரகூடமென்றுளதால். (௩௩)

என்றுகாதலினேயினனடிதொழுதேத்திக்
கொன்றைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடிமி
சென்றுசெங்கதிர்ச்செல்வனுநடுவுறச்சிறுமான்
கன்றுநீர்நுகர்காளிந்தியெனுநதிகண்டார். (௩௪)

ஆறுகண்டனரகமகிழ்ந்திறைஞ்சினரறிந்து
நீறுதோய்மணிமேனியர்நெடும்புனல்படிந்தார்
ஊறுமென்கனிகிழங்கினோடுண்டுநீருண்டார்
ஏறியேகுவதெங்கனமென்றலுமிளையோன். (௩௫)

வாங்குவேய்ங்கழைதுணித்தனன்மாணையின்கொடியால்
ஓங்குதெப்பமொன்றமைத்ததினும்பரினுலம்போல்
வீங்குதோளண்ணறேவியோடினிதுவீற்றிருப்ப
நீங்கினனந்தநெடுநதியிருகையானீந்தி. (௩௬)

ஆலைபாய்வயலயோத்தியராண்டகைக்கிளையான்
மாலைமால்வரைத்தோளனுமந்தரந்திரியக்
காலைவேலையைக்கடந்ததுகழிந்தநீர்கடிதின்
மேலைவேலையிற்பாய்ந்ததுமீண்டநீர்வெள்ளம். (௩௭)

அனையரப்புனலேறினரக்கரையணைந்தார்
புனையும்வற்கலைபொற்பினர்நெடுநெறிபோனார்.
சினையுமூலமும்வேரும்வெந்திருநிலந்தீய்ந்து
நினையுநெஞ்சமுஞ்சுடுவதோர்நெடுஞ்சுரநேர்ந்தார். (௩௮)

நீங்கலாற்றாள்சனகியென்றன்னவர்நினையா
ஓங்குவெய்யவனுடுபதியெனக்கதிருகுத்தான்
தாங்குவேங்கடத்துலவைகடழைகொண்டுதழைத்த
பாங்குவெங்கனல்பங்கயவனங்களாப்பரந்த. (௩௯)

வறுத்துவத்தியவனையனவல்லயிற்பரல்கள்
பறித்துவித்தியமலரெனக்குளிர்ந்தனபசைந்த
இறுத்தெரிந்தனவல்லிகளிளந்தளிரீன்ற
கறுத்தவாளரவெயிற்றினுளமுதுகக்களித்த. (௪௦)

குழுமிமேகங்கள்குமுறினகுளிர்துளிகொணர்ந்த
முழுவில்வேடருமுனிவரின்முனிகிலருயிரைத்
தழுவிநின்றனபசியிலபகையிலதணிந்த
உழுவையின்பலமானினங்கன்றொடுமுறங்க (௪௧)

கல்லளைக்கிடந்தகடுவெந்தயர்கின்றகதழ்பாம்
பல்லனுற்றில்வலைபுனற்கிடந்தனவனைய
வல்லையுற்றவேய்புற்றொடுமெரிவனமணிவாழ்
புல்லெயிற்றிளங்கன்னியர்தோளெனப்பொலிந்த. (௪௨)

படர்ந்தெழுந்தபுல்பசுநிறக்கம்பளம்பரப்பிக்
கிடந்தபோன்றனகேகையந்தோகைகள்கிளர
மடந்தைமாரெனநாடகம்வயின்றொறுநவின்ற
தொடர்ந்தபாணரிற்பாங்கிசைமுரன்றனதும்பி. (௪௩)

காலமின்றியுங்கனிந்தனகனிநெடுங்கந்தம்
மூலமின்றியுமுகிழ்த்தனநிலனுறமுழுதும்
கோலமங்கையரொத்தனகொம்பர்களின்பச்
சீலமன்றியுஞ்செய்தவம்வேறுமொன்றுளதோ. (௪௪)

எயினர்தங்கிடமிருடிகளிருப்பிடமேய்ந்த
வயின்வயின்றொறுமணிநிறக்கோபங்கண்மலர்ந்த
பயின்மரந்தொறும்பரிந்தனபேடையைப்பயிலும்
குயிலிரங்கினகுருந்தநின்றநம்பினமுருந்தம். (சரு)

பந்தருட்புரைபாசறைப்பொருள்வயிற்பருவம்
தந்தகேள்வரையுயிருறத்தழுவினர்பிரிந்த
கந்தவோதியர்சிந்தையிற்கொதிப்பதக்கழலோர்
வந்தபோதவர்மனமெனக்குளிர்ந்ததவ்வனமே. (சசு)

வெளிறுநீங்கியபாலையைமெல்லெனப்போனார்
குளிறுவான்மதிக்குழவிதன்சூல்வயிற்றெளிப்பப்
பிளிறுமேகத்தைப்பிடியெனப்பெரும்பனைத்தடக்கைக்
களிறுநீட்டுமச்சித்திரகூடத்தைக்கண்டார். (சஎ)

(எ-வது. வனம்புகுபடலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-எகஅ.)

## அ-வது. சித்திரகூடப்படலம்.

நினையுந்தேவர்க்குநமக்குமொத்தொருநெறிநின்ற
அனகனங்கணாயிரம்பெயருடையமலன்
சனகன்மாமடமயிற்கந்தச்சந்தனஞ்செறிந்த
கனகமால்வரையியல்பெலாந்தெரிவுறக்காட்டும். (க)

வாளும்வேலும்விட்டனவெனவனையகண்மயிலே
தாளினேலமுமாலமுந்தொடர்தருசாரல்
நீளமாமலைதுயில்வனநீருண்டகமஞ்சூற்
காளமேகமுநாகமுந்தெரிகிலகாணாய். (உ)

குருதிவாளெனச்செவ்வரிபரந்தகட்குயிலே
மருவிமால்வரையும்பரிற்குதிக்கின்றவருடை
சுருதிபோற்றெளிமரகதக்கொழுஞ்சுடர்சுற்றப்
பருதிவானவன்பசும்பரிபுரைவனபாராய். (ங)

வடங்கொள்பூண்முலைமடமயிலேமதக்கதமா
அடங்குபேழ்வயிற்றரவுரியமைதொறுந்தொடக்கித்
தடங்கடோறுநின்றுவெதண்டலையயோத்தி
நடங்குமாளிகைத்துகிற்கொடிநிகர்ப்பனநோக்காய். (ச)

உவரிவாயன்றிப்பாற்கடலுதவியமுதே
துவரினீண்மணித்தடந்தொறுமிடந்தொறுந்துவன்றிக்
கவரிபானிறவால்புடைபெயர்வனகடிதில்
பவளமால்வரையருவியைப்பொருவியபாராய். (௫)

சலந்தலைக்கொண்டசீயத்தாற்றனிமதக்கதமா
உலந்துவீழ்தலிற்சிந்தினவுதிரத்தின்மடவார்
புலந்தகாலையற்றுக்கணக்குங்குமப்பொதியில்
கலந்தமுத்தெனவேழமுத்திமைப்பனகாணாய். (௬)

நீண்டமால்வரைமதியுறநெடுமுடிநிவந்த
தூண்டுமாமணிச்சுடரதன்கற்றையிற்சொருக
மாண்டவானிறவருவியம்மழவிடைப்பாகன்
காண்டகுஞ்சடைக்கங்கையைநிகர்ப்பனகாணாய். (௭)

தொட்டமாசுணஞ்சுடரொளிமணியொடுந்தூவி
விட்டசென்றனவிடாமதமழையனவேழம்
வட்டவேங்கையின்மலரொடுந்ததைந்தனவயங்கும்
பட்டநெற்றியிற்சுற்றியபோல்வனபாராய். (௮)

இழைந்தநூலினைமணிக்குடஞ்சுமக்கின்றதென்ன
குழைந்தநுண்ணிடைக்குவியிளவனமுலைக்கொம்பே
தழைந்தசந்தனச்சோலைதன்செலவினைத்தடுப்ப
நுழைந்துபோகின்றதொக்கின்றமதியினைநோக்காய். (௯)

உருகுகாதலிற்றழைகொண்டுமழலைவண்டோச்சி
முருகுநாறுசெந்தேனினைமுழைநின்றும்வாங்கிப்
பெருகுசூலிளம்பிடிக்கொருபிறைமருப்பியானை
பருகவாயினிற்கையினின்றளிப்பதுபாராய். (௧0)

அளிக்குநாயகன்மாயைபுக்கடங்கினனெனினும்
களிப்பிலிந்தியத்தியோகியைக்கரக்கிலனதுபோல்
ஒளித்துநின்றுளராயினுமுறித்தெரிகின்ற
பளிக்கறைச்சிலபரிமுகமாக்களைப்பாராய். (௧௧)

ஆடுகின்றமாமயிலினுமழகியகுயிலே
கூடுகின்றிலர்கொடிச்சியர்தம்மணங்கொதிப்ப
ஊடுகின்றனர்கொழுநரையுருகினர்நோக்கப்
பாடுகின்றனகின்னரமிதுனங்கள்பாராய். (௧௨)

வில்லிவாங்கியசிலையெனப்பொலிநுதல்விளக்கே
வல்லிதாங்கழைதாக்கவில்வழிந்திழிபிரசம்
கொல்லிவாங்கியகுன்றவர்கொடிநெடுங்கவலை
கல்லிவாங்கியகுழிகளைநிறைப்பனகாணாய். (௧௩)

ஒருவில்பெண்மையென்றுரைக்கின்றவுடலினுக்குயிரோ
மருவுகாதலினினிதுடனாடியமந்தி
அருவிநீர்கொடுவீசத்தானப்புறத்தேறிக்
கருவிமாமழையுதிர்ப்பதோர்கடுவனைக்காணாய். (௧௪)

வீறுபஞ்சின்றியமுதநெய்மாட்டியவிளக்கே
சீறுவெங்கதிர்செறிந்தனபேர்கலதிரியா
மாறின்மண்டிலநிரப்பியமாணிக்கமணிக்கற்
பாறைமற்றொருபரிதியிற்பொலிவனபாராய். (௧௫)

சீலமின்னதென்றருந்ததிக்கருளியதிருவே
நீலவண்டினம்படிந்தெழவளைந்துடனிமிர்வ
சோலைவேங்கையின்கொம்பர்கள்பொன்மலர்தூவிக்
காலினிற்றொழுதெழுவனநிகர்ப்பனகாணாய். (௧௬)

விற்கொள்வாணுதல்விளங்கிழையிளந்தளிர்க்கொழுந்தே
எற்கொண்மால்வரையும்பரினிரும்புனங்காக்கும்
கொற்கொள்வேற்கணார்குரீஇயினத்தெறிகுருவிந்தக்
கற்கள்வானிடைமீனெனவீழ்வனகாணாய். (௧௭)

வரிகொளொண்சிலைவயவர்தங்கணிச்சியின்மறிந்த
டரியகாரகில்சுடநிமிர்பசும்புகைப்படலம்
அரியவேதியராகுதிப்புகையொடுமளவிக்
கரியமால்வரைக்கொழுந்தெனப்படர்வனகாணாய். (௧௮)

நானநாண்மலர்நறையகிலுவிதேனுறும்
சோனைவார்குழற்சுமைபெறாதிடுகிடைத்தோகாய்
வானையாற்றுமீன்மலர்ந்தனவெனப்புனல்வறந்த
கானயாறுகள்கணமணியிமைப்பனகாணாய். (௧௯)

மஞ்சளாவியமாணிக்கப்பாறையின்மறைவ
செஞ்செவேநெடுமோகதப்பாறையிற்றெரிவ
விஞ்சைநாடியர்கொழுநரோடேடினர்விமலப்
பஞ்சளாவியசீறடிச்சுவடுகள்பாராய். (௨0)

சுழித்தசெம்பொனின்றிரளைபுரையுந்தியின்றுணையே
கொழித்தமாமணியருவியோடிழிவனகோலம்
அழித்துமேவியவரம்பையரறல்புறைகூந்தல்
கழித்துநீக்கியகற்பகநறுமலர்காணாய். (உக)

அறைகழற்சிலைக்குன்றவரகன்புனங்காவற்
பறையெடுத்தொருகடுவனின்றடிப்பதுபாராய்
பிறையையெட்டினள்பிடித்திதற்கிதுபிழையென்னாக்
கறைதுடைக்குறுபேதையோர்கொடிச்சியைக்காணாய். (உஉ)

அடுத்தபல்பகலன்பரிற்பிரிந்தவரென்ப
தெடுத்துநந்தமக்கியம்புவவெனக்கரிந்திருண்ட
தொடுத்தமாதவிச்சூழலிற்சூரரமகளிர்
படுத்துலைவகியபல்லவசயனங்கள்பாராய். (உ௩)

நினைந்தபோதினுமயிர்தொக்குநேரிழைநிறைதேன்
வனைந்தவேங்கையிற்கோங்கினில்வயின்றொறுந்தொடுத்துக்
குனிந்தவூசலிற்கொடிச்சியொடுத்தவின்குறிஞ்சிக்
கனிந்தபாடல்கேட்டசுணமாவருவனகாணாய். (உ௪)

இலவுமிந்திரகோபமும்புரையிதழினியோய்
அலவுநுண்டுளியருவிநீரரம்பையராடக்
கலவைசாந்துசெங்குங்குமங்கற்பகங்கொடுத்த
பலவுந்தோய்தலிற்பரிமளங்கமழ்வனபாராய். (உ௫)

செம்பொனாற்செய்துகுலிகமிட்டெழுதியசெப்போர்
கொம்பர்தாங்கியதெனப்பொலிவனமுலைக்கொடியே
அம்பொன்மால்வரையலர்கதிருச்சிசென்றணுகப்
பைம்பொன்மாமுடிமிலைச்சியதொப்பதுபாராய். (உ௬)

மடந்தைமார்களிற்றிலதமேமணிநிறத்திணிகல்
தொடர்ந்தபாறையில்வேயினஞ்சொரிகதிர்முத்தம்
இடந்தொறுங்கிடந்திமைப்பனவெக்கிளஞ்செக்கர்
படர்ந்தவானிடைத்தாரகைநிகர்ப்பனபாராய். (உ௭)

குழுவுநுண்டொளைவேயினுங்குறிநரம்பெறிவுற்
றெழுவுதண்டமிழ்யாழினுமினியசொற்கிளியே
முழுவதும்மலர்விரியநாண்முருக்கிடைமிடைந்த
பழுவம்வெங்கனல்கதுவியதொப்பனபாராய். (உ௮)

வளைகள்காந்தளிற்பெய்தனவனையகைம்மயிலே
தொளைகொடாழ்தடக்கைநெடுந்துருத்தியிற்றூக்கி
அளவின்மூப்பினரருந்தவர்க்கருவிநீர்கொணர்ந்து
களபமால்கரிகுண்டிகைசொரிவனகாணாய். (௨௯)

வடுவின்மாவகிரினையெனப்பொலிந்தகண்மயிலே
இடுகுகண்ணினரிடருறுமூப்பினரேக
நெடுகுகூனல்வாளீட்டினவுருகுறுநெஞ்சக்
கடுவன்மாதவர்க்கருநெறிகாட்டுவகாணாய். (௩௦)

பாந்தடேரினைபழிபடப்பரந்தபேரல்குல்
ஏந்துநூன்மணிமார்பினராகுதிக்கியைந்த
கூந்தன்மென்மயிற்குறுகினநெடுஞ்சிறைகோலிக்
காந்துகுண்டத்தின்வயங்கெரியெழுப்புவகாணாய். (௩௧)

அலம்புவார்குழலாய்மயிற்பெண்ணருங்கலமே
நலம்பெய்வேதியர்மார்பினுக்கியைவுறநாடிச்
சிலம்பிபஞ்சினிற்சிக்கறத்தெரிந்தநூறேமாம்
புலம்பெய்மந்திகளுடன்வந்துகொடுப்பனபாராய். (௩௨)

தெரிவைமார்க்கொருகட்டளையெனச்செய்ததிருவே
பெரியமாக்களிற்பலாக்களிற்பிறங்கியவாழை
அரியமாக்கனிகடுவன்களன்புகொண்டளிப்பக்
கரியமாகிழங்ககழ்ந்தனகொணர்வனகாணாய். (௩௩)

ஐவனக்குரறினைக்கதிரிறுங்கவையவரை
மெய்வணக்குறுவேயினமீன்றமெல்லரிசி
பொய்வணக்கியமாதவர்புரைதொறும்புகுந்துன்
கைவணத்தவாய்க்கிள்ளைதந்தளிப்பனகாணாய். (௩௪)

இடிகொள்வேழத்தையெயிற்றொடுமெடுத்துடன்விழுங்கும்
கடியமாசுணங்கற்றறிந்தவரெனவடங்கிச்
சடைகொள்சென்னியர்தாழ்விலர்தாமிதித்தேறப்
படிகடாமெனத்தாழ்வனகிடப்பனபாராய். (௩௫)

அசும்புபாய்வரையருந்தவமுடித்தவர்துணைக்கட்
டசும்புவேய்ந்தவரொத்தவர்தமக்குவிண்டருவான்
விசும்புதூர்ப்பனவாமெனவெயிலெனவிளங்கும்
பசும்பொன்மானங்கள்போவனவருவனபாராய். (௩௬)

நெய்கொணீருண்டுநெருப்புண்டுநீண்டமைநிறைந்த
வய்கொள்வேலெனக்காலனுமறுகுறுங்கண்ணாய்
மெய்கணோகின்றபிடிகளைவிரும்பியவேழம்
கய்கணோகிலதாங்கினநிற்பனகாணாய். (௫௭)

விடங்கொணோக்கிநின்னிடையினைமின்னெனவெருவிப்
படங்கொணாகங்கண்முழைபுகப்பதைப்பனபாராய்
மடங்கலாளிகளெனக்கொடுமழையினமுழங்கக்
கடங்கொள்கார்மதக்கைம்மலையிரிவனகாணாய். (௫௮)

இனையயாவையுமேர்திழைக்கியம்பினன்காட்டி
அனையமால்வரையருந்தவரெதிர்வரவணங்கி
வினையினீங்கியவேதியர்விருந்தினனானான்
மனையின்மெய்யெனுமாதவம்புரிந்தவன்மைந்தன். (௫௯)

வேறு.

மாவியலுதயமாந்துளபவானவன்
மேவியபகையிருளவுணர்வீய்ந்துகக்
காவியல்குடவரைக்காலநேமிமேல்
ஏவியதிகிரிபோலிரவியேகினான். (௬௦)

சக்கரந்தானவனுடலிற்றுக்குற
எக்கியசோரியிற்பரந்ததெங்கணும்
செக்கரத்தீயவன்வாயிற்றீர்ந்துவே
றுக்கவான்றனியெயிறொத்ததிந்துவே. (௬௧)

ஆனனமகளிருக்களித்ததாமரைப்
பூநனிமுகிழ்த்தனபுலரிபோனபின்
மீனெனவிளங்கியவெள்ளியாம்பல்வீ
வானெனமணித்தடமலர்ந்தவெங்குமே. (௬௨)

மந்தியுங்கடுவனுமரங்கணோக்கின
தந்தியும்பிடிகளுந்தடங்கணோக்கின
நிந்தையில்சகுந்தங்கணீளநோக்கின
அந்தியைநோக்கினானறிவைநோக்கினான். (௬௩)

மொய்யுறுநறுமலர்முகிழ்த்தவாஞ்சில
மய்யுறுநறுமலர்மலர்ந்தவாஞ்சில
அய்யனோடிளவற்குமமிழ்தனாளுக்கும்
கய்களுங்கண்களுங்கமலம்போன்றவே. (௬௪)

மாலைவந்தகன்றபின் மருங்கிலாளொடும்
வேலைவந்துறைவிடமேயதாமெனக்
கோலைவந்துமிழ்சிலைத்தம்பிகோலிய
சாலைவந்தெய்தினன்றவத்தினெய்தினன். (சரு)

நெடுங்கழைக்குறந்துணிநிறுவிமேனிரைத்
தொடுங்கலினெடுமுகடொழுக்கியூழுற
இடுங்கலில்கைவிசித்தேற்றியெங்கணும்
முடங்கலில்வரிச்சுமேல்விரிச்சிமூட்டியே. (சசா)

தேக்கடைப்படலையிற்செறிவுசெய்துபின்
பூக்கிளர்நாணலின்புல்லுவேய்ந்துகீழ்
தூக்கியவேய்களிற்சுவருஞ்சுற்றுறப்
போக்கிமண்ணெறிந்தவைபுனலிற்றீற்றியே. (சஎ)

வேறிடமியற்றினன்மிதிலைநாடிக்கும்
கூறினநெறிமுறைகுயிற்றிக்குங்குமச்
சேறுகொண்டழகுறத்திருத்தித்திண்சுவர்
ஆறிடுமெணியொடுங்கனகமப்பியே. (சஅ)

மயிலுடைப்பீலியின்விதானமேல்வகுத்
தயிலுடைச்சுரிகையாலருகுதூக்கறுத்
தெயிலிலங்கழைகளாலியற்றியாறிடு
செயலுடைப்புதுமலர்பொற்பச்சிந்தியே. (சகூ)

இன்னணமிளையவனிழைத்தசாலையில்
பொன்னிறத்திருவொடுங்குடிபுக்கானரோ
நன்னெடுந்திசைமுகனகத்துநம்மனோர்க்
குன்னருமுயிருளுமொக்கவைகுவான். (ருo)

வேறு.

மாயநீங்கியசிந்தனைமாமறை
தூயபாற்கடல்வைகுந்தஞ்சொல்லலாம்
ஆயசாலையரும்பெறலன்பினன்
நேயநெஞ்சின்விரும்பிநிரப்பினன். (ருக)

மேவுமானமிதிலையர்கோன்மகள்
பூவின்மெல்லியபாதமும்போந்தன
தாவிலெம்பிகைசாலைசமைத்தன
யாவையாதுமிலார்க்கியையாதவே. (ருஉ)

என்றுசிந்தித்திளையவர்பார்த்திரு
குன்றுபோலக்குவவியதோளினாய்
என்றுகற்றனைநீயிதுபோலென்றான்
துன்றுதாமரைக்கண்பனிசோர்கின்றான்.

அடருஞ்செல்வமளித்தவனாணையால்
படருநல்லறம்பாலித்திரவியில்
சுடருமெய்ப்புகழ்சூடினனென்பதென்
இடருனக்கிழைத்தேனெடுநாளென்றான். (௫௪)

அந்தவாய்மொழியையனியம்புலும்
நொந்தசிந்தையிளையவனோக்கினால்
எந்தைகாண்டியிடரினுக்கங்குரம்
முந்திவந்துமுளைத்ததன்றோவென்றான். (௫௫)

ஆகசெய்தக்கதில்லையறத்தினின்
றேகலென்பதரிதென்றுமெண்ணினான்
ஓகைகொண்டவனுள்ளிடர்நோக்கினான்
சோகபங்கந்துடைப்பரிதாலெனா. (௫௬)

பின்னுந்தம்பியைநோக்கிப்பெரியவன்
மன்னுஞ்செல்வத்திற்குண்டுவரம்பிதற்
கென்னகேடுண்டிவ்வெல்லையிலின்பத்தை
உன்னுமேல்வருமூழியத்தோடென்றான். (௫௭)

தேற்றித்தம்பியைத்தேவருங்கைதொழ
நோற்றிருந்தனனோன்சிலையோனிப்பால்
ஆற்றன்மாதவனாணையிற்போனவர்
கூற்றினுற்றதுகூறலுற்றாமரோ. (௫௮)

(அ-வது. சித்திரகூடப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-எகூசு.)

## ௯-வது. பள்ளியடைப்படலம்.

பொருவிறாதுவர்போயினர்பொய்யிலார்
இரவுநன்பகலுங்கடிதேகினார்
பரதன்கோயிலுற்றார்படிகாரிரெம்
வரவுசொல்லுதிர்மன்னவற்கேயென்றார். (க)

தூதர்வந்தனருந்தைசொல்லோடெனக்
காதன்முந்திக்களிக்கின்றசிந்தையான்
போதுகென்னெனப்புக்கவர்கைதொழத்
தீதில்ன்கொறிருமுடியோனென்றான். (௨)

வலியனென்றவர்கூறமகிழ்ந்தனன்
இலைகொள்பூணிளங்கோனெம்பிரானொடும்
உலைவில்செல்வத்தனோவெனவுண்டெனத்
தலையினேந்தினன்றாழ்தடக்கைகளே. (௩)

மற்றுஞ்சுற்றத்துளார்க்கும்வரன்முறை
உற்றதன்மைவினாவியுவந்தபின்
இற்றதாகுமெழுதருமேனியாய்
கொற்றவன்றன்றிருமுகங்கொள்கென்றார். (௪)

என்றுகூறலுமேத்தியிறைஞ்சினான்
பொன்றிணிந்தபொருவிறடக்கையால்
நின்றுவாங்கியுருகியநெஞ்சினான்
துன்றுநாண்மலர்ச்சென்னியிற்சூடினான். (௫)

சூடிச்சந்தனந்தோய்த்துடைசுற்றுமண்
மூடுதோட்டின்முடங்கணிமிர்த்தனன்
ஈடுநோக்கிவந்தெய்தியதூதர்க்குக்
கோடிமேலுநிதியங்கொடுத்தனன். (௬)

வாணிலாநகைதோன்றமயிர்புறம்
பூணவானுயர்காதலிற்பொங்கினான்
தாணிலாமலர்தூவினன்றம்முனைக்
காணலாமெனுமாசைகடாவவே. (௭)

எழுகசேனையென்றேவினனெய்தினன்
தொழுதுகேகயர்கோமகன்சொல்லொடும்
தழுவுதேரிடைத்தம்பியொடேறினான்
பொழுதுநாளுங்குறித்தில்ன்போயினான்' (௮)

யானைசுற்றினதேரிணைத்தீண்டின
மானவேந்தர்குழுவினர்வாளுடைத்
தானைசூழ்ந்தனசங்கமுரன்றன
மீனவேலையின்விம்மினபேரியே. (௯)

கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கண்மடந்தையரூர்மடப்
பிடிதுவன்றினபூணொளிபோர்ந்தன
இடிதுவன்றினமின்னெனவெங்குமே. (க0)

பண்டியங்கள்பரந்தனபல்லியம்
கொண்டியம்பினகொண்டலிற்கோதையில்
வண்டியம்பினவாளியின்வாவுறும்
செண்டியங்குபரியுஞ்செறிந்தவே. (கக)

தொளைமுகத்திற்சுருதிவிளம்பின
இளைமுகத்தினனும்பரினேகிட
விளைமுகத்தனல்வேலையின்மீதுசெல்
வளைமுகத்தனவாசியும்வந்தவே. (கஉ)

வில்லின்வேதியர்வாள்செறிவித்தகர்
மல்லின்மல்லர்சுரிகையின்வல்லவர்
கொல்லும்வேல்குந்தங்கற்றுயர்கொற்றவர்
தொல்லைவாரணப்பாகருஞ்சுற்றினார். (கங)

எறிபகட்டினமாடுகளேற்றைமா
குறிகொள்கோழிசிவல்குறும்பூழ்நெடும்
பொறிமயிர்க்கவுதாரிகள்போற்றுறும்
நெறியின்மாக்களுமுந்திநெருங்கினார். (கச)

நிறைந்தமாந்தர்நெருங்கினர்நெஞ்சினில்
பறந்துபோதுங்கொலென்றுபதைக்கின்றார்
பிறந்துதேவருணர்ந்துபெயர்ந்துமுன்
உறைந்தவானுறுவார்களையொக்கின்றார். (கரு)

ஊனளைந்தவுடற்குயிராமெனத்
தானளைந்துதழுவினதண்ணுமை
தேனளைந்துசெவியுறவார்த்தென
வானளைந்ததுமாகதர்பாடலே. (கசு)

ஊறுகொண்டமுரசுமிழோதையை
வீறுகொண்டனவேதியர்வாழ்த்தொலி
ஏறுகொண்டெழுமல்லரிடிப்பினை
மாறுகொண்டனவந்திகரேத்தரோ. (கஎ)

ஆறுங்கானுமகன்மலையுங்கடந்
தேறியேழ்பகனீந்திப்பின்னெந்திரத்
தூறுபாகுமடையுடைத்தொண்முளை
நாறுபாய்வயற்கோசலைநண்ணினான். (௧௮)

ஏர்துறந்தவயலிளமைந்தர்தோள்
தார்துறந்தனதண்டலைநெல்லினும்
நீர்துறந்தனதாமரைநீதெனப்
பார்துறந்தனள்பங்கயச்செல்வியே. (௧௯)

பிதிர்ந்துசாறுபெருந்துறைமண்டிடச்
சிதிர்ந்துசிந்தியழிந்தனதேங்கனி
முதிர்ந்துகொய்யுனரின்மையின்மூக்குமிழ்த்
துதிர்ந்துலர்ந்தனவொண்மலரீட்டமே. (௨௦)

ஏய்ந்தகாலமிதுவிதற்காமெனா
ஆய்ந்துமள்ளரரிகுனரின்மையால்
பாய்ந்தசூதப்பசுநறுந்தேறலால்
சாய்ந்தொசிந்துமுளைத்தனசாலியே. (௨௧)

எட்குலாமலரேசியநாசியர்
புட்குலாவயற்பூசற்கடைசியர்
கட்கிலார்களைகாதற்கொழுனரோ
டுட்கலாமுடையாரினுயங்கினர். (௨௨)

ஓதுகின்றிலகிள்ளையுமோதியர்
தூதுசென்றிலவந்திலதோழர்பால்
மோதுகின்றிலபேரிமுழாவிழு
[illegible] (௨௩

பாடனீத்தனபண்டொடர்பண்குழல்
ஆடனீத்தவரங்கொடகன்புனல்
சூடனீத்தனசூடிகைசூளிகை
மாடனீத்தனமங்கலவள்ளையே. (௨௪)

நகையிழந்தனவாண்முகநாறகிற்
புகையிழந்தனமாளிகைபொங்கழற்
சிகையிழந்தனதீபிகைதேமலர்த்
தொகையிழந்தனதோகையரோதியே. (௨௫)

அலர்ந்தபைங்கூழகன்குளக்கிழனை
மலர்ந்தவாயிற்புனல்வழங்காமையால்
உலர்ந்தவன்கண்ணுலோபர்கடைத்தலை
புலர்ந்துநிற்கும்பரிசிலர்போலவே. (உ௬)

நாவிநீத்தருநல்வளந்துன்னிய
பூவிநீத்தெனநாடுபொலிவொரீஇத்
தேவிநீத்தருஞ்சேணெறிநாவிட
ஆவிநீத்தவுடலெனலாயதே. (உஎ)

என்றநாட்டினைநோக்கியிடருழந்
தொன்றுமுற்றதுணர்ந்திலனானுவான்
சென்றுகேட்பதொர்நீங்குளதாமெனா
நின்றுநின்றுநெடிதுயிர்த்தானரோ. (உஅ)

மீண்டுமெய்தியமெய்யெனுநல்லணி
பூண்டவேந்தன்றிருமகன்புந்திதான்
தூண்டுதேரினுமுந்துறத்தூங்குவான்
நீண்டவாயினெடுநகர்நோக்கினான். (உகூ)

அண்டமுற்றுந்திரிந்தயர்ந்தாயமு
துண்டுபோகியென்றொண்கதிர்ச்செல்வனை
விண்டொடர்ந்துவிலக்குவபோல்வன
கண்டிலன்கொடியின்னெடுங்கானமே. (ஙo)

ஈட்டுநன்புகழ்க்கீட்டியயானையும்
வேட்டவேட்டவர்கொண்மின்விரைந்தெனக்
கோட்டிமாக்களைக்கூவுவபோல்வன
கேட்டிலன்முரசின்கிளரோதையே. (ஙக)

கள்ளமாக்கவர்கண்ணியன்கண்டிலன்
பிள்ளைமாக்களிறும்பிடியீட்டமும்
வள்ளைமாக்கணிதியும்வயிரியர்
கொள்ளைமாக்களிற்கொண்டனரேகவே. (ஙஉ)

காவன்மன்னவன்கான்முளைகண்டிலன்
ஆவுமாவுமழிகவுள்வேழமும்
மேவுகாதனிதியும்வெறுக்கையும்
பூவின்வானவர்கொண்டனர்போகவே. (ஙங)

சூழமைந்தசுரும்புநரம்புந்தம்
ஏழமைந்தவிசையிசையாமையால்
மாழையுண்கண்மயிலெனுஞ்சாயலார்
கூழைபோன்றபொருணர்குழாங்களே. (௩௪)

தேருமாவுங்களிறுஞ்சிவிகையும்
ஊரும்பண்டியுமூருணரின்மையால்
யாருமின்றியெழிலழிவீதிகள்
வாரியின்றியவாலுகவாற்றினே. (௩௫)

அன்னதன்மையகநகர்நோக்கினன்
பின்னையப்பெரியோர்தம்பெருந்தகை
மன்னன்வைகும்வளநகர்போலுமீ
தென்னதன்மையிளையவனேயென்றான். (௩௬)

வேற்றடங்கலர்விண்ணுறவென்றிடும்
கூற்றடங்கப்பொருநெடுங்கோளினாய்
சேற்றடங்கட்டிருவொடுநீங்கிய
பாற்றடங்கடலொத்ததுபாரென்றான். (௩௭)

குருமணிப்பூணரசிளங்கோளரி
இருகைகூப்பியிறைஞ்சினனெய்திய
தொருவகைத்தன்றுறுதுயரூழிவாழ்
திருநகர்த்திருநீர்ந்தனளாமென்றான். (௩௮)

அனையவேலையிலக்கடைத்தோரண
மனையினீணெடுமங்கலவீதிகள்
நினையுமாத்திரத்தேகியநேமியான்
தனயனுந்தந்தைசார்விடமேவினான். (௩௯)

விருப்பினெய்தினன்வெந்திறல்வேந்தனை
இருப்புநல்லிடமெங்கணுங்கண்டிலன்
அருப்பமன்றிதென்றையுறவெய்தினான்
பொருப்புநாணவுயர்ந்தபுயத்தினான். (௪௦)

ஆயகாலையிலையனைநாடித்தன்
றூயகையிற்றொழுதுறுவான்றனை
கூயளன்னைகுறுகுதிரீண்டெனா
வேய்கொடோளியொருத்திவிளம்பினாள். (௪௧)

வந்துதாயையடியில்வணங்கலும்
சிந்தையாரத்தழுவினளுதிலர்
எந்தையென்னையரெங்ஙனகயரென்றனள்
அந்தமில்குணத்தானுமதாமென்றான். (௬௨)

வேறு.

பூண்டெழுகாதலான்முளரித்தாடொழ
வேண்டினெனெய்தினனுள்ளம்விம்முமால்
ஆண்டகைநெடுமுடியரசர்கோமகன்
யாண்டையான்பணித்திரென்றிருகைகூப்பினான். (௬௩)

ஆணவனுரைசெயவழிவிற்சிந்தையாள்
தானவர்வலிதவநிமிர்ந்ததாளையத்
தேனமர்தெரியலான்றேவர்கைதொழ
வானகமெய்தினான்வருந்தனீயென்றாள். (௬௪)

எறிந்தனகடியசொற்செவியுளெய்தலும்
நெறிந்தலர்குஞ்சியானெடிதுவீழ்ந்தனன்
அறிந்திலனுயிர்த்திலனசனியேற்றினால்
மறிந்துயர்மராமரமண்ணுற்றென்னவே. (௬௫)

வாயொளிமழுங்கத்தன்மலர்ந்ததாமரை
ஆயலர்நயனங்களருவிசோர்தரத்
தீயெரிசெவியில்வைத்தனையதீயசொல்
நீயலதுரைசெயநினைப்பரோவென்றான். (௬௬)

எழுந்தனனேங்கினனிரங்கிப்பின்னரும்
விழுந்தனன்விம்மினன்வெய்துயிர்த்தனன்
அழிந்தனனரற்றினனரற்றியின்னன
மொழிந்தனன்பின்னருமுருகிற்செவ்வியான். (௬௭)

அறந்தனைவேரறுத்தருளைக்கொன்றனை
சிறந்தநின்றண்ணளித்திருவைத்தேசழித்
திறந்தனையாமெனிலிறைவநீதியை
மறந்தனையுனக்கிதின்மாசுமேலுண்டோ. (௬௮)

சினக்குறும்பெறிந்தெழுகாமத்தீயவித்
தினக்குறும்பியாவையுமெற்றியாவர்க்கும்
மனக்குறுநெறிசெலும்வள்ளியோய்மறந்
துனக்குறுநெறிசெலலொழுக்கின்பாலதோ. (௬௯)

முதலவன்முதலியமுந்தையோர்பழங்
கதையையும்புதுக்கியதலைவன்கண்ணுடை
நுதலவன்சிலைவிலினோன்மைநூறிய
புதல்வனையெங்கணம்பிரிந்துபோயினாய். (ரு0)

செவ்வழியுருட்டியதிகிரிமன்னவ
எவவழிமரபினுமிரவலாளர்தாம்
இவவழியுலகினிலின்மைநண்பினோர்
அவ்வழியுலகினுமுளர்கொலோவையா. (ருக)

பற்பகனிழற்றுநின்கலிகைபாய்நிழல்
நிற்பனபல்லுயிருணங்கநீநெடுங்
கற்பகநறுநிழல்காதலித்தியோ
மற்பகமலர்ந்ததோண்மன்னர்மன்னனே. (ருஉ)

இம்பர்நின்றேகினையிருக்குஞ்சார்பிழந்
தும்பர்வந்துன்கழலொதுங்கினார்கொலாம்
சம்பரணனையவத்தானைத்தானவர்
அம்பரத்தின்னமுமுளர்கொலாமையா. (ருங)

இயங்கெழுதானையரிறுத்தமாத்திறை
உயங்கலின்மறையவர்க்குதவியும்பரின்
அயங்கெழுவேள்வியோடமரர்க்காக்கிய
வயங்கெரிவளர்த்தனைவைகவல்லையோ. (ருச)

ஏழுயர்மதகளிற்றிறைவவேகினை
வாழியகரியவன்வறியன்கையெனப்
பாழியம்புயத்துநின்பணியினீங்கிலா
ஆழியையினியவற்களிக்கவெண்ணியோ. (ருரு)

பற்றிலைதவத்தினிற்பயந்தமைந்தற்கு
முற்றுலகளித்ததுமுறையினெய்திய
கொற்றவன்முடிமணக்கோலங்காணவும்
பெற்றிலைபோலுநின்பெரியகண்களால் (ருசு)

ஆற்றலனின்னனபன்னியாவலித்
தூற்றுறுகண்ணினனுருகுவான்றனைத்
தேற்றினனொருவகைசிறிதுறேறிய
கூற்றுழற்வரிசிலைக்குரிசில்கூறுவான். (ருஎ)

எந்தையும்யாயுமெம்பிரானுமெம்முனும்
அந்தமில்பெருங்குணத்திராமனுதலால்
வந்தனையவன்கழல்வைத்தபோதலால்
சிந்தைவெலகொடுந்துயர்தீர்கலாதென்றான். (ருஅ)

அவ்வுரைகேட்டலுமசனியேறென
வெவ்வுரைவல்லவள்மீட்டுங்கூறுவாள்
தெய்வநசிலையினுய்தேவிதம்பியென்
றிவ்விருவோரொடுங்கானத்தானென்றாள். (ருக)

வனத்தினமன்னறவள்சைத்தமாறறச்சை
நினைத்தனனிருந்தனனெருப்புண்டானென
வினைத்திறம்யாதினிவிளைவதின்னமும்
எனைத்துளகேட்பன துன்பம்யானென்றான். (சா0)

ஏங்கினவிம்மலோடிருந்தவேந்தலப்
பூங்கழற்காலவன்வனத்துப்போயது
தீங்கிழைத்ததனிலோதெய்வஞ்சீறியோ
ஓங்கியவிதியினேயாதினேவென. (சாக)

தீயனவிராமனேசெய்யுமேலவை
தாய்செயலல்லவோதலத்துளோர்க்கெலாம்
போயதுதாதைவிண்புக்கபின்னரோ
ஆயதன்முன்னரோவருளுவீரென்றான். (சாஉ)

குருக்களையிகழ்தலினன்றுகூறிய
செருக்கினலன்றொருதெய்வத்தாலுமன்
றருக்கனேயனையவவ்வரசர்கோமகன்
இருக்கவேவனத்தவனேகினுனென்றான். (சாங)

குற்றமொன்றில்லையேற்கொதித்துவேறுளோர்
செற்றதுமில்லையேற்றெய்வத்தாலன்றேல்
பெற்றவனிருக்கவேபிள்ளைகான்புக
உற்றதென்பின்னவனுலந்ததென்னென்றான். (சாச)

வாக்கினல்வரந்தரக்கொண்டுமைந்தனைப்
போக்கினேன்வனத்திடைபோக்கிப்பாருனக்
காக்கினேனவனதுபொறுக்கலாமையால்
நீக்கினன்றன்னுயிர்நேமிவேந்தென்றாள். (சாரு)

சூடினமலர்க்கரஞ்சொல்லின்முன்செவி
கூடினபுருவங்கள்குதித்துக்கூத்துநின்
றாடினவுயிர்ப்பினோடழற்கொழுந்துகள்
ஓடினவுமிழ்ந்தனவுதிரங்கண்களே. (சுசு)

துடித்தனகபோலங்கள்சுற்றுந்தீச்சுடர்
பொடித்தனமயிர்த்தொளைபுகையும்போர்த்தது
மடித்ததுவாய்நெடுமழைக்கைம்மண்பக
அடித்தனவொன்றொடொன்றசனியஞ்சவே. (சுஎ)

பாதங்கள்பெயர்தொறும்பாருமேருவும்
போதங்கொணெடுந்தனிப்பொருவில்கூம்பொடு
மாதங்கம்வருகலமறுகிக்கால்பொர
ஓதங்கொள்கடலினின்றுலைவபோன்றவே. (சுஅ)

அஞ்சினர்வானவரவுணரச்சத்தால்
துஞ்சினரெனைப்பலசொரிமதத்தொளை
எஞ்சினதிசைக்கரியிரவிமீண்டனன்
வெஞ்சினக்கூற்றுந்தன்விழிபுதைத்ததே. (சுகூ)

கொடியவெங்கோபத்தாற்கொதித்தகோளரி
கடியவடாயெனக்கருதுகின்றிலன்
நெடியவன்முனியுமென்றஞ்சிநின்றனன்
இடியுருமனையவெம்மொழியியம்புவான். (எ0)

மீண்டனனெந்தையென்றம்முன்மாதவம்
பூண்டனனின்கொடும்புணர்ப்பினாலென்றால்
ஈண்டிலென்வாயதுகேட்டுநின்றயான்
ஆண்டனனேயன்றோவரசையாசையால். (எக)

நீயினமிருந்தனையானுநின்றனென்
ஏயெனுமாத்திரத்தெற்றுகிற்றிலென்
ஆயகன்முனியுமென்றஞ்சினேனலால்
தாயெனும்பெயரெனைத்தடுக்கற்பாலதோ. (எ௨)

மாளவுமுளனொருமன்னன்வன்சொலால்
மீளவுமுன்னொருவீரன்மேயபார்
ஆளவுமுன்னொருபரதனுசினுல்
கோளலதறநெறிகுறையுண்டாகுமோ. (எங)

சுழியுடைத்தாயுடைக்கொடியசூழ்ச்சியால்
வழியுடைத்தாய்வருமரபைமாய்த்தொரு
பழியுடைத்தாக்கினன்பரதன்பண்டெனும்
மொழியுடைத்தாக்கலின்முறைமைவேறுண்டோ. (எ௪)

வேறு.

நோயீரல்லீர்நுங்கணவன்றன்னுயிருண்டீர்
பேயீரேநீரின்னமிருக்கப்பெறுவீரே
மாயீர்மாயாவன்பழிதந்தீர்முலைதந்தீர்
தாயீரேநீரின்னுமெனக்கென்றருவீரே. (எ௫)

ஒன்றும்பொய்யாமன்னனைவாயாலுயிரோடும்
தின்றுந்தீராவன்பழிகொண்டுந்திருவெய்தி
என்றுந்நீரேவாழவுவந்தீரவனேகக்
கன்றுந்தாயும்போவனகண்டுங்கழியீரே. (எ௬)

இறந்தான்றந்தையீந்தவரத்துக்கிழிவென்றா
அறந்தானீதென்றன்னவன்மைந்தனரசெல்லாம்
துறந்தான்றாயின்சூழ்ச்சியின்ஞாலமவனோடும்
பிறந்தானுண்டானென்னுமிதென்னாற்பெறலாமே. (எஎ)

மாளும்மென்றேதந்தையையுன்றாவசைகொண்டாள்
கோளும்மென்றாலேயெனல்கொண்டானதுவன்றேல்
மீளும்மன்றேயென்னையுமெய்யேயுலகெல்லாம்
ஆளும்மென்றேபோயினனன்றோவரசாள்வான். (எஅ)

ஓதாநின்றதொல்குலமன்னனுணர்வப்பால்
யாதானுந்தானாகவெனக்கேபணிசெய்வான்
தீதாநின்றசிந்தனைசெய்தானவனென்னப்
போதாதோவென்றாயிவள்கொண்டபுகழம்மா. (எ௯)

உய்யாநின்றேனின்னமுமென்முன்னுடன்வந்தான்
கய்யார்கல்லைப்புல்லடருண்ணக்கலமேந்தி
வெய்யோனுணின்சாலியின்வெண்சோறமுதென்ன
நெய்யோடுண்ணநின்றதுநின்றார்நினையாரோ. (அ0)

வில்லார்தோளான்மேவினன்வெங்கானகமென்ன
நல்லானன்றேதுஞ்சினனஞ்சேயனையாளைக்
கொல்லேன்மாயேன்வன்பழியாலேகுறைவற்றேன்
அல்லேனேயானன்புடையார்போலழுகின்றேன். (அக)

பாரோர்கொள்ளார்யானுயிர்பேணிப்பழிபூணேன்
தீராதொன்றோதுன்புமிவனூரிற்றிருநில்லாள்
ஆரோடெண்ணிற்றாருரைதந்தாயறமெல்லாம்
வேரோடுங்கேடாகமுடித்தென்விளைவித்தாய். (அ௨)

கொன்றேனென்றந்தையைமற்றுன்கொலைவாயால்
ஒன்றோகானத்தண்ணலையுய்த்தேனுலகாள்வான்
நின்றேனென்றானின்பிழையுண்டோபழியுண்டோ
என்றேனுந்தானென்புகழ்மாயுமிடமுண்டோ. (அ௩)

கண்ணாலேயென்செய்வினையின்னுஞ்சிலகாண்பார்
மண்ணார்பாராதெள்ளுவர்வாளாபழிபூண்டாய்
உண்ணாநஞ்சங்கொல்கிலதென்னுமுறையுண்டென்
றெண்ணாநின்றேனன்றியிரேனென்னுயிரோடே. (அ௪)

என்றுன்பாவிக்கும்பிவயிற்றினிடைவைகித்
தோன்றுந்தீராப்பாதகமற்றென்றுயர்தீரச்
சான்றுந்தானேநல்லறமாகத்தகைஞாலம்
மூன்றுங்காணமாதவம்யானேமுயல்கின்றேன். (அ௫)

சிறந்தார்சொல்லுநல்லுரைசொன்னேன்செயலெல்லாம
மறந்தாய்செய்தாயாகுதிமாயாவுயிர்தன்னைத்
துறந்தாயாகிற்றாயையுமாதியுலகத்தே
பிறந்தாயாதியீதலதில்லைபிறிதென்றான். (அ௬)

வேறு.

இன்னணமினையனவியம்பியானுமிப்
பன்னருங்கொடுமனப்பாவிபாடினை
துன்னருந்துயர்கெடத்தூயகோசலை
பொன்னடிதொழுவனென்றெழுந்துபோயினான். (அ௭)

ஆண்டகைகோசலையருகணெய்தினன்
மீண்டுமண்கிழிதரவீழ்ந்துகேழ்கிளர்
காண்டகுதடக்கையிற்கமலச்சீறடி
பூண்டனன்கிடந்தனன்புலம்பினானரோ. (அ௮)

எந்தையெவ்வுலகுளானெம்முன்யாண்டையான்
வந்ததுதமியெனிம்மறுக்கங்காணவோ
சிந்தையினுறுதுயர்தீர்த்திராலெனும்
அந்தரத்தமரருமழுதுசோரவே. (அ௯)

அடித்தலங்கண்டிலென்யானென்னையனைப்
படித்தலங்காவலன்பெயரற்பாலனோ
பிடித்திலிர்போலுநீர்பிழைத்திராலெனும்
பொடித்தலந்தோளுறப்புரண்டுசோர்கின்றான். (கூ0)

கொடியவர்யாவருங்குலங்கள்வேரற
நொடிகுவென்யானதுநுவல்வதெங்கணம்
கடியவள்வயிற்றினிற்பிறந்தகள்வனேன்
முடிகுவெனருந்துயர்முடியவென்னுமால். (கூக)

இரதமொன்றூர்ந்துபாரிருளைநீக்குமவ்
வரதனிலொளிபெறவளர்ந்ததொல்குலம்
பரதனென்றொருபழிபடைத்ததென்னுமால்
மரதகமலையெனவளர்ந்ததோளினான். (கூஉ)

வாடொடுதானையான்வானில்வைகிடக்
காடொருதலைமகனெய்தக்கண்ணிலா
நாடொருதுயரிடைநைவதேயெனும்
தாடொடுதடக்கையத்தருமமேயனான். (கூங)

புலம்புறுகுரிசிறன்புலர்வுநோக்கினாள்
குலம்பொறைகற்பிவைசுமந்தகோசலை
நிலம்பொறையாற்றலனெஞ்சந்தூய்தெனாச்
சலம்பிறிதுறமனந்தளர்ந்துகூறுவாள். (கூச)

மய்யறுமனத்தொருமாசுளானலன்
செய்யனேயென்பதுதேருஞ்சிந்தையாள்
கய்கயர்கோமகளிழைத்தகைதவம்
அய்யநீயறிந்திலைபோலுமாலென்றாள். (கூரு)

தாளுறுகுரிசிலத்தாய்சொற்கேட்டலும்
கோளுறுமடங்கலிற்குமுறிவிம்முவான்
நாளுறுநல்லறநடுங்காவினால்
சூளுறுகட்டுரைசொல்லன்மேயினான். (கூசு)

அறங்கெடமுயன்றவனருளினெஞ்சினன்
பிறன்கடைநின்றவன்பிறரைச்சீறினோன்
மறங்கொடுமன்னுயிர்கொன்றுவாழ்ந்தவன்
துறந்தமாதவர்க்கருந்துயரஞ்சூழ்ந்துளோன். (கூஎ)

குரவரைமகளிரைவாளிற்கொன்றுளோன்
புரவலனுறுபொருள்புனைவில்வாரினேன்
விரவலர்வெரிநிடைவிழிக்கமீண்டுளோன்
இரவலருநிதியெறிந்துவெளவினேன். (௯௮)

தழைத்ததண்டளவினேன்றலைவனல்லனென்
றழைத்தவனறநெறியந்தணாளரில்
பிழைத்தவன்பிழைப்பிலாமறையைப்பேணலா
திழைத்தவன்பொய்யெனுமிழுதைநெஞ்சினேன். (௯௯)

தாய்பசியுழந்துயிர்தளரத்தான்றனிப்
பாய்பெரும்பாழ்வயிறளிக்கும்பாவியும்
நாயகன்படநடந்தவனுநண்ணுமத்
தீயெரிநரகத்துக்கடிதுசெல்கயான். (௧௦௦)

தாளினிலடைந்தவர்தம்மைத்தற்கொரு
கோளுறவஞ்சினன்கொடுத்தபேதையும்
நாளினுமறமறந்தவனுநண்ணுறும்
மீளருநரகிடைக்கடிதுவீழ்கயான். (௧௦௧)

பொய்க்கரிகூறினேன்போருக்கஞ்சினேன்
கைக்கொளுமடைக்கலங்கரந்துவவ்வினேன்
எய்த்திடத்திடர்செய்தோனென்றின்னோர்புகும்
மெய்க்கொடுநரகிடைவிரைவின்வீழ்கயான். (௧௦௨)

அந்தணருறையுளையனலியூட்டினேன்
மைந்தரைக்கொன்றுளோன்வழக்கிற்பொய்த்துளோன்
நிந்தனைதேவரைநிகழ்த்தினேன்புகும்
வெந்துயர்நரகத்துவீழ்கயானுமே. (௧௦௩)

கன்றுயிரோய்ந்துகக்கறந்துபாலுண்டோன்
மன்றிடைப்பிறர்பொருண்மறைத்துவவ்வினேன்
நன்றியைமறந்திடுநயமிலாவினேன்
என்றிவருறுநரகென்னதாகவே. (௧௦௪)

ஆறுதன்னுடன்வருமஞ்சொன்மாதரை
ஊறுகொண்டலைக்கத்தன்னுயிர்கொண்டேகினேன்
சோறுதன்னயலுளோர்பசிக்கத்துய்த்துளோன்
ஏறுமக்கதியிடையானுமேறவே. (௧௦௫)

எஃகெறிசெருமுகத்தேற்றதெவ்வருக்
கொஃகினனுயிர்வளர்த்துண்ணுமாசையான்
அஃகலிலறநெறியாக்கியோன்பொருள்
வெஃகியமன்னன்வீழ்நரகின்வீழ்கயான். (க௦சு)

அழிவருமரசியலெய்தியாகுமென்
றிழிவருசிறுதொழிலியற்றியாண்டதின்
வழிவருதருமத்தைமறந்துமற்றொரு
பழிவருநெறிபடர்பதகனாகயான். (க௦எ)

தஞ்செனவொதுங்கினர்தனதுபாருளோர்
எஞ்சலின்மறுக்கினோடிரியல்போயுற
வஞ்சிசென்றிறுத்தவன்வாகைமீக்கொள
அஞ்சினமன்னவனாகயானுமே. (க௦அ)

கன்னியையழிசெயக்கருதினேன்குருப்
பன்னியைநோக்கினேன்பருகினேனறை
பொன்னிகழ்களவினிற்பொருந்தினேனென
இன்னவருறுகதியென்னதாகவே. (க௦கூ)

ஊணலவுண்வழிநாயினுண்டவன்
ஆணலன்பெண்ணலனார்கொலாமென
நாண்வனரகமுண்டென்னுநல்லுரை
பேணலன்பிறர்பழிபிதற்றியாகயான். (கக௦)

மறுவிறொல்குலங்களைமாசிட்டேற்றினேன்
சிறுவிலையெளியவருணவுசிந்தினேன்
நறியனவயலவர்நாவினீர்வர
உறுபதநுங்கியவொருவனாகயான். (ககக)

வில்லினும்வாளினும்விரிந்தவாண்டொழில்
புல்லிடையுகுத்தனன்பொய்மையாக்கையைச்
சில்பகலோம்புவான்செறுனர்சீறிய
இல்லிடையிடுபதமேற்கவென்கையால். (கக௨)

ஏற்றவற்கொருபொருளுள்ளதின்றென்று
மாற்றலனுதவலன்வரம்பில்பல்பகல்
ஆற்றினனுழற்றுமோராதனெய்துமக்
கூற்றுறுநரகினோர்கூறுகொள்கயான். (கக௩)

பிணிக்குறுமுடையுடல்பேணிப்பேணிலார்த்
துணிக்குறுவயிரவாடக்கைதூக்கிப்போய்

தணிக்குறுபகைஞரைத்தாழ்கவென்றலே. (கக௪)

கரும்பலர்செந்நெலங்கழனிக்கானநா
டரும்பகைகவர்ந்துணவாவிபேணினென்
இரும்பலர்நெடுந்தளையீர்த்தகாலொடும்
விரும்பலர்முகத்தெதிர்விழித்துநிற்கயான். (கக௫)

தீயனகொடியவள்செய்தசெய்கையை
நாயினேனுணரினன்னெறியினீங்கலாத்
தாயவர்க்கிடரிழைத்துழலுந்தோமுடை
ஆயவர்வீழ்கதியதனின்வீழ்கயான். (கக௬)

வேறு.

தூயவாசகஞ்சொன்னதோன்றலைத்
தீயகானகந்திருவினீங்கிமுன்
போயினான்வரக்கண்டபொம்மலாள்
ஆயகாதலாலழுதுபுல்லினாள். (ககஎ)

செம்மைநன்மனத்தண்ணல்செய்கையும்
அம்மைதீமையுமறிதறேற்றினாள்.
கொம்மைவெம்முலைகுமுறுபாலுக
விம்மல்விம்மநின்றழுதுவீங்கினாள். (கக௮)

முன்னைநுங்குலமுதலுளோர்கடாம்
நின்னையாவரோநிகர்க்குநீர்மையார்
மன்னர்மன்னவாவென்றுவாழ்த்தினாள்
உன்னவுன்னநைந்துருகிவிம்முவாள். (கக௯)

உன்னவுன்னநைந்துருகுமன்புகூர்
அன்னைதாளில்வீழ்ந்திளையவண்ணலும்
சொன்னநீர்மையாறுழுதுமாழ்கினான்
இன்னவேலைவாய்முனிவனெய்தினான். (க௨0)

வந்தமாதவன்தாளில்வள்ளல்வீழ்ந்
தெந்தையாண்டையானியம்புவீரென
நொந்துமாழ்கினானுவல்வதோர்கிலா
அந்தமாதவனழுதுபுல்லினான். (க௨க)

மறுவின்மைந்தனேவள்ளலுந்தையார்
இறுதியெய்தினுளேழிரண்டினை
சிறுவர்செய்கடன்செய்துதீர்த்தியென்
றுறுவன்மேயினனுரையின்மேயினன். (கஉஉ)

அன்னையேவினளடியிறைஞ்சினன்
பொன்னின்வார்சடைப்புனிதனேடும்போய்த்
தன்னைநல்கியத்தருமநல்கினன்
பன்னுதொல்லறப்படிவநோக்கினன். (கஉங)

மண்ணின்மேல்விழுந்தலறிமாழ்குவான்
அண்ணலாழியானவனிகாவலான்
எண்ணெயுண்டபொன்னெழில்கொள்மேனியைக்
கண்ணனீரினற்கழுவியாட்டினன். (கஉச)

பற்றியவ்வயின்பரிவின்வாங்கினர்
சுற்றுநான்மறைத்துறைசெய்கேள்வியார்
கொற்றமண்கணைகுமுறமன்னனை
மற்றோர்பொன்னின்மாமானமேற்றினர். (கஉரு)

கரைசெய்வேலைபோனகரிகையெடுத்
துரைசெய்பூசலிட்டுயிர்துளங்குற
அரைசவேலைசூழ்ந்தழுதுகைதொழப்
புரைசயானையிற்கொண்டுபோயினர். (கஉசா)

உந்துபொற்றடந்தேர்வலானெடும்
மந்திரப்பெருந்தலைவர்மற்றுளோர்
தந்திரத்தனித்தலைவர்நண்பினோர்
வந்துசுற்றமுற்றமுதுமாழ்கினர். (கஉஎ)

சங்குபேரியுந்தழுவுஞ்சின்னமும்
எங்குமெங்குநின்றிரங்கியேங்குவ
மங்குறேய்நகர்மகளிராமெனப்
பொங்குகண்புடைத்தழுவபோன்றவே. (கஉஅ)

மாவும்யானையும்வயங்குதேர்களும்
கோவுநான்மறைக்குழுவுமுன்செலத்
தேவிமாரொடுங்கொண்டுதெண்டிரை
தாவுவார்புனற்சரயுவெய்தி   னர். (கஉகூ)

எய்திநூலுளோர்மொழிந்தயாவையும்
செய்துதீக்கலந்திருத்திச்செல்வனை
வெய்தினேற்றினார்வீரனுந்தைபால்
பொய்யின்மாக்கடன்கழித்திபோந்தென்றார். (கரு0)

என்னும்வேலையிலெழுந்தவீரனை
அன்னைதீமையாலரசனின்னையும்
துன்னுதுன்பத்தாற்றுறந்துபோயினான்.
முன்னமோவெனமுனிவன்கூறினான். (கருக)

துறந்துபோயினானெனவேதோன்றனீ
பிறந்துபேரறம்பிழைத்ததென்றல்போல்
இறந்துபோயினானிருந்ததாண்டது
மறந்துவேறொருமைந்தனுங்கொலாம். (கருஉ)

இடிக்கண்வாளராவிடைவதாமெனாப்
படிக்கண்வீழ்ந்தகம்பதைக்குநெஞ்சினான்
தடுக்கலாகலாத்துயரந்தன்னுளே
துடிக்கவிம்மிநின்றழுதுசொல்லுவான். (கருங)

உரைசெய்மன்னன்மற்றுன்னிலெண்ணில்யார்
இரவிதன்குலத்தெந்தைமுந்தையோர்
பிரதபூசனைக்குரியபேறிலேன்
அரைசுசெய்யவோவாவதாயினேன். (கருச)

பூவினான்முகன்புதல்வனாதியாம்
தாவின்மன்னர்தந்தருமநீதியால்
தேவராயினார்சிறுவனாகியே
ஆவநான்பிறந்தவத்தனாவா. (கருரு)

துன்னுதாள்வளஞ்சுமந்ததாழையில்
பன்னுவான்குலைப்பதடியாயினேன்
என்னையென்னையேயீன்றகாத்தவென்
அன்னையாரெனக்கழகுசெய்தவா. (கருசு)

என்றுகூறிநொந்திடரின்மூழ்குமத்
துன்றுதாரவற்கிளையதோன்றலால்
அன்றுநேர்கடனமைவதாக்கினான்
நின்றுநான்மறைநெறிசெய்நீர்மையான். (கருஎ)

இழையுமாரமுமிடையுமின்னிடக்
குழையுமாமலர்க்கொம்பனார்கடாம்
தழையின்மூண்டகந்தழுவுகானிடை
மழையின்மஞ்ஞைபோலெரியின்மூழ்கினார். (கருஅ)

அங்கிநீரினுங்குளிரவம்புயத்
திங்கள்வாண்முகத்திருவிளங்குறச்
சங்கைதீர்ந்துதங்கணவர்பின்செலும்
நங்கைமார்புகுமுலகநண்ணினார் (கருகூ)

அனையசெய்கையாலரசர்கோமகற்
கினையதன்மையாலினையவசெய்துபின்
மனையினெய்தினான்மரபின்வாழ்வினை
வினையினெய்துமோர்பிணியின்வேலையான். (கசா0)

ஐந்துமைந்துநாளூழியாமென
மைந்தன்வெந்துயர்க்கடலின்வைகினான்
தந்தைதன்வயிற்றருமம்யாவையும்
முந்துநூலுளோர்முறையின்முற்றினான். (கசாக)

முற்றுமுற்றுவித்துதவிமும்மைநூல்
சுற்றம்யாவையுந்தொடரத்தோன்றினான்
வெற்றிமாதவன்வினைமுடித்தவன்
கொற்றவேனெடுங்குமரற்கூடினான். (கசாஉ)

மன்னரின்றியேவையம்வைகலுந்
தொன்மையன்றெனத்துணியுநெஞ்சினார்
அன்னமாநிலத்தறிஞர்தம்மொடும்
முன்னைமந்திரக்கிழவர்முந்தினார். (கசாங)

(கூ-வது. பள்ளியடைப்படலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-கூருகூ)

## ௰-வது. ஆற்றுப்படலம்.

வரன்முறைதெரிந்துணர்மறையின்மாதவத்
தருமறைமுனிவனுமாண்டையானென
விரைவின்வந்தீண்டினர்விரகினெய்தினர்
பரதனைவணங்கினர்பரியுநெஞ்சினர். (க)

மந்திரக்கிழவருநகரமாந்தரும்
தந்திரத்தலைவருந்தரணிபாலரும்
அந்தரமுனிவரோடறிஞர்யாவரும்
சுந்தரக்குரிசிலைமரபிற்சுற்றினார். (உ)

சுற்றினரிருந்துழிச்சுமந்திரப்பெயர்
பொற்றடந்தேர்வலான்புலமையுள்ளத்தான்
கொற்றவற்குறுபொருள்குறித்தகொள்கையான்
முற்றுணர்முனிவனைமுகத்துநோக்கினான். (௩)

நோக்கினாற்சுமந்திரனுவலலுற்றதை
வாக்கினாலன்றியேயுணர்ந்தமாதவன்
காக்குதியுலகுநின்கடனதாமெனக்
கோக்குமரனுக்கதுதெரியக்கூறுவான். (௪)

வேதியருந்தவர்விருத்தர்வேந்தர்கள்
ஆதியர்நின்வயினடைந்தகாரியம்
நீதியுந்தருமமுநிறுவநீயிது
கோதறுகுணத்தினாய்மனத்துட்கோடியால். (௫)

தருமமென்றொருபொருடந்துநாட்டுதல்
அருமையென்பதுபெரிதறிதியையநீ
இருமையுந்தருவதற்கியைவதீண்டிது
தெருண்மனத்தார்செயுஞ்செயலிதாகுமால். (௬)

வள்ளுறுவயிரவாளரசில்வையகம்
கள்ளுறுகதிரிலாப்பகலுநாளொடும்
தெள்ளுறுமதியிலாவிரவுந்தேவுடன்
உள்ளுறையுயிரிலாவுடலுமொக்குமே. (௭)

தேவர்தம்முலகினுந்தீமைசெய்துழல்
மாவலியவுணர்கள்வைகுநாட்டினும்
ஏவெவையுலகமென்றிசைக்குமன்னவை
காவல்செய்தலைவரையின்மைகண்டிலம். (௮)

முறைதெரிந்தொருவகைமுடியரோக்குறின்
மறையவன்வகுத்தனமண்ணில்வானிடை
நிறைபெருந்தன்மையினிற்பசெல்வன
இறைகளையில்லனயாவைகாண்கிலம். (௯)

பூத்தநாண்மலரயனாதிப்புண்ணியர்
ஏத்துவான்புகழினரின்றுகாறுங்கூ
காத்தனர்பின்னொருகளைகணின்மையால்
நீத்தநீருடைகலநீரதாகுமால். (௧௦)

உந்தையோவிறந்தனனும்முனீத்தனன்
வந்ததுமன்னைதன்வரத்தின்மைந்தநீ
அந்தமில்பேரரசளித்தியன்னது
சிந்தனையெமக்கெனத்தெரிந்துகூறினான். (௧௧)

தஞ்சமிவ்வுலகநீதாங்குவாயெனச்
செஞ்சவேமுனிவரன்செப்பக்கேட்டலும்
நஞ்சினைநுகரெனநடுங்குவாரினும்
அஞ்சினனயர்ந்தனனருவிக்கண்ணினான். (௧௨)

நடுங்கினனாத்தடுமாறிநாட்டமும்
இடுங்கினன்மகளிரினிரங்குநெஞ்சினன்
ஒடுங்கியவுயிரினனுணர்வுகைதரத்
தொடங்கினனரசவைக்குள்ளஞ்சொல்லுவான். (௧௩)

மூன்றுலகினுக்குமோர்முதல்வனாய்முதல்
தோன்றினனிருக்கயான்மகுடஞ்சூடுதல்
சான்றவருரைசெயத்தருமமாதலால்
ஈன்றவள்செய்கையினிழுக்குண்டாகுமோ. (௧௪)

அடைவருங்கொடுமையென்னன்னைசெய்கையை
நடைவருந்தன்மைநீர்நன்றிதென்றிரேல்
இடைவருங்காலமீண்டிரண்டுநீத்தது
கடைவருந்தீநெறிக்கலியினாட்சியோ. (௧௫)

வேத்தவையிருந்தநீர்விமலனுந்தியில்
பூத்தவன்முதலியபுவியுட்டோன்றினார்
மூத்தவரிருக்கவேமுறைமையாணிலம்
காத்தவருளரெனிற்காட்டிக்காண்டிரால். (௧௬)

நன்னெறியென்னினுநானிந்நானில
இன்னுயிர்ப்பொறைசுமந்திருந்துவாழ்கிலேன்
அன்னவன்றனைக்கொணர்ந்தலங்கன்மாமுடி
தொன்னெறிமுறைமையிற்சூட்டிக்காண்டிரால். (௧௭)

அன்றெனிலவனுறுமெரியகானிடை
நின்றினிதிருந்தவநெறியினாற்றுவென்
ஒன்றினியுரைப்பினென்னுயிரைநீக்குவென்
என்றனனென்றபோதிருந்தபேரவை.

ஆன்றபேரரசனுமிருப்பவையனும்
என்றனன்மணிமுடியேந்தல்வேந்தநீ
வான்றொடர்திருவினைமறுத்திமன்னிளந்
தோன்றல்கள்யாருளர்நின்னிற்றோன்றினார். (ககூ)

ஆழியையுருட்டியுமறங்கள்போற்றியும்
வேள்வியையியற்றியும்வளர்க்கவேண்டுமோ
ஏழினோடேழெனுமுலகுமெஞ்சினும்
வாழியநின்புகழென்றுவாழ்த்தினார். (உ0)

குரிசிலுந்தம்பியைக்கூவிக்கொண்டலின்
முரசறைந்திந்நகர்முறைமைவேந்தனைத்
தருதுமீண்டென்பதுசாற்றித்தானையை
விரைவினிலெழுகெனவிளம்புவாயென்றான் (உக)

நல்லவனுரைசெயநம்பிகூறலும்
அல்லிலழுங்கியவன்பின்மாநகர்
ஒல்லெனவிரைத்ததாலுயிரில்யாக்கையைச்
சொல்லெனுமமிர்தினாற்றுளித்ததென்னவே. (உஉ)

அவித்தவைம்புலத்தவராதியாயுளப்
புவித்தலையுயிரெலாமிராமன்பொன்முடி
கவிக்குமென்றுரைக்கவேகளித்ததாலது
செவிப்புலநுகர்வதோர்தெய்வத்தேன்கொலாம். (உ௩)

படுமுரசறைந்தனர்பரதன்றம்முனைக்
கொடிநகர்தருமவற்கொணரச்சேனையை
முடுகுகவென்றசொன்மூரிமாநகர்
உடுபதிவேலையினுதயம்போன்றதே. (உச)

எழுந்ததுபெரும்படையேழுவேலையின்
மொழிந்தபேரூழியின்முழங்கிமுந்தெழ
அழிந்ததுகேகயன்மடந்தையாசைபோய்க்
கழிந்ததுதுயர்நெடுங்காதறாண்டவே. (உரு)

பண்ணினபகடுதேர்புரவிபண்டியும்
மண்ணினைமறைத்தனவளர்ந்தமாக்கொடி
விண்ணினைமறைத்தனவிரிந்தமாத்துகள்
கண்ணினைமறைத்தனகமலத்தோனையே. (உசு)

ஈசனிவ்வுலகினையழிக்குநாளெழும்
ஓசையினிமிர்ந்துளதொல்லென்பேரொலி
காசையில்கரியவற்காணமூண்டெழும்
ஆசையினிமிர்ந்ததவ்வனிகராசியே. (உஎ)

படியொடுதிருநகர்துறந்துபன்மரம்
செடியொடுகொடுவனநோக்கிச்சீதையாம்
கொடியொடுநடந்தவக்கொண்டலாமெனப்
பிடியொடுநடந்தனபெருங்கைவேழமே. (உஅ)

சேற்றிளமரைமலர்சிறந்தவாமெனக்
காற்றளம்பொலிதருகன்னிமாரொடும்
ஏற்றிளம்பிடிக்குலமிகலிலின்னடை
தோற்றிளமகளிரைச்சுமப்பபோன்றவே. (உகூ)

வேதனைவெயிற்கதிர்தணிக்கமென்மழைச்
சீதநீர்கொடுநெடுங்கொடியுஞ்சென்றன
கோதைவெஞ்சிலையவன்கோலங்காண்கிலா
மாதரினுடங்குவவரம்பில்கோடியே. (௩0)

வெண்மதிமீச்செலமேகமூர்ந்தென
அண்ணல்வெங்கதிரவனளவின்மூர்த்தியாய்
மண்ணிடையிழிந்தொருவழிக்கொண்டாலென
எண்ணருமன்னவர்களிற்றினேகினார். (௩க)

தேர்மிசைச்சென்றதோர்சிந்துசெம்முகக்
கார்மிசைக்கழிந்ததார்கலியொர்கார்க்கடல்
ஏர்மிசையிவுளிமேலேகிற்றெங்கணும்
பார்மிசைப்படர்ந்ததுபதாதிப்பௌவமே. (௩உ)

தாரையுஞ்சங்கமுந்தாளங்கொம்பொடு
வார்மிசைப்பம்பையுந்துடியுமற்றவும்
பேரியுமியம்பலசென்றபேதைமைப்
பூரியர்குழாத்திடையறிஞர்போலவே. (௩௩)

தாவருநாண்முதலணியலாற்றகை
மேவருகலங்களைவெறுத்தமேனியர்
தேவருமருள்கொளத்தெரியுங்காட்சியர்
பூவுதிர்கொம்பெனமகளிர்போயினார். (௧௪)

அதிர்கடல்வையகமனைத்துங்காத்தவன்
விதிவருந்தனிக்குடைமீதிலாப்படை
பொதிபலகவிகைமீன்பூத்ததாகிலும்
கதிர்மதிநீங்கியகங்குல்போன்றதே. (௧௫)

செல்லியசெலவினாற்சிறியதிக்கெனச்
சொல்லியசேனையைச்சுமந்ததேயெனில்
ஒல்லியல்வேலைநீருடுத்தபாரையோர்
மெல்லியலென்றவர்மெலியரேகொலாம். (௧௬)

தங்குசெஞ்சாந்தகில்கலவைசார்கில
குங்குமங்கொட்டிலகோவைமுத்தில
பொங்கிளங்கொங்கைகள்புதுமைவேறில
தெங்கிளநீரெனத்தெரிந்தகாட்சியே. (௧௭)

இன்றுணையவர்முலையெழுதுசாந்தினம்
மன்றலந்தாரினுமறைந்திலாமையால்
துன்றிளங்கொடிமுகிற்றூசுநீங்கிய
குன்றெனப்பொலிந்தனகுவவுத்தோள்களே. (௧௮)

நறையறுகோதையர்நாட்செய்கோலத்தின்
துறையறவஞ்சனந்துறந்தநாட்டங்கள்
குறையறநிகர்த்தனகொற்றமுற்றுவான்
கறையறக்கழுவியகாலவேலையே. (௧௯)

விரிமணிமேகலைவிரவியார்க்கில
தெரிவையரல்குருரொலியிறேறெனப்
பரிபுரமார்க்கிலாப்பவளச்சீறடி
அரியினமார்க்கிலாக்கமலமன்னவே. (௨௦)

மல்கியகேகயன்மடந்தைவாசகம்
நல்கியதரிவையர்நடுவிற்கேகொலாம்
புல்கியமலர்வடம்பூண்கிலாமையால்
ஒல்கியவொருவகைபொறையுயிர்க்கவே. (௨௧)

கோமகன்பிரிதலிற்கோலநீத்துள
தாமரைச்செல்வியுந்தவத்தைமேவினள்
காமனுமருந்துயர்க்கடலின்மூழ்கினன்
ஆமெனநிகழ்ந்ததவவளவிலசேனையே. (சஉ)

மண்ணையும்வானையும்வயங்குதிக்கையும்
உண்ணியநிமிர்கடலொக்குமென்பதென்
கண்ணினுமனத்தினுங்கமலத்தண்ணறன்
எண்ணினுநெடிதவணெழுந்தசேனையே. (சங)

அலைநெடும்புனலறக்குடித்தலாலகம்
நிலைபெறநிலைநெறிநிறுத்தலாநெடு
மலைகளைமண்ணுறவழுத்தலாற்றமிழ்த்
தலைவனைநிகர்த்ததத்தயங்குதானையே. (சச)

அறிஞருஞ்சிறிஞருமாதியந்தமாச்
செறிபெருந்தானையுந்திருவுநீங்கலால்
குறியவன்புனலெலாம்வயிற்றிற்கொண்டநாள்
மறிகடலொத்ததவ்வயோத்திமாநகர். (சரு)

பெருந்திரைநதிகளும்வயலும்பெட்புறு
மரங்களுமலைகளுமண்ணுங்கண்ணுறத்
திருந்தலிலயோத்தியாந்தெய்வமாநகர்
அருந்தெருவொத்ததப்படைசெல்லாறரோ. (சகா)

தார்கடாங்கோதைதாந்தாமந்தாந்தகை
ஏர்கடாங்கலவைதாங்கமழ்ந்தின்றென்பரால்
கார்கடாமெனமிகக்கடுத்தகைம்மலை
வார்கடாமல்லதம்மன்னன்சேனையே. (சஎ)

ஆளுலாங்கடலினுமகன்றவக்கடல்
தோளுலாங்குண்டலமுதலதொல்லணி
கேளுலாமின்னொளிகிளர்ந்ததில்லையால்
வாளுலாநுதலியர்மருங்குல்போலவே. (சஅ)

மத்தளமுதலியவயங்குபல்லியம்
ஒத்தனசேறலினுரையிலாமையில்
சித்திரச்சுவர்நெடுஞ்சேனைதீட்டிய
பத்தியைநிகர்த்ததப்படையினீட்டமே. (சகூ)

ஏடறுகோதையர்விழியினெய்தகோல்
ஊடறவுரந்தொளைத்துயிருணுவகை
ஆடவர்க்கரும்பெருங்கவசமாயது
காடுறைவாழ்க்கையக்கண்ணனண்ணவே. (ருo)

கனங்குழைக்கைகயன்மகளிற்கண்ணிய
சினக்கிடந்தெரிதலிற்றீய்ந்தவேகொலாம்
அனங்கனெங்கொடுங்கணைகடந்தவாடவர்
மனங்கிடந்துண்கிலமகளிர்கொங்கையே. (ருக)

இன்னணநெடும்படையேகவேந்தனும்
தன்னுடைத்திருவரைச்சீரைசாத்தினான்
பின்னிளையவனொடும்பிறந்ததுன்பொடும்
நன்னெடுந்தேர்மிசைநடத்தன்மேயினான். (ருஉ)

தாயருமருந்தவத்தவருந்தந்தையின்
ஆயமந்திரியருமளவில்சுற்றமும்
தூயவந்தணர்களுந்தொடர்ந்துசூழ்வரப்
போயினன்றிருநகர்ப்புரிசைவாயிலே. (ருங)

மந்தரைக்கூற்றமும்வழிச்செல்வாரொடும்
உந்தியேபோதல்கண்டிளவலோடியார்த்
தந்தரத்தெற்றுவானழன்றுபற்றலும்
சுந்தரத்தோளவன்விளக்கிச்சொல்லுவான். (ருச)

முன்னையர்முறைகெடமுடித்தபாவியைச்
சின்னபின்னஞ்செய்தென்சினத்தைத்தீர்வெனேல்
என்னையின்றென்னையன்றுறக்குமென்றலால்
அன்னையென்றுணர்ந்திலெனையநானென்றான். (ருரு)

ஆதலான்முனியுமென்றையனந்தமில்
வேதனைக்கூனியைவெகுண்டுமென்னினும்
கோதிலாவருமறைகுலவுநூல்வலாய்
போதுநாமென்றுகொண்டரிதிற்போயினான். (ருசு)

மொய்பெருஞ்சேனையுமூரிஞாலமும்
கய்கலந்தயலொருகடலிற்சுற்றிட
அய்யனுந்தேவியுமிளையவாளியும்
வய்கியசோலையிற்றானும்வைகினான். (ருஎ)

அல்லணைநெடுங்கணீரவியாடினன்
கல்லணைகிழங்கொடுகனியுமுண்டிலன்
வில்லணைத்துயர்ந்ததோள்வீரன்வைகிய
புல்லணைமருங்கிற்முன்பொடியின்வைகினன். (ருO)

ஆண்டிறின்றுண்டகையடியினேகினன்
ஈண்டியநெறியெனத்தானுமேகினன்
தூண்டிடுதேர்களுந்துரகராசியும்
காண்டகுகரிகளுந்தொடரக்காலினே. (ருக)

(கO-வது. ஆற்றுப்படலம் முற்றிற்று. ஆ_ திருவிருத்தம்-கககஅ)

## கக-வது. குகப்படலம்.

பூவிரிபொலன்கழற்புனைவிருனையான்
காவிரிநாடன்னகழனிநாடொரீஇத்
தாவரசங்கமமென்னுந்தன்மைய
யாவையுமிரங்கிடக்கங்கையெய்தினன். (க)

எண்ணருஞ்சுரும்பதம்மினத்துக்கல்லது
கண்ணகன்பெரும்புனற்கங்கையெங்கணும்
அண்ணல்வெங்கரிமதத்தருவிபாய்தலால்
உண்ணவுங்குடையவுமுரித்தன்றுயதே. (உ)

அடிமிசைத்தூளிபுக்கடைந்ததேவர்தம்
முடியுறப்புலர்ந்ததோர்முறைமைதேர்ந்திலென்
நெடிதுயிர்த்துண்டவுநீந்தநின்றவும்
பொடிமிசைப்புரண்டவும்புரவியீட்டமே. (ங)

பாலையெய்நிறத்தொடுபெண்டுதான்படர்
ஓலையெய்நெடுங்கடலோடிற்றில்லையால்
மாலையெய்நெடுமுடிமன்னன்சேனையாம்
வேலையேமடுத்ததக்கங்கைவெள்ளமே. (ச)

கான்றலைநண்ணியகாளைபின்படர்
தோன்றலையவ்வழிதொடர்ந்துசென்றன
ஆன்றவருணர்த்தியவக்குரோணிகள்
மூன்றுபத்தாயிரத்திரட்டிமுற்றுமே. (ரு)

அப்படைகங்கையையடைந்தவாயிடைத்
துப்புடைக்கடலினீர்சுமந்தமேகத்தை
ஒப்புடையண்ணலோடுற்றவேகொலாம்
இப்படையெடுத்ததென்றெடுத்தசீற்றத்தான். (சு)

குகனெனப்பெயரியகூற்றினாற்றலான்
தொகைமுரட்சேனையைத்துகளினாக்குவான்
நகைமிகக்கண்கடைநாறநாசியில்
புகையுறக்குனிப்புறும்புருவப்போர்விலான். (எ)

மையுறவுயிரெலாமிறுதிவாங்குவான்
கையுறுகவரயில்பிடித்தகாலன்றான்
ஐயைநூறாயிரமுருவமாயின
மெய்யுறுதானையான்வில்லின்கல்வியான். (அ)

கட்டியசுரிகையன்கடித்தவாயினன்
வெட்டியமொழியினன்விழிக்கட்டீயினன்
கொட்டியதுடியினன்குறிக்குங்கொம்பினன்
கிட்டியதமரெனக்கிளர்ந்ததோளினான். (கூ)

எலியெலாமிப்படையரவம்யானென
ஒலியுலாஞ்சேனையையுவந்துகூயினான்
வலியுலாமுலகினில்வாழும்வள்ளுகிர்ப்
புலியெலாமொருவழிபுகுந்தபோலவே. (க0)

மருங்கடைதென்கரைவந்துதோன்றினான்
ஒருங்கடைநெடும்படையொல்லெனார்ப்பினோ
டருங்கடையுகந்தனிலசனிமாமழை
கருங்கடல்கிளர்ந்தெனக்கலந்துசூழவே. (கக)

தோன்றினபுளிஞரைநோக்கிச்சூழ்ச்சியின்
ஊன்றியசேனையையும்பரேற்றுதற்
கேன்றனனென்னுயிர்த்துணைவற்கீகுவான்
ஆன்றபேரரசீரமைதிராமென்றான். (கஉ)

துடியெறிநெறிகளுந்துறையுஞ்சுற்றுற
ஓடியெறியம்பிகள்யாதுமோட்டலிர்
கடியெறிகங்கையின்கரைவந்தோர்களைப்
பிடியெறிபடவெனாப்பெயர்த்துங்கூறுவான். (கங)

வேறு

அஞ்சனவண்ணனென்னாருயிர்நாயகனாளாமே
வஞ்சனையாலரசெய்தியமன்னரும்வந்தாரோ
செஞ்சரமென்பனதீயுமிழ்குன்றனசெல்லாவோ
உஞ்சிவர்போய்விடினாய்க்குகனென்றனையோதாரோ. (௧௪)

ஆழநெடுந்திரையாறுகடந்திவர்போவாரோ
வேழநெடும்படைகண்டுவிலங்கிடும்வில்லாளோ
தோழமையென்றவர்சொல்லியசொல்லொருசொல்லன்றோ
ஏழமைவேடனிறந்திலனென்றெனையேசாரோ. (௧௫)

முன்னவனென்றுநினைந்திலன்மொய்புலியன்னானோர்
பின்னவனின்றனனென்றிலன்னவைபேசானேல்
என்னிவனென்னையிகழ்ந்ததிவ்வெல்லைகடந்தன்றோ
மன்னவர்நெஞ்சினில்வேடர்விடுஞ்சரம்வாயாவோ. (௧௬)

பாவமுநின்றபெரும்பழியும்பகைநண்போடும்
ஏவமுமென்பவைமண்ணுலகாள்பவரெண்ணாரோ
ஆவதுபோகவென்னாருயிர்த்தோழமைதந்தான்மேல்
போவதுசேனையுமாருயிருங்கொடுபோயன்றோ. (௧௭)

அருந்தவமென்றுணையாளவிவன்புவியாள்வானோ
மருந்தெனினன்றுயிர்வண்புகழ்கொண்டுபின்மாயேனோ
பொருந்தியகேண்மையுகந்தவர்தம்மொடுபோகாதே
இருந்ததுநன்றுகழிக்குவெனென்கடனின்றோடே. (௧௮)

தும்பியுமாவுமிடைந்தபெரும்படைசூழ்வாரும்
வம்பியரூரிவர்வாள்வலிசங்கைகடந்தன்றோ
வெம்பியவேடருளீர்துறையோடம்விலக்கீரோ
நம்பிமுன்னேயினிநம்முயிர்மாய்வதுநன்றன்றோ. (௧௯)

போனபடைத்தலைவீரர்தமக்கிரைபோதாவிச்
சேனைகிடக்கிடுதேவர்வரிற்சிலைமாமேகம்
சோனைபடக்குடர்சூறைபடச்சுடர்வாளோடும்
தானைபடத்தனியானைபடத்திரள்சாயேனோ. (௨0)

நின்றகொடைக்கையென்னன்பனுடக்கநெடுஞ்சீரம்
அன்றுகொடுத்தவண்மைந்தர்பலத்தையென்னம்பாலே
கொன்றுகுவித்தநிணங்கொள்பிணக்குவைகொண்டோடித்
துன்றுதிரைக்கடல்கங்கைமடுத்திடைதூராதோ. (௨௧)

ஆடுகொடிப்படைசாடியறத்தவரேயாள
வேடுகொடுத்ததுபாரெனுமிப்புகழ்மேவீரோ
நாடுகொடுத்தவென்னாயகனுக்கிவர்நாமரும்
காடுகொடுக்கிலராகியெடுத்ததுகாணீரோ. (உஉ)

மாமுனிவர்க்குறவாகிவனத்திடையேவாழும்
கோமுனியத்தகுமென்றுமனத்திறைகொள்ளாதே
ஏமுனையுற்றிடலேழுகடற்படையென்றாலும்
ஆமுனையிற்சிறுகூழெனவிப்பொழுதாகாதோ. (உ௩)

என்பனசொல்லியிரும்பனமேனியரேனோர்முன்
வன்பணைவில்லினன்மல்லுயர்தோளினன்வாள்வீரற்
கன்பனுநின்றனனின்றதுகண்டரியேறன்ன
முன்பனில்வந்துமொழிந்தனன்மூரியதேர்வல்லான். (உ௪)

வேறு.

கங்கையிருகரையுடையான்கணக்கிறந்தநாவாயான்
உங்கள்குலத்தனிநாதற்குயிர்த்துணைவனுயர்தோளான்
வெங்கரியினேறனையான்விற்பிடித்தவேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க்குகனென்னுங்குறியுடையான். (உ௫)

கற்காணுந்திண்மையான்கரைகாணாக்காதலான்
அற்காணிற்கண்டனையவழகமைந்தமேனியான்
மற்காணுந்திருநெடுந்தோண்மழைகாணுமணிநிறத்தாய்
நிற்காணுமுள்ளத்தானெறியெதிர்நின்றனனென்றான். (உ௬)

தன்முன்னேயவன்றன்மைதன்றுணைவன்முந்துரைத்த
சொன்முன்னேயுவக்கின்றதுருசிலாத்திருமனத்தான்
மன்முன்னேதழீஇக்கொண்டமனக்கினியதுணைவனேல்
என்முன்னேயவற்காண்பென்யானேசென்றெனவெழுந்தான். (உ௭)

என்றெழுந்ததம்பியொடுமெழுகின்றகாதலொடும்
குன்றெழுந்துசென்றதெனக்குளிர்கங்கைக்கரைகுறுகி
நின்றவனைநோக்கினான்றிருமேனிநிலையுணர்ந்தான்
துன்றுகருநறுங்குஞ்சியெயினர்கோன்றுண்ணென்றான்.

வற்கலையினுடையானைமாசடைந்தமெய்யானை
நற்கலையின்மதியென்னநகையிழந்தமுகத்தானைக்
கற்கனியக்கனிகின்றதுயரானைக்கண்ணுற்றான்
விற்கையினின்றிடைவீழவிம்முற்றுநின்றொழிந்தான். (உ௯)

நம்பியுமென்னாயகனையொக்கின்றானயனின்றான்
தம்பியையுமொக்கின்றான்றவவேடந்தலைநின்றான்
துன்பமொருமுடிவிலலைத்திசைநோக்கித்தொழுகின்றான்
எம்பெருமான்பின்பிறந்தாரிழைப்பரோபிழைப்பென்றான். (௩0)

உண்டிடுக்கணொன்றுடையானுலைபாதவன்புடையான்
கொண்டதவவேடமேகொண்டிருந்தான்குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்துபெயர்கின்றேன்காமின்கள்நெறியென்னாத்
தண்டுறையோர்நாவாயிலொருதனியேதான்வந்தான். (௩௧)

வந்தெதிரேதொழுதானைவணங்கினான்மலரிருந்த
அந்தணனுந்தனைவணங்குமவனுமவனடிவீழ்ந்தான்
தந்தையினுங்களிகூரத்தழுவினான்றகவுடையோர்
சிந்தையினுஞ்சென்னியினும்வீற்றிருக்குஞ்சீர்த்தியான். (௩௨)

வேறு.

தழுவினபுளினர்வேந்தன்றாமரைச்செங்கணானை
எழுவினுமுயர்ந்ததோளாயெய்தியதென்னையென்ன
முழுதுலகளித்ததந்தைமுந்தையோர்முறையினின்றும்
வழுவினனதனைநீக்கமன்னனைக்கொணர்வானென்றான். (௩௩)

கேட்டனன்கிராதர்வேந்தன்கிளர்ந்தெழுமுயிர்ப்பனாகி
மீட்டுமண்ணதனில்வீழ்ந்தான்விம்மினனுவகைவீங்கத்
தீட்டருமேனிமைந்தன்சேவடிக்கமலப்பூவில்
பூட்டியகையனபொய்யில்லுள்ளத்தன்புகலலுற்றான். (௩௪)

தாயுரைகொண்டுதாதையுதவியதரணிதன்னைத்
தீயவினையென்னநீத்துச்சிந்தனைமுகத்திற்றேக்கிப்
போயினையென்றபோழ்துபுகழினோய்தன்மைகண்டால்
ஆயிரமிராமர்நின்கேளாவரோதெரியினம்மா. (௩௫)

என்புகழ்கின்றதேழையெயினனேனிரவியென்பான்
தன்புகழ்க்கற்றைமற்றையொளிகளைத்தவிர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைநுங்கண்மரபினோர்புகழ்களெல்லாம்
உன்புகழாக்கிக்கொண்டாயுயர்குணத்துரவுத்தோளாய். (௩௬)

எனவிவையினையமாற்றமியைவனபலவுங்கூறிப்
புனைகழற்புலவுவேற்கைப்புளிஞர்கோன்பொருவில்காதல்
அனையவற்கமைவிற்செய்தானாரவற்கன்பிலாதார்
நினைவருங்குணங்கொடன்றோவிராமன்மேனிமிர்ந்தகாதல். (௩௭)

அவ்வழியவனைநோக்கியருடருவாரியன்ன
செவ்வழியுள்ளத்தண்ணறென்றிசைச்செங்கைகூப்பி
எவ்வழியுறைந்தானம்முன்னென்றலுமெயினர்வேந்தன்
இவ்வழிவீரயானேகாட்டுவலெழுகவென்றான். (௰௮)

காரெனக்கடிதுசென்றான்கல்லிடைப்படுத்தபுல்லின்
வார்சிலைத்தடக்கைவள்ளல்வைகியபள்ளிகண்டான்
பார்மிசைப்பதைத்துவீழ்ந்தான்பருவரற்பரவைபுக்கான்
வார்மணிப்புனலான்மண்ணைமண்ணுநீராட்டுங்கண்ணான். (௰௯)

இயன்றதென்பொருட்டினாலிவ்விடருனக்கென்றபோழ்தும்
அயின்றனைகிழங்குங்காயுமமிர்தெனவரியபுல்லில்
துயின்றனையெனவுமாவிதுறந்திலென்சுடருங்காசு
குயின்றுயர்மகுடஞ்சூடுஞ்செல்வமுங்கொள்வென்யானே. (௨௦)

தூண்டரநிவந்ததோளான்பின்னருஞ்சொல்லுவானந்
நீண்டவன்றுயின்றசூழலிதுவெனினிமிர்ந்தநேயம்
பூண்டவன்றொடர்ந்துபின்னேபோந்தவன்பொழுதுநீத்த
தியாண்டெனவினிதுகேட்டானெயினர்கோனிதனைச்சொன்னான்.

அல்லையாண்டமைந்தமேனியழகனுமவளுந்துஞ்ச
வில்லையூன்றியகையோடும்வெய்துயிராப்போடும்வீரன்
கல்லையாண்டுயர்ந்ததோளாய்கண்கணீர்சொரியக்கங்குல்
எல்லைகாண்பளவுநின்றானிமைப்பிலனயனமென்றான். (௨௨)

என்பத்தைக்கேட்டமைந்தனிராமனுக்கிளையாரென்று
முன்பொத்ததோற்றத்தேமில்யானென்றுமுடிவிலாத
துன்பத்துக்கேதுவானேனவனதுதுடைக்கநின்றான்
அன்பத்துக்கெல்லையுண்டேயழகிதென்னடிமையென்றான். (௨௩)

அவ்விடையண்ணறானுமன்றரும்பொடியின்வைகித்
தெவ்விடைதரநின்றார்க்குஞ்செறிகழற்புளிஞர்கோமான்
இவ்விடைக்கங்கையாற்றினேற்றினையாயினெம்மை
வெவ்விடர்க்கடனின்றேற்றிவேந்தன்பால்விடுத்ததென்றான். (௨௪)

நன்றெனப்புளிஞர்வேந்தனண்ணினன்றமனைநாவாய்
சென்றினிதருதியென்னவந்தனசிவன்சேர்வெள்ளிக்
குன்றெனக்குனிக்குமம்பொற்குவடெனக்குபேரன்மானம்
ஒன்றெனநாணிப்பல்வேறுருவுகொண்டனையவான. (௨௫)

நங்கையர்நடையினன்னநாணுறுசெலவினாவாய்
கங்கையுமிடமிலாமைமிடைந்தனகலந்தவெங்கும்
அங்கொடிங்கிழித்தியேற்றுமமைதியினமரர்வையத்
திங்கொடங்கிழித்தியேற்றுமிருவினையென்னலான. (௪௬)

வந்தனவரம்பினாவாய்வரிசிலைக்குரிசின்மைந்த
சிந்தனையாவதென்றுசிருங்கிபேரியர்கோன்செப்பச்
சுந்தரவரிவிலானுஞ்சுமந்திரன்றன்னைநோக்கி
எந்தையித்தானைதன்னையேற்றுதிவிரைவினென்றான். (௪௭)

குரிசிலதேவலாலக்குரகதத்தேர்வலானும்
வரிசையின்வழாமைநோக்கிமரபுளிவகையினேற்றக்
கரிபரியிரதங்காலாள்கணக்கறுகரையில்வேலை
எரிமணிதிரையின்வீசுங்கங்கையாறேறிற்றன்றே. (௪௮)

இடிபடுமுழக்கம்பொங்கவினமழைமகரநீரை
முடிவுறமுகப்பவூழியிறுதியின்மொய்ப்பபோலக்
கொடியொடுவெங்கம்வேலைகூம்பொடுபடர்வபோல
நெடியகையெடுத்துநீட்டிநீர்த்தினநெடுங்கைவேழம். (௪௯)

சங்கமுமகரமீனுந்தரளமுமணியுந்தள்ளி
வங்கநீர்க்கடலும்வந்துதன்வழிப்படரமானப்
பொங்குவெங்களிறுநூக்கக்கரையொரீஇப்போயிற்றம்மா
கங்கையுமிராமற்காணுங்காதலதென்னமாதோ. (௫௦)

கொடிஞ்சொடுதட்டுமச்சுமாழியுங்கோத்தமொட்டும்
நெடுஞ்சுவர்கொடியும்யாவுநெறிவருமுறையினீக்கி
விடுஞ்சுவற்புரவியோடும்வேறுவேறேற்றிச்சென்ற
மடிஞ்சபினுடம்புகூட்டும்வினையெனவயிரத்தேர்கள். (௫௧)

நாவிரண்டாயகோடிநவையினாவாய்கண்மீதா
சேறிரண்டனையவாயகதியொடுநதியிற்சென்ற
பாறிரண்டனையமெய்யபயந்திரண்டனையநெஞ்ச
காறிரண்டனையகாலகடுநடைக்கலினப்பாய்மா. (௫௨)

ஊடுறநெருக்கியோடத்தொருவர்முன்னொருவர்கிட்டிச்
சூடகத்தளிர்க்கைமாதர்குழுமினர்துவன்றித்தோன்றப்
பாடியல்களிநல்யானைப்பந்தியங்கடையிற்குத்தக்
கோடுகண்மிடைந்தவென்னமிடைந்தனகுவவுக்கொங்கை. (௫௩)

பாங்கினுத்தரியமானப்படர்திரைதவழப்பாரின்
வீங்குநீரழுவந்தன்னுள்விழுமதக்கலுழிவெள்ளத்
தோங்கல்கடலைகடோன்றவொளித்தவனுயர்ந்தகும்பம்
பூங்குழற்கங்கைநங்கைமுலையெனப்பொலிந்தமாதோ. (௫௪)

பொலங்குழைமகளிர்நாவாய்ப்போக்கினென்றூன்றுதாக்க
மலங்கினரிரண்டுபாலுமறுகினர்வெருவிநோக்க
அலங்குநீர்வெள்ளந்தள்ளியழிதரவாங்குமிங்கும்
கலங்கலின்வெருவிப்பாயுங்கயற்குலநிகர்த்தகண்கள். (௫௫)

இயல்வுறுசெலவினாவாயிருகையுமெயினர்தூண்டத்
துயல்வன துடுப்புவீசுந்துவலைகண்மகளிர்மென்றூ
சுயல்வுறுபரவையல்குலொளிப்புறத்தளிர்ப்பவுள்ளத்
தயர்வுறுமதுகைமைந்தர்க்கயர்வுயிர்ப்பளித்ததம்மா. (௫௬)

இக்கரையிரைத்தசேனையெறிகடன்முகந்துவெஃகி
அக்கரையடையவீசிவறியனவணுகுநாவாய்
புக்கலையாழிநன்னீர்பொறுத்தனபோக்கிப்போக்கி
அக்கணத்துவரிமீளுமகன்மழைநிகர்த்தவம்மா. (௫௭)

அகிலிடுதூபமன்னவாய்மயிற்பீலியார்த்த
மகளிடுமரண்மாத்தண்டுகூம்பெனமுகிலின்வண்ணக்
துகிலொடுதொடுத்தசெம்பொற்றகட்டிடைத்தொடுத்தமுத்தம்
நகுகொடிநெடியபாயினவவெனச்சென்றநாவாய். (௫௮)

ஆனனங்கமலத்தன்னமின்னன்னவமிர்தச்செவ்வாய்
தேனனைகுழலாரேறுமம்பிகள்சிந்துமுத்தம்
மீனெனவிரிந்தகங்கைவிண்ணெனப்பண்ணைமுற்றி
வானவர்மகளிரூருமானமேநிகர்த்தமாதோ. (௫௯)

துளிபடத்துழாவுதிண்கோற்றுடுப்பிருகாலிற்றூன்ற
நளிர்புனற்கங்கையாற்றினடந்தெனச்செல்லுநாவாய்
களியுடைமஞ்ஞையன்னகனங்குழைகயற்கண்மாதர்
ஒளிரடிக்கமலந்தீண்டவுயிர்படைத்தனவேயொத்த. (௬௰)

மய்யறுவிசும்பின்மண்ணின்மற்றமோருலகின்முற்றும்
மெய்வினைதவமேயன்றிமேலுமொன்றுளதோகீழோர்
செய்வினைநாவாயேறித்தீண்டலர்மனத்திற்செல்லும்
மொய்விசும்போடமாகத்தேவரின்முனிவர்போனார். (௬௧)

வேறு.

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமெல்லைதீர்நகர்
மறுவறுமாக்களுமகளிர்வெள்ளமும்
செறிதிரைக்கங்கைபின்கிடக்கச்சென்றவே. (௪௨)

சுழித்துநீர்வருதுறையாற்றைச்சூழ்படை
கழித்துநீங்கியதெனக்கள்ளவாசையை
அழித்துவேறவுணிபண்டாண்டவேந்தனை
இழித்துமேலேறினான்றானுமேறினான். (௪௩)

தன்னனதம்பியுந்தாயர்மூவரும்
சொன்னதேர்வலவனுந்தூயதோழனும்
துன்னினரேறலுந்துழாதுடுப்பெனும்
நன்னயக்காலினடத்தன்மேயினான். (௪௪)

வேறு.

சுற்றத்தார்தேவரொடுந்தொழநின்றகோசலையைத்தொழுதுநோக்கிக்
கொற்றத்தார்க்குரிசிலிவராரென்றுகுகன்வினவக்கோக்கள்வைகும்
முற்றத்தான்முதற்றேவிமூன்றுலகுமீன்றானைமுன்னீன்றானைப்
பெற்றத்தாற்பெரு செல்வம்யான்பிறத்தலாற்றுறந்தபெரியாளென்றான். ()

என்றலுமேயடியின்மிசைநெடிதுவீழ்ந்தழுவானையிவன்யாரென்று
கன்றுபிரிகாரா[illegible]றுயருடையகொடிவினவக்கழற்கான்மைந்தன்
இன்றுணைவனிராகவனுக்கிலக்குவற்குமிளையவற்குமெனக்குமூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட்குகனென்பானிந்நின்றகுரிசிலென்றான். (௪௬)

நைவீரலீர்மைந்தீரினித்துயராறுடிறந்துகாடுநோக்கி
மெய்வீரர்பெயர்ந்ததுவுநலமாயிற்றுமன்றேவிலங்கற்றிண்டோள்
கைவீரக்களிறனையகாளையிவன்றன்னோடுங்கலந்துநீர்கள்
ஐவீருமொருவீராயகலிடத்தைநெடுங்காலமளித்திரென்றாள். (௪௭)

அறந்தானேயென்கின்றவயனின்றானைநோக்கியையவன்பின்
சிறந்தானையுரையென்னநெறிதிறம்பாத்தன்மெய்யைநிற்பதாக்கி
இறந்தான்றன்னிளந்தேவியாவர்க்குந்தொழுகுலமாமிராமன்பின்பு
பிறந்தானுமுளனென்னப்பிரியாதான்றனைப்பயந்தபெரியாளென்றான். ௪௮

சுடுமயானத்திடைதன்றுணையேகத்தோன்றறுயர்க்கடலினேகக்
கடுமையார்கானகத்துக்கருணையார்கலியேகக்கழற்கான்மாயன்
நெடுமையாலன்றளந்தவுலகெல்லாந்தன்மனத்தேநினைந்துசெய்யும்
கொடுமையாலளந்தானையாரிவரென்றுரையென்னக்குரிசில்கூறும். (௪௯)

படரெலாம்படைத்தாளைப்பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்பாழ்த்தபாவிக்
குடரிலேநெடுங்காலங்கிடந்தேற்குமுயிர்ப்பாரங்குறைந்ததேய
உடரெலாமுயிரிலாவெனத்தோன்றுமுலகத்தேயொருத்தியன்றே
இடரிலாமுகத்தாளையறிந்திலையேலிந்நின்றாளென்னையீன்றாள். (எ0

வேறு.

என்னக்கேட்டவ்விரக்கமிலாளையும்
தன்னற்கையின்வணங்கினன்றாயென
அன்னப்பேடைசிறையிலதாய்க்கரை
துன்னிற்றென்னவும்வந்ததுதோணியே. (எக)

இழிந்ததாயர்சிவிகையினேறத்தான்
பொழிந்தகண்ணிற்புதுப்புனற்போயினான்
ஒழிந்திலன்குகனும்முடனேகினான்
கழிந்தனன்பலகாவதங்காலினே. (எஉ)

பரத்தினீங்கும்பரத்துவனென்னும்பேர்
வரத்தின்மிக்குயர்மாதவன்வைகிடம்
அருத்திகூறவணுகினனண்டவன்
விருத்திவேதியரோடெதிர்மேவினான். (எங)

(கக-வது. குகப்படலம்முற்றிற்று. ஆக திருவிருத்தம்-கஎக.)

## கஉ-வது. கிளைகண்டுநீங்குபடலம்.

வந்தமாதவத்தோனையம்மைந்தனும்
தந்தையாமெனத்தாழ்ந்துவணங்கினான்
இந்துமோலியன்னானுமிரங்கினான்
அந்தமில்குணத்தாசிகள்கூறினான். (க)

எடுத்தமாமுடிசூடிநின்பாலியைந்
தடுத்தபேரரசாண்டிலையையநீ
முடித்தவார்சடைக்கற்றையைமூசுதூ
சுடுத்துநண்ணுதற்குற்றுளதியாதென்றான். (உ)

சினக்கொடுந்திறற்சீற்றவெந்தீயினான்
மனக்கடுப்பினன்மாதவத்தோங்கலை
எனக்கடுத்ததியம்பிலைநீயென்றான்
உனக்கடுத்ததுமன்றரவோவென்றான். (ங)

மறையின்கேள்வற்குமன்னிளந்தோன்றல்பின்
முறையினீங்கிமுழுநிலங்கொள்கிலேன்
இறைவன்காக்கிலனுமெனில்யாண்டெலாம்
உறைவென்கானத்தொருங்குடனேயென்றான். (௪)

உரைத்தவாசகங்கேட்டலுமுள்ளெழூந்
திரைத்தகாதலிருந்தவத்தோர்க்கெலாம்
குரைத்தமேனியொடுள்ளங்குளிர்ந்ததால்
அரைத்தசாந்துகொடப்பியதென்னவே. (௫)

ஆயகாதலொடையனைக்கொண்டுதன்
தூயசாலையுறைவிடந்துன்னினான்
மேயசேனைக்கமைப்பென்விருந்தெனத்
தீயினாவுதிசெங்கையினீக்கினான். (௬)

துறந்தசெல்வனினையத் துறக்கர்தான்
பறந்துவந்துபடிந்தபல்சனர்
பிறந்துவேறொருலகுபெற்றாரென
மறந்துவைகினர்முன்னைத்தம்வாழ்வெலாம். (௭)

நந்தலில்லறநந்தினராமென
அந்தரத்தினரம்பையரன்பினர்
வந்துவந்தெதிரேத்தினர்மைந்தரை
இந்துவிற்சுடர்கோயில்கொண்டேகினார். (௮)

நாணநன்குளைத்தார்நளிர்வானிடை
ஆனகங்கையரும்புனலாட்டினார்
தானமாமணிக்கற்பகந்தாங்கிய
ஊனமின்மலராடையுடுத்தினார். (௯)

கொம்பினின்றுநுடங்குறுகொள்கையார்
செம்பொனின்கலாசிதிருத்தினார்
அம்பரத்தினரம்பையரன்பொடும்
உம்பர்கோனுகரின்னமிர் தூட்டினார். (௧௦)

அஞ்சடுத்தவமளியலத்தகப்
பஞ்சடுத்தபரிபுரப்பல்லவ
நஞ்சடுத்தநயனியர்நவ்வியில்
துஞ்சவத்தனைமைந்தருந்துஞ்சினார். (௧௧)

ஏந்துசெல்வத்திமையவராமெனக்
கூந்தறெய்வமகளிர்கொண்டாடினார்
வேந்தராதிசிவிகையின்வீங்குதோள்
மாந்தர்க்காறும்வரிசைவழாமலே. (௧௨)

மாதர்யாவரும்வானவர்தேவியர்
கோதில்செல்வத்துவைகினர்கொவ்வைவாய்த்
தீதில்செல்வமடந்தையர்சேடியர்
தாதிமாரெனத்தம்பணிகேட்பவே. (௧௩)

நந்தநந்தவனங்களினுண்மலர்
கந்தமூந்தியகற்பகக்காவினின்
றந்தர்வந்தெனவந்திதன்கைதர
மந்தமந்தமணந்ததுவாடையே. (௧௪)

மான்றளிக்குலநன்மதம்வந்துணத்
தேன்றளிர்த்தகவளமுஞ்செங்கதிர்
கான்றநெற்றழைக்கற்றையுங்கற்பகம்
ஈன்றளிக்கநுகர்ந்தனயானையே. (௧௫)

நரகதர்க்கசறநல்குநலத்தநீர்
கரகதக்கரிகாணிமிர்த்துண்டன
மரகதத்தின்கொழுந்தெனவார்ந்தபுல்
குரகதத்தின்குழாங்களுங்கொண்டவே. (௧௬)

இன்னரின்னணம்யாவருமிந்திரன்
துன்னுபோகங்கடுய்த்தனர்தோன்றமுன்
அன்னகாயுங்கிழங்குமுண்டப்பகல்
பொன்னின்மேனிபொடியுறப்போக்கினான். (௧௭)

நீலவல்விருணீங்கலுநீங்குமம்
மூலமில்கனவிற்றிருமுற்றுற
ஏலுநல்வினைதுய்ப் பவர்க்கீறுசெம்
காலமென்னக்கதிரவன்றோன்றினான். (௧௮)

ஆறிநின்றறமாற்றலர்வாழ்வெனப்
பாறிவீய்ந்ததுசெல்வம்பரிந்திலர்
தேறிமூந்தைத்தஞ்சிந்தையராயினா
மாறிவந்துபிறந்தன்னமாட்சியார். (௧௯)

வேறு.

காலையென்றெழுந்தது கண்டுவானவர்
வேலையன்றனிகமேயெனறுவிம்மறச்
சோலையுங்கிரிகளுஞ்சுண்ணமாயெழப்
பாலைசென்றடைந்தது பரதனசேனையே. (௨௰)

எழுந்தது துகளதின்னெரியும்வெய்யவன்
அழுந்தினனவிப்பரும்வெம்மையாறினான்
யொழிந்தனகரிமதம்பொடிவெங்கானகம்
இழிந்தனவடிநடந்தேருணாமையே. (௨௧)

வடியுடையயிற்படைமன்னர்வெண்குடை
செடியுடைநெடுநிழல்செய்ததீப்பொதி
படியுடைப்பரலுறைப்பாலைமேலுயர்
கொடியுடைப்பந்தரிற்குளிர்ந்ததெங்குமே. (௨௨)

பெருகியசெல்வநீபிடியென்றாள்வயின்
திருகியசீற்றத்தாற்செம்மையாய்நிறம்
கருகியவண்ணலைக்கண்டுகாதலின்
உருகியதளிர்த்தனவுலவையீட்டமே. (௨௩)

வன்றெறுபாலையைமருதமாமெனச்
சென்றது சித்திரகூடஞ்சேர்ந்ததால்
ஒன்றுரைத்துயிரினுமொழுக்கநன்றெனப்
பொன்றியபுரவலனபொருவில்சேனையே. (௨௪)

தூளியின்படலையுந்துரகந்தேரொடு
மூளிருஞ்சினக்கரிமுழங்குமோதையும்
ஆளிருங்குழுவினாரவாரமும்
கோளிரும்படையிதென்றுணரக்கூறவே. (௨௫)

எழுந்தனனிளையவனேறினானிலம்
கொழுந்துயர்ந்தனையதோர்நெடியகுன்றின்மேல்
செழுந்திரைப்பரவையைச்சிறுமைபேசிய
கழுந்துடைவரிசிலைக்கடலைநோக்கினான். (௨௬)

பரதனிப்படைகொடுபோர்கொண்டாண்மறம்
கருதியுள்கிடந்ததோர்கறுவுகாதலால்
விரதமுற்றிருந்தவன்மேல்வந்தானிது
சரதமற்றிலதெனத்தழங்குசீற்றத்தான். (௨௭)

குதித்தனன்பாரிடைக்குவடுநீறெழ
மிதித்தனனிராமனைவிரைவினெய்தினான்
மதித்திலன்பரதனின்மேல்வந்தான்மதிள்
பதிப்பெருஞ்சேனையின்பரப்பினானென்றான். (உஅ)

கட்டினன்சுரிகையுங்கழலும்பல்கணைப்
புட்டிலும்பொறுத்தனன்கவசம்பூட்டமைத்
திட்டனனெடுத்தனன்வரிவிலேந்தலைத்
தொட்டடிவணங்கினின்றினையசொல்லினான். (உகூ)

இருமையுமிழந்தவப்பரதனேந்துதோள்
பருமையுமன்னவன்படைத்தசேனையின்
பெருமையுநின்னொருபின்புவந்தவென்
ஒருமையுங்கண்டினியுவத்தியுள்ளநீ. (௩0)

படரெலாம்படப்படும்பருமயானையின்
திடரெலாமுருட்டினதேருமீர்த்தன
குடரெலாந்திரைத்தனகுருதியாறுகள்
கடரெலாமடுப்பனபலவுங்காண்டியால். (௩க)

கருவியுங்கைகளுங்கவசமார்பமும்
உருவினவுயிரினோடுதிரந்தோய்வில
திரிவனசுடர்க்கணைதிசைக்கையானைகள்
வெருவரச்செய்வனகாண்டிவீரநீ. (௩உ)

கோடகத்தேர்படுகுதிரைதாவிய
ஆடகத்தட்டிடையலகையற்றுகு
கேடகத்தடக்கைகள்கவவிக்கீதத்தின்
நாடகநடிப்பனகாண்டிநாதநீ. (௩௩)

பண்முதிர்களிற்றொடுபரதன்சேனையின்
எண்முதலறுத்துநானிமைப்பினீக்கலால்
விண்முழுதுளுக்கவும்வேலையாடையின்
மண்முழுதுகாற்றவுங்காண்டிவள்ளனீ. (௩ச)

நிவந்தவான்குருதியினீத்தநீந்திமெய்
சிவந்தசாதகரொடுசிறுகட்கூளியும்
கவந்தமுமுலகநின்கையதாயதென்
றுவந்தனகுனிப்பனகாண்டியும்பர்போல். (௩௫)

சூழிவெங்கடகரிதுரகராசிகள்
பாழிவன்புயத்திகல்வயவர்பட்டற
வீழிவெங்குருதியாலலைந்தவேலைகள்
ஏழுமொன்றாகிநின்றிரைப்பக்காண்டியால். (௩௬)

ஆளரவலங்குதேரழியவாடவர்
வாளறவரிசிலைதுணியமாக்கரி
தாளறத்தலையறப்புரவிதாளொடும்
தோளறவடிக்கணைதொடுப்பக்காண்டியால். (௩௭)

தழைத்தவான்சிறையனதசையுங்கவவின
அழைத்தவான்பறவைகளலங்குபொன்வடிம்
பிழைத்தவான்பகழிபுக்கிருவர்மார்பிடைப்
புழைத்தவானபெருவழிபோகக்காண்டியால். (௩௮)

ஒருமகள்காதலினுலகைநோய்செய்த
பெருமகனேவலிற்பரதன்றான்பெறும்
இருநிலமாள்கைவிட்டின்றெனேவலால்
அருநரகாள்வதுகாண்டியாழியாய். (௩௯)

வையகந்துறந்துவந்தடவிவைகுதல்
எய்தியதுனக்கெனநின்னையீன்றவள்
நைதல்கண்டுவெந்தவணவையினோங்கிய
கைகயன்மகள்விழுந்தரற்றக்காண்டியால். (௪0)

அரஞ்சுடவழனிமிரலங்கல்வேலினாய்
விரஞ்சொருநொடியிலிவ்வனிகவேலையை
உரஞ்சுடுவடிக்கணையொன்றில்வென்றுமுப்
புரஞ்சுடுமொருவனிற்பொலிவன்யானென்றான். (௪௧)

இலக்குவவுலகமோரேழுமேழுநீ
கலக்குவனென்பதுகருதினாலது
விலக்குவதரிதுவிளம்பல்வேண்டுமோ
புலக்குரித்தொருபொருள்புகலக்கேட்டியால். (௪௨)

நங்குலத்துதித்தவர்நவையுணங்கினர்
எங்குலப்புறுவர்களெண்ணில்யாவரே
தங்குலத்தொருவருந்தருமநீங்கினர்
பொங்குலத்திரளொடும்பொருததோளினாய். (௪௩)

எனைத்துளமறையவையியம்பற்பாலன
பனைத்திரள்கரக்கரிப்பரதன்செய்கையே
அனைத்திறமல்லனவல்லவன்னது
நினைத்திலையென்வயினேயநெஞ்சினால். (௪௪)

பெருமகனென்வயிற்பிறந்தகாதலின்
வருமெனநினைகையுமண்ணையென்வயின்
தருமெனநினைகையுந்தவிரத்தானையால்
பொருமெனநினைகையும்புலமைப்பாலதோ (௪௫)

பொன்றெடும்பொறுகழற்பரதன்போந்தனன்
நன்னெடும்பெரும்படைநல்கலன்றியே
என்றெடும்பொறுமெனவியம்பற்பாலதோ
மின்றெடும்பொருவுறவிளங்கும்வேலினாய். (௪௬)

சேணுயர்தருமத்தின்றேவைச்செம்மையின்
ஆணியையன்னதுநினைக்கலாகுமே
பூணியன்மொய்ம்பினாய்போந்ததீண்டெனைக்
காணியநீயிதுபின்னுங்காண்டியால். (௪௭)

என்றனனிளவலைநோக்கியேந்தலும்
நின்றனன்பரதனுநிமிர்ந்தசேனையைப்
பின்றருகென்றுதன்பிரிவில்காதலில்
தன்றுணைத்தம்பியுந்தானுமுந்தினான். (௪௮)

தொழுதுயர்கையினன்றுவண்டமேனியன்
அழுதழிகண்ணினனவலமீதென
எழுதியபடிவமொத்தெய்துவான்றனை
முழுதுணர்சிந்தையான்முடியநோக்கினான். (௪௯)

கார்ப்பொருமேனியக்கண்ணன்காட்டினான்
ஆர்ப்புருவரிசிலையிளையவையநீ
தேர்ப்பெருந்தானையால்பரதன்சீறிய
போர்ப்பெருங்கோலத்தைப்பொருந்தநோக்கெனா. (௫0)

எல்லொடுங்கியமுகத்திளவனின்றனன்
மல்லொடுங்கியபுயத்தவனைவைதெழும்
சொல்லொடுஞ்சினத்தொடுமுணர்வுசோர்தர
வில்லொடுங்கண்ணணீர்நிலத்துவீழவே. (௫௧)

கோதறத்தவஞ்செய்துகுறிப்பினெய்திய
நாதனைப்பிரிந்தனலத்துங்கினாள்
வேதனைத்திருமகண்மெலிகின்றாள்விடு
தூதெனப்பரதனுந்தொழுதுதோன்றினான். (௫௨)

அறந்தனைநினைந்திலையருளைநீத்தனை
துறந்தனைமுறைமையையென்னுஞ்சொல்லினான்
மறந்தனன்மலரடிவந்துவீழ்ந்தனன்
இறந்தனன்றாதையையெதிர்கண்டென்னவே. (௫௩)

உண்டுகொலுயிரெனவொடுங்கினானருக்
கண்டனின்றனன்கண்ணன்கண்ணெனும்
புண்டரீகம்பொழிபுனலவன்சடா
மண்டலநிறைந்துபோய்வழிந்துசோரவே. (௫௪)

அயாவுயிர்த்தழுகணீரருவிமார்பிடை
உயாவுறத்திருவுளமுருகப்புல்லினான்
நியாயமத்தனைக்குமோர்நிலையமாகினான்
தயாமுதலறத்தினைத்தழுவியென்னவே. (௫௫)

புல்லினனின்றவன்புனைந்தவேடத்தைப்
பன்முறைநோக்கினான்பலவுமுன்னினான்
அல்லலிலழுங்கினையையவாளுடை
மல்லுயர்தோளினான்வலியனோவென்றான். (௫௬)

அரியவனுரைசெயப்பரதனையநின்
பிரிவெனும்பிணியினாலென்னைப்பெற்றவக்
கரியவள்வரமெனுங்காலனாறனக்
குரியமெய்ந்நிறுவிப்போயும்பரானென்றான். (௫௭)

விண்ணிடையடைந்தனனென்றவெய்யசொல்
புண்ணிடையயிலெனச்செவிபுகாமுனம்
கண்ணொடுமனஞ்சுழல்கறங்குபோலவாய்
மண்ணிடைவிழுந்தனன்வானினும்பரான். (௫௮)

இருநிலஞ்சேர்ந்தனனிறையுயிர்த்திலன்
உருமினையரவெனவுணர்வினீங்கினான்
அருமையினுயிர்வரவயர்வுயிர்த்தகம்
பொருமினன்பன்முறைபுலம்பினானரோ. (௫௯)

வேறு

நந்தாவிளக்கனையநாயகனேநானிலத்தோர்
தந்தாய்தனியறத்தின்றாயேதயாநிலையே
எந்தாயிகல்வேந்தரேறேயிறந்தனையே
அந்தோவினிவாய்மைக்காருளரோமற்றென்றான். (௬0)

சொற்பெற்றநோன்பின்றுறையோனருள்வேண்டி
நற்பெறறவேள்விநவைநீங்கநீயற்றி
எற்பெற்றாநீபெற்றதுன்னுயிர்போய்நீங்கலோ
கொற்பெற்றவெற்றிக்கொலைபெற்றகூர்வேலோய் (௬௧)

மன்னுயிர்க்குநல்குரிமைமண்பாரநான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந்தாரோய்பொறையுயிர்த்தவாறிதுவோ
உன்னுயிர்க்குங்கூற்றாயுலகாளவுற்றேனே
மின்னுயிர்க்குந்தீவாய்வெயிலுயிர்க்கும்வெள்வேலோய் (௬௨)

என்பரதததாக்கியரசுரிமையிந்தியங்கள்
வெம்பவத்தின்வீயத்தவம்விளைத்தவாறிதுவோ
சம்பரப்பேர்த்தானவனைத்தள்ளிச்சதமகன்றன்
அம்பரத்தினீங்காவரசளித்தவாழியாய். (௬௩)

வேண்டுதிறத்தாரும்வேண்டாவரசாட்சி
பூண்டிவ்வுலகுக்கிடர்கொடுத்தபுல்லனேன்
மாண்டுமுடிவதல்லான்மாயாவுடம்பிதுகொண்
டாண்டுவருவதினியார்முகத்தேநோக்கவோ. (௬௪)

தேனடைந்தசோலைத்திருநாடுகைவிட்டுக்
கானடைந்தேனென்னத்தரியாதுகாவலநீ
வானடைந்தாயின்னமிருந்தேனான்வாழ்வுகந்தே
ஊனடைந்ததெவ்வருயிரடைந்தவொள்வேலோய். (௬௫)

வண்மைஇயுமானமுமேல்வானவர்க்கும்போர்க்கிலாத்
திண்மைஇயுஞ்செங்கோனெறியுந்திறம்பாத
உண்மைஇயுமெல்லாமுடனேகொண்டேகினையே
தண்மைஇதகைமதிக்குமீந்ததனிக்குடையோய். (௬௬)

என்றெடுத்துப்பற்பலவும்பன்னியிடருழக்கும்
குன்றெடுத்தவொக்குங்குவவுத்தோட்கோளரியை
வன்றடக்கைத்தம்பியருமற்றுள்ளமன்னவரும்
சென்றெடுத்துத்தாங்கினார்மாவசிட்டன்றேற்றினான். (௬௭)

பன்னரியநோன்பின்பரத்துவனேயாதியாம்
பின்னுசடையோரும்பேருலகமோரேழின்
மன்னவருமந்திரியரெல்லாரும்வந்தடைந்தார்
தன்னுரிமைச்சேனைத்தலைவோருந்தாமடைந்தார். (௬௮)

மற்றும்வரற்பாலரெல்லாரும்வந்தடைந்தார்
சுற்றுமிருந்தவமைதியினிற்றுன்புழக்கும்
கொற்றக்குரிசின்முகநோக்கிக்கோமலரோன்
பெற்றபெருமைத்தவமுனிவன்பேசுவான். (௬௯)

வேறு.

துறத்தலுநல்லறத்துறையுமல்லது
புறத்தொருதுணையிலைப்பொருந்துமன்னுயிர்க்
கிறத்தலும்பிறத்தலுமியற்கையென்பதை
மறத்தியோமறைகளின்வரம்புகண்டநீ. (௭௰)

உண்மையில்பிறவிகளுலப்பலகோடிகள்
தண்மையில்வெம்மையிற்றழுவினவ்வெனும்
வண்மையைநோக்கியவரியகூற்றின்பால்
கண்மையுமுளதெனக்கருதலாகுமோ. (௭௧)

பெறுவதன்முன்னுயிர்பிரிதல்காண்டியால்
மறுவறுகற்பினில்வையம்யாவையும்
அறுவதினாயிரமாண்டுமாண்டவன்
இறுவதுகண்டவற்கிரங்கல்வேண்டுமோ. (௭௨)

சீலமுந்தருமமுஞ்சிதைவில்செய்கையும்
சூலமுந்திகிரியுஞ்சொல்லுந்தாங்கிய
மூலம்வந்துதவியமூவர்க்காயினும்
காலமென்றொருவலைகடக்கலாகுமோ. (௭௩)

கண்முதற்காட்சியகரையினீளத்த
உண்முதற்பொருட்கெலாமூற்றமாவன
மண்முதற்பூதங்கண்மாயுமென்றபோ
தெண்முதலுயிர்க்குநீயிரங்கல்வேண்டுமோ. (௭௪)

புண்ணியநறுநெயிற்பொருவில்காலமாம்
திண்ணியதிரியினில்விதியென்றீயினில்
எண்ணியவிளக்கவையிரண்டுமெஞ்சினால்
அண்ணலேயவிவதற்கையமாவதோ. (௭௫)

இவ்வுலகத்தினுமிடரினேனிடங்
தவ்வுலகத்தினுநரகினாழ்ந்துபின்
வெவ்வினைதுய்ப்பனவிரிந்தயோனிகள்
எவ்வளவிற்செலவெண்ணலாகுமே. (எசு)

உண்டுகொலிதுவலதுதவிநீசெய்வ
தெண்டகுகுணத்தினாய்தாதையென்றலால்
புண்டரீகத்தணிமுதற்கும்போக்கரு
விண்டுவினுலகிடைவிளங்கினாரோ. (எஎ)

அய்யநீயாதொன்றுமவலிப்பாயலை
உய்திறமவற்கினியுதனினூங்குண்டோ
செய்வனவரன்முறைதிருத்திச்சேந்தநின்
கய்யினாலொழுக்குதிகடனெலாமென்றான். (எஅ)

விண்ணுநீமொக்குளின்விளியும்யாக்கையை
எண்ணிநீயழுங்குதலிழுதைப்பாலதால்
கண்ணினீருகுத்தலிற்கண்டதில்லைபோய்
மண்ணுநீருகுத்திதாமரைக்கையாலென்றான். (எகூ)

என்றபின்னேர்தலையேந்திவேந்தரும்
பொன்றிணிந்தனசடைப்புனிதரோடும்போய்ச்
சென்றனர்செறிதிரைப்புனலிற்செய்கென
நின்றனரிராமனுநெறியைநோக்கினான். (அ0)

புக்கனன்புனலினின்முழுகிப்போந்தனன்
தக்கநன்மறையவன்சடங்குகாட்டத்தான்
முக்கையினீர்விதிமுறையினீந்தனன்
ஒக்கநின்றுயிர்தொறுமுணர்வுநல்குவான். (அக)

ஆனவன்பிறவுளயாவுமாற்றிப்பின்
மானமந்திரத்தவர்மன்னர்மாதவர்
ஏனையர்பிறர்களுஞ்சுற்றவேகினன்
சானகியிருந்தவச்சாலையெய்தினான். (அஉ)

எய்தியவேலையிற்றரியளெய்திய
தய்யலைநோக்கினன்சாலைநோக்கினான்
கய்களில்கண்மலர்புடைத்துக்கான்மிசை
அய்யனப்பரதன்வீழ்ந்தரற்றினானரோ, (அங)

வெந்துயர்தொடர்தரவிம்மல்விம்மநீர்
உந்தியநிரந்தரமூற்றுமாற்றில
சிந்தியகுரிசிலச்செம்மல்சேர்ந்தகண்
இந்தியங்களிலெறியகடலுண்டென்னவே. (அச)

அந்நெடுந்துயருறுமரியவீரனைத்
தன்னெடுந்தடக்கையாலிராமன்றாங்கினான்
நன்னெடுங்கூந்தலைநோக்கிநாயகன்
என்னெடும்பிரிவினிலிறந்திட்டானென்றான். (அரு)

துண்ணெனுநெஞ்சினாடுளங்கினாடுணைக்
கண்ணெனுங்கடனெடுங்கலுழிகான்றிட
மண்ணெனுஞ்செவிலிமேல்வைத்தகையினாள்
பண்ணெனுங்கிளவியாற்பன்னியேங்கினாள். (அசா)

கன்னகுதிரள்புயக்கணவன்பின்செல
நன்னகரொத்ததுநடந்தகானமும்
மன்னவன்றுஞ்சினனென்றமாற்றத்தால்
அன்னமுந்துயர்க்கடலடிவைத்தாளரோ. (அஎ)

ஆயவடன்னைநேர்ந்தங்கையேந்தினர்
தாயரின்முனிவர்தந்தருமப்பன்னியர்
தூயநீராட்டினர்துயரநீக்கினர்
நாயகற்சேர்த்தினர்நவையுணீங்கினார். (அஅ)

தேன்றருந்தெரியலச்செம்மனால்வரை
ஈன்றவர்மூவரோடிருமைநோக்குறும்
சான்றவர்குழாத்தொடுந்தருமநோக்குறும்
தோன்றல்பாற்சுமந்திரன்றொழுதுதோன்றினான். (அகூ)

வேறு.

எந்தையாண்டையானியம்புவீரென
வந்ததாயர்தம்வயங்குசேவடி
சிந்திநின்றனன்சேர்ந்தகண்ணநீர்
முந்தைநான்முகத்தவற்குமுந்தையான். (கூ0)

தாயருந்தலைப்பெய்துதாந்தழீஇ
ஓய்விலன்பினாலுறவோங்கினார்
ஆயசேனையுமணங்கனார்களும்
தீயில்வீழ்ந்துதீமெழுகிறேம்பினார். (கூக)

பின்னவ்வீரரைப்பெற்றபெற்றியப்
பொன்னனார்களுஞ்சங்கன்பூவைபையத்
துன்னிமார்புறத்தொடர்ந்துபுல்லினார்
இன்னல்வேலைபுக்கிழிந்தழுந்துவார். (கூஉ)

சேனைவீரருந்திருநன்மாநகர்
மானைமாந்தருமற்றுளோர்களும்
ஏனைவேந்தரும்பிறரும்யாவரும்
கோனையெய்தினார்குறையுஞ்சிந்தையார். (கூஙு)

படஞ்செயநாகணைப்பள்ளிநீங்கினான்
இடஞ்செய்தொல்குலத்திறைவனாதலால்
தடஞ்செய்தேரினின்றானுநீரினால்
கடஞ்செய்வானெனக்கடலின்மூழ்கினான். (கூச)

அன்றுதீர்ந்தபின்னரசவேலையும்
துன்றுசெஞ்சடைத்தவருஞ்சுற்றமும்
தன்றுணைத்திருத்தம்பிமார்களும்
சென்றுசூழவாண்டிருந்தசெம்மலுன். (கூரு)

வரதன்றுஞ்சினான்வையமாணையால்
சரதநின்னதேமகுடந்தாங்கலாய்
விரதவேடநீயென்கொல்வேண்டுவான்
பரதகூறெனாப்பரிந்துகூறினான். (கூசா)

என்றலும்பதைத்தெழுந்துகைதொழா
நின்றுதோன்றலைநெடிதுநோக்கிநீ
அன்றியாவரேயறத்துளோரதர்
பின்றுவாய்கொலாமென்னப்பேசுவான். (கூஎ)

மனக்கொன்றுதனவரத்தினின்னையும்
நினக்கொன்றுநிலைநிறுவிநேமியான்
தனக்கொன்றுடருந்தனையனாதலால்
எனக்கொன்றுதவமடுப்பதெண்ணினால். (கூஅ)

நோவதாகவிவ்வுலகைநோய்செய்த
பாவகாரியிற்பிறந்தபாவியேன்
சாவதோர்கிலேன்றவஞ்செய்வேனலேன்
யாவனாகியிப்பழிநின்றேறுவேன். (கூகூ)

நிறையினீங்கியமகளிர்நீர்மையும்
பொறையினீங்கியதவமும்பொங்கருள்
துறையினீங்கியவறமுந்தொல்லையோர்
முறையினீங்கியவரசின்முந்துமோ. (௧௦௦)

பிறந்துநீயுடைப்பிரிவிற்றால்பதம்
துறந்தமாதவந்தொடங்குவாயென்றால்
மறந்துநீதியிற்றிறம்பிவாளிற்சொன்
றறந்தின்றலெனவரசதாள்வென்றோ. (௧௦௧)

தொகையிலன்பினாலிறைவன்றுஞ்சநீ
புகையும்வெஞ்சுரம்புகுதப்புந்தியால்
வகையில்வஞ்சனையரசுவெளவயான்
பகைவனேகொலாமிறவுபார்க்கின்றேன். (௧௦௨)

உந்தைதீமையுமுலகுறுதநோய்
தந்ததீவினைத்தாய்செய்தீமையும்
எந்தைநீங்கமீண்டரசுசெய்கெனச்
சிந்தையாவதுந்தெரியக்கூறினான். (௧௦௩)

சொற்றவாசகத்துணிவுணர்ந்தபின்
இற்றதோவிவன்மனமென்றெண்ணுவான்
வெற்றிவீரயான்விளம்பக்கேளென
முற்றநோக்கினான்மொழிதன்மேயினான். (௧௦௪)

முறையும்வாய்மையுமுயலுநீதியும்
அறையுமேன்மையோடறனுமாதியாம்
துறையுள்யாவையுஞ்சுருதிநூல்விடா
இறைவரேவலாலியைவகாணையா. (௧௦௫)

பரவுகேள்வியும்பழுதினஞானமும்
விரவுசீலமும்வினையின்மேன்மையும்
உரவிலோய்தொழற்குரியதேவரும்
குரவரேயெனப்பெரிதுகோடியால். (௧௦௬)

அந்தகற்பெருங்குரவராரெனச்
சிந்தைதேர்வுறத்தெரியநோக்கினால்
தந்தைதாயரென்றிவர்கடாமலால்
எந்தைகூறவேறெவருமில்லையால். (௧௦௭)

தாய்வரங்கொளத்தந்தையேவலால்
மேயநங்குலத்தருமமேவினேன்
நீய்வரங்கொளத்தவிர்தனீர்மையோ
ஆய்வ்ரும்புலத்தறிவுமேவினுய். (கoஅ)

தனையராயினுர்தந்தைதாயரை
வினையினல்லதோரிசையைவேய்தலோ
நினையலோவிடாநெடியவன்பழி
புனைதலோவையபுதல்வராதருன். (கoகூ)

இம்மைபொய்யுரைத்திவறியெந்தையார்
அம்மைவெம்மைசேர்நரகமாளயான்
கொம்மைவெம்முலைக்குவையின்வைகிவாழ்
செம்மைசேர்நிலத்தரசுசெய்வெனே. (ககo)

வரனினுந்தைசொன்மரபினுலுடைத்
தரணிநின்னதென்றியைந்ததன்மையால்
உரனினீபிறந்துரிமையாதலால்
அரசுநின்னதேயாள்கவென்னவே. (ககக)

முன்னர்வந்துதித்துலகமூன்றினும்
நின்னையொப்பிலாநீபிறந்தபார்
என்னதாகில்யானின்றுதந்தனென்
மன்னபோந்துநீமகுடஞ்சூடெனு. (ககஉ)

மலங்கிவையகம்வருந்துவைகனீ
உலங்கொடோளுனக்குறுவசெய்தியோ
கலங்குருவணங்காத்திபோந்தெனுப்
பொலங்குலாவுதாள்பூண்டுவேண்டினுன். (ககங)

பசைந்தசிந்தைநீபரிவின்வையமென்
வசஞ்செய்தாலதுமுறைமையோவசைக்
கசைந்தவெந்தையாரருளவன்றுநான்
இசைந்தவாண்டெலாமின்றுடேறுமோ. (ககச)

வாய்மையென்னுமீதன்றிவையகம்
தூய்மையென்றுமொன்றுண்மைசொல்லுமோ
தீய்மைதானதிற்றீர்தலன்றியே
ஆய்மெய்யாகவேறறையலாவதே. (ககரு)

எந்தையேயவவாண்டேழொடேழுறு
வந்தகாலநான்வனத்துள்வைகநீ
தந்தபாரகந்தன்னைமெய்மையால்
அந்தநாளெலாமாளென்றுணையால்.

வேறு.

மன்னவனிருக்கவேயுமணியணிமகுடஞ்சூடு
கென்னயானியைந்ததன்றேனைய துமறுக்கவஞ்சி
அன்னதுநிளைந்துநீயென்றுணையைமறுக்கலாமோ
சொன்னதுசெய்தியைய துயருழந்தயரலென்றான். (கக௭)

ஒள்ளியோனினையவெல்லாமுரைத்தலுமுரைக்கலுற்ற
பள்ளநீர்வெள்ளமன்னபரதனைவிலக்கிப்பண்டு
தெள்ளியகுலத்தோர்செய்கைசிக்கறச்சிந்தைநோக்கி
வள்ளியோய்கேட்டியென்றுவசிட்டமாமுனிவன்சொன்னான். (கக௮)

வேறு.

ஒளரகன்புனலுணின்றறியொர்கேழலாய்
இளையெனுந்திருவினையேந்தினனரோ
உளைவரும்பெருமையோரெயிற்றினுட்புரை
வளரிளம்பிறையிடைமறுவிற்றோன்றவே. (கக௯)

ஆதியவமைந்தபின்ருதியைம்பெரும்
பூதமும்வெளியொழித்தெவையும்புக்கபின்
காதனவ்வகன்புனனல்கிகண்ணருஞ்
சோதியாந்தன்மையிற்றுயிறன்மேயினான். (கஉ0)

ஏற்றவித்தன்மையினமரர்க்கின்னமு
தூற்றுடைக்கடல்வணனுந்தியுந்திய
நாற்றிதழ்க்கமலத்தினெய்தின்யாவையும்
தோற்றுவித்துதவிடமுதல்வன்றோன்றினான். (கஉக)

அன்றவனுலகினையளிக்கவாகிய
துன்றனிக்குலமுதலுள்ளவேந்தர்கள்
இன்றளவினுமுறையிகந்துளாரிலை
ஒன்றுளதுரையினமுணரக்கேட்டியால். (கஉஉ)

இதவியலியற்றியகுரவர்யாரினும்
மதவியல்களிற்றிறைய்மறுவில்விஞ்சைகள்
பதவியுவிருமையும்பயக்கப்பண்பினால்
உதவியவொருவனேயுயருமென்பரால். (கஉ௩)

என்றலால்யானுனையெடுத்துவிஞ்சைகள்
ஒன்றலாதனபலவுதவிற்றுண்மையால்
அன்றெனுதின்றெனதாணையையநீ
நன்றுபோந்தளியுனக்குரியநாடென்ருன். (கஉச)

கூறியமுனிவனைக்குவிந்ததாமரை
சீறியகைகளாத்தொழுதுசெங்கணுன்
ஆறியசிந்தனையறிஞவொன்றுரை
கூறுவதுளதெனக்கூறன்மேயினுன். (கஉரு)

சான்றவராகதன்குரவராகதாய்
போன்றவராகமெய்ப்புதல்வராகதான்
தேன்றருமலருளான்சிறுவசெய்வெனென்
றேன்றபின்னவ்வுரைமறுக்குமீட்டதோ. (கஉசு)

தாய்பணித்துவந்தனதந்தைசெய்கென
ஏயவெப்பொருள்களுமிறைஞ்சிமேற்கொளாத்
தீயவப்புலையனிற்செய்கைதேர்கிலா
நாயெனத்திரிவதுநல்லதல்லதோ. (கஉஎ)

முன்னுறப்பணித்தவர்மொழியையானென
சென்னியிற்கொண்டதுசெய்வனென்றதின்
பின்னுறப்பணித்தனைபெருமையோவெனக்
கென்னினிச்செய்வதையுரைசெயீங்கென்ருன். (கஉஅ)

முனிவனுமுரைப்பதோர்முறைமைகண்டிலம்
இனியெனவிருந்தனனிளையமைந்தனும்
அனையதேலாள்பவராள்கநாடுநான்
பனிபடர்காடுடன்படர்தன்மெய்யென்ருன். (கஉகூ)

அவவழியிமையவரறிந்துகூடினுர்
இவவழியிராமனையிவன்கொண்டேகுமேல்
செவ்வழித்தன்றுநஞ்செயலென்றெண்ணினுர்
கவ்வையர்விசும்பிடைக்கழறன்மேயினுர். (கஙO)

ஏத்தரும்பெருங்குணத்திராமனிவவழி
போத்தருந்தாதைசொற்புரக்கும்பூட்சியான்
ஆத்தவாண்டேழிரேண்டேழுமங்கிலம்
காத்தனுன்கடனிவைகடமையென்றனர். (கஙக)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

வானவருரைத்தலுமறுக்கற்பாலதன்
றியானுனையிரந்தனனினியென்றுணையால்
ஆனதோரமைதியினளித்திபாரெனாத்
தானவன்றுணைமலர்த்தடக்கைபற்றினான். (௧௱௨)

ஆமெனிலேழிரண்டாண்டிலையநீ
நாமநீர்நெடுநகர்நண்ணிநானிலம்
கோமுறைபுரிகிலையென்னிற்கூடெரிச்
சாமிதுசரதநின்றுணைசாற்றினேன். (௧௱௩)

என்பதுசொல்லியபரதன்யாதுமோர்
துன்பிலனவனதுதுணிவைநோக்கினான்
அன்பினனுருகினனன்னதாகென்றான்
தன்புகழ்தன்னினும்பெரியதன்மையான். (௧௱௪)

விம்மினன்பரதனும்வேறுசெய்வதொன்
றின்மையினரிதெனவெண்ணியேங்குவான்
செம்மையின்றிருவடித்தலந்தந்தீகென
எம்மையுந்தருவனவிரண்டுநல்கினான். (௧௱௫)

அடித்தலமிரண்டையுமழுதகண்ணினான்
முடித்தலமிவையெனமுறையிற்சூடினான்
படித்தலத்திறைஞ்சினன்பரதன்போயினான்
பொடித்தலமிலங்குறுபொலங்கொண்மேனியான். (௧௱௬)

ஈன்றவர்முதலியவெண்ணில்சுற்றமும்
சான்றவர்குழுவொடுதவத்துளோர்களும்
வான்றருசேனையுமற்றுஞ்சுற்றுற
மூன்றுநூல்கிடந்ததோண்முனியும்போயினான். (௧௱௭)

பண்டைநூறெரிபரத்துவனும்போயினான்
மண்டுநீர்நெடுநகர்மாந்தர்போயினார்
விண்டுறைதேவரும்விலகிப்போயினார்
கொண்டறன்றுணையாற்குகனும்போயினான். (௧௱௮)

பாதுகந்தலைக்கொடுபரதன்பைம்புனல்
மோதுகங்கையின்கரைகடந்துமுந்தினான்
போதுகுங்கடிபொழிலயோத்திபுக்கிலன்
ஒதுகங்குலினெடிதுறக்கநீங்கினான். (௧௱௯)

நந்தியம்பதியிடைநாதன்பாதுகம்
செந்தனிக்கோன்முறைசெலுத்தச்சிந்தையான்
இந்தியங்களையவித்திருந்தனன்மெயினான்
அந்தியும்பகலுநீராருந்தகண்ணினான் (௧௪௰)

குன்றினிலிருந்தனனென்னுங்கொள்கையான்
நின்றவர்நலிவரானேயத்தாலெனுத
தன்றுணைத்தம்பியுந்தானுந்தையலும்
தென்றிசைநெறியினைச்சேறன்மேயினான். (௧௪௧)

(௧௨-வது, கிளைகணடுநீங்குபடலம்முற்றிற்று. ஆக திருவிருத்தம்-௧௨.

(மேற்போனபாலகாண்டம் ௧-க்கு திருவிருத்தம் ௧௪௧௯.)

(ஆக காண்டம் ௨-க்கு படலம் ௩௫-க்கு திருவிருத்தம் ௨௬௩௧)

கம்பநாட்டாழ்வார் திருவடிகளேசரணம்.

# அயோத்தியாகாண்டம்

## முற்றிற்று

## படலாகராதி.


| பக்கம். | | |
|---|---|---|
| ௧௨௧ | ௧௰-வது | ஆற்றுப்படலம். |
| ௮௧ | ௬-வது | கங்கைப்படலம். |
| ௧௩௮ | ௧௨-வது | கிளைகண்டுநீங்குபடலம். |
| ௧௨௯ | ௧௧-வது | குகப்படலம். |
| ௨௬ | ௩-வது | கைகேசிசூழ்வினைப்படலம். |
| ௯௬ | ௮-வது | சித்திரகூடப்படலம். |
| ௭௰ | ௫-வது | தைலமாட்டுப்படலம். |
| ௪௰ | ௪-வது | நகர்நீங்குபடலம். |
| ௧௰௩ | ௯-வது | பள்ளியடைப்படலம். |
| ௧௫ | ௨-வது | மந்தரைசூழ்ச்சிப்படலம் |
| ௩ | ௧-வது | மந்திரப்படலம். |
| ௯௰ | ௭-வது | வனம்புகுபடலம். |